www.padippakam.com

செப்டம்பர் — 2000
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 5.00

# புதிய கலாச்சாரம்



# வீரப்பனியம்

## விடுதலையின் புதிய தத்துவம்

படிப்பகம்

www.padippakam.com

# வாசகர் கடிதம்




'தீவிரவாதம்' என்ற கருத்து பற்றிய ஆய்வு, அரசு — பத்திரிகை — சினிமா என்ற மூன்று கோயபல்சுகளின் வேடத்தையும் கலைத்துக் காண்பித்தது. மெக்காலே வளர்த்துவிட்ட தலையாட்டி பொம்மைகளுக்கு இடையிடையே கொடுக்கப்பட்ட சாட்டையடி வார்த்தைகள் உரைக்குமா? சுளீர் என உரைக்க வேண்டும் என்பதே நமது ஆசை!

வர்க்கம், சாதி பற்றிய சிக்கலில் கட்டுரை எடுத்துக்காட்டியது போல அவை ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து இயங்கும்போது வர்க்கக் குணமே எல்லா வற்றையும் இயக்குகின்றது என்பது தெளிவாகிறது. இதற்கு பாபு ஜெகஜீவன்ராம் முதல், நாளை எம்.பி. - அமைச்சர் கனவுடன் பண்ணையாரின் தளபதியாக உலா வரும் திருமாவளவன் வரை கண்கூடான உதாரணங்கள் ஏராளம்.

— வே.ரா. முத்துக்குமார், உத்தமபாளையாம்.

'பிணந்தின்னி வெளவால்கள்' பலரது சொந்த அனுபவமாகவே அமைந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. வட்டிக் கடைச் செட்டிக்குரிய தொழில் தர்மம்தான் வக்கீலுக்கும். நாளுக்குள் நாள் மருத்துவர்களின் தொழில் தர்மமும் அதை நோக்கியே வளர்ந்து வருகிறது.

ஆள்பவர்கள், அவர்களின் சித்தாந்தவாதிகள், அவர்களின் வலைப்பின்னல் பிரச்சார அமைப்புகளின் மூலம் 'யார் தீவிரவாதி' என்ற கருத்தை மக்கள் மனதில் தொடர்ந்து பதிக்கிறார்கள் என்பதை அருமையாக கட்டுரை விளக்குகிறது. எனினும் இதன் மறுபக்கத்தையும் காட்டியிருக்க வேண்டும். இக்கட்டுரையின் தொடர்ச்சியாக 'எது சமூக விரோதம்' என்பதை ஆள்பவர்களின் பொருளாதாரக் குற்றங்கள் - பிற கிரிமினல் குற்றங்கள் போன்றவற்றைத் தொகுத்துக்காட்டி அதை ஒழிப்பதில் தீவிரம் காட்டுவதுதான் சரியானது என்பதை எழுத வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

படிப்பவர்கள் அனைவரையும் தங்களுக்குள்ளும் குரோனியே இருப்பதை குத்திக் காட்டுவதாகக் கட்டுரை அமைந்திருப்பது அதன் வெற்றி. புறநிலை வாழ்க்கையில் இயங்கும் ஒரு மனிதனின் அகநிலைச் சிந்தனையை, அதன் தடுமாற்றத்தை, சமூகமறியாமல் தவறு செய்யும் மனநிலையைக் கண் முன் கொண்டு வந்து விடுகிறார் கட்டுரையாளர். தான் தவறு செய்வது சமூகத்திற்குத் தெரியக் கூடாது என்ற அச்சம், சமூகம் தன்னைப்பற்றி நம்பியிருக்கும் நற்பெயருக்கு கேடு வரக்கூடாது என்பதின் மறுபக்கம்தான். இரண்டுமே காரியவாத சுயநலம்தான். மொத்த சமூகத்தின் நலன் பற்றிய உணர்வுகள் நம்மில் நிரம்பி வழியும் போதே இத்தவறுகளைத் தடுக்க முடியும். தவறுகளை எதிர்த்த போராட்டத்தை வலிமை கொண்டதாக மாற்ற இதுபோன்ற கட்டுரைகள் வாசகர்களுக்கும், தோழர்களுக்கும் உதவும்.

— சிங்காரம், திருச்சி.

பொது வேலை நிறுத்தம், ஊர்வலம், ஆர்ப்பாட்டத்தினால் உற்பத்தி இழப்பு என வழக்கு போடப்பட்டு, நீதிமன்றமும் சில இடங்களில் தடை விதிக்கிறது. நாள் முழுவதும் உற்பத்தியை மட்டுமல்ல, உளவியலையும் பாதித்துவரும் கேபிள் டி.வி. தனியார் தொலைக்காட்சிகளை எதிர்த்து பொது நலன் கோரும் வழக்கு தொடுத்து, ஒரு நாளைக்கு 5 மணி நேரம் மட்டும் ஒளி பரப்ப வேண்டும் என்று கேட்டால் என்ன?

— நசீம் இக்மத், கோவை.

'ஏன்?' கவிதை சமூக அவல நிலைக்குப் பதில் சொல்லாமல் ஒரு மனிதன் இருக்க முடியுமா என்பதை சுயபரிசீலனை செய்யும் வண்ணம் உணர்த்துகிறது.

— வாசகர் வட்டம், சென்னை.

சென்ற இதழ் தலையங்கத்தின் முடிவில் ஏகாதிபத்திய முகாமில் நாளை வெடிக்கப்போகும் புரட்சிக்குச் சேமிப்பு சக்திகள் என்று அங்கு வேலைக்காக குடியேறியவர்களை மதிப்பிட்டிருப்பது தவறு என கருதுகிறேன். இலட்சக்கணக்கில் செலவழித்துச் செல்லும் இவர்களை இரண்டு வகையாக பிரிக்கலாம். ஒன்று வேறு வழியே இல்லை என மிச்ச மீதியுள்ள சொத்துக்களை விற்று, கடன் பட்டாவது பிறகு நிம்மதியாக வாழலாம் என்று சென்றவர்கள். இரண்டு, இருப்பது போதாது என்று மேலும் பொருள் ஈட்ட சென்றவர்கள். தான் மட்டும் பிழைத்தால் போதும் என்ற முதல் பிரிவினரும், பேராசையுடன் சென்ற இரண்டாம் பிரிவினரும் ஏகாதிபத்திய முகாமில் புரட்சி வெடித்தால் என்ன பங்காற்றுவார்கள்?

'மண்' கதையில் மச்சான் முட்டிக் காலன் எழுதிய கடிதம் மிக யதார்த்தம். மண்ணையும், விவசாயத்தையும் மட்டுமல்ல மாட்டையும் தன் குடும்ப உறுப்பினராகக் கருதி அவற்றின் நலம் விசாரிக்கும் பாசத்தை நகரத்து மருமகன்கள் புரிந்து கொள்ள மறுப்பதை உணர்த்தியது.

— ஆனந்தன், கோவை.

தலையங்கத்தின் மூலம் ஆசிய நாடுகளிலிருந்து செல்லும் மக்களின் பரிதாப நிலையையும், மேலை நாடுகளில் இவர்களுக்குக் கிடைக்கும் அவமரியாதையையும் இச்சூழலில் விளக்கியமை நன்று. இந்த நிலவறைக் குண்டுகள் ஏகாதிபத்திய அடித்தளத்தை ஆட்டங்காணச் செய்யும் என்பது உண்மை.

— பாபு, திருச்சி.

போர்த்தப்பட்ட பொய் முகங்களையும், போர்த்துவோரையும், போர்த்தி விட்டு அடிக்கும் அரசையும் சேர்த்துக் கிழித்து, 'தீவிரவாதம்' எனப்படுவதன் உண்மை முகங்களை மட்டும் வாசகனே, நீ கேள்விக்குட்படுத்தி மதிப்பீடு செய் என உதவிக்கு சில விவரங்களைத் தந்து அமைகிறது கட்டுரை. கேள்வியின் மறுபாகத்தை வெகுசன இதழ் வாசகர்களால் நிறைவு செய்து கொள்ள இயலுமா?

உங்களுக்குள் குரோனியே இல்லையா? கட்டுரையில் ஏசுவால் கை நழுவிய கல்லை எடுத்துக் கையில் கொடுக்கிறார் கட்டுரை ஆசிரியர். குரோனியேக்களின் மேல் எறிவதற்காக மட்டுமல்ல. அதுவா இதுவா என்றால் இதுவும் அதுவும்தான்! கல்லெறிந்து கொள்ளாதவர்கள் கட்டுரையை மீண்டும் படிக்கட்டும்... மீண்டும்... மீண்டும்.

— மாணிக்கம், திருச்சி.


படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

• போர்: 18
• குரல்: 3-4
• செப்டம்பர் - 2000

உள்நாடு
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 9

சந்தா,
படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்

இரா. சீனிவாசன்,
3, நான்காவது தெரு,
செகந்நாதபுரம்,
சேத்துப்பட்டு,
சென்னை - 600 031.

# மாட்டுக்கறியும், சங்கரமடத்து நரியும்

தமிழ்நாட்டுப் பிரபல திடீர்ப் பணக்கார அரசியல் ரௌடிகளின் முதல் அணி வரிசையைச் சேர்ந்தவர் தாமரைக் கனி. மனித வதையையே அரசியல் மூலதனமாகக் கொண்ட இவருக்கு ஒரு நாள் திடீரென்று பசுவதைக்கெதிராக ஆத்திரம் பொங்கியது. பசுக்களின் மீது பாசம் பொத்துக் கொண்டு பீய்ச்சி அடித்தது. விளைவு, அன்று கேரளாவுக்கு அடி மாடுகளை ஏற்றிச் சென்ற லாரிகளை மடக்கி சாலையோரக் கூத்து நடத்தினார். இதற்காகத்தான் காத்திருந்தது போலக் கிளம்பிவிட்டது சங்கர மடம். யாருடைய சாதி தீண்டத்தகாத சாதி என்று தள்ளி வைத்திருந்தனவோ, யாரைக் கீழ்த்தரமான பொறுக்கி அரசியல்வாதி என்று தமது பத்திரிகைகளில் கேலியும் கிண்டலும் செய்தனவோ, அவருக்கு "சம்ப்ரோக்ஷன" சடங்கு செய்து, தீட்டுக் கழித்து, தனது பசு பரிபாலனப் படையின் தளபதியாக்கி விட்டது, சங்கரமடம்.

அவசர அவசரமாக ஆதீன கர்த்தர்கள், மடாதிபதிகள், பீடாதிபதிகள், சந்நியாசிகள், சாதுக்களையெல்லாம் அழைத்து வந்து அகில இந்திய பசுவதைத் தடுப்பு, பசுப் பாதுகாப்பு மாநாடு ஒன்றைக் காஞ்சியில் கூட்டியது சங்கரமடம். சாதுக்கள், சந்நியாசிகள் என்றாலே பசுவதைத் தடுப்பைச் சட்டமாக்க மறுத்ததாகக் கூறி தில்லியில் காமராசரைக் கொல்வதற்குத் திரண்ட நிர்வாண சாமியார்கள்தாம் நினைவுக்கு வரவேண்டும். அதையெல்லாம் மறந்துவிட்டு, பார்ப்பான் வீசும் திவசச் சோற்றுக்குக் காத்து நிற்கும் காகத்தைப் போல படபடத்தார் தாமரைக் கனி. தண்டத்தைக் கீழே போட்டுவிட்டுப் பாவத்தைக் கழுவுவதற்குத் தலைக்காவிரிக்கு ஓடுகாலியாகப் போன சங்கராச்சாரி, இந்துக்களுக்கு பசு எவ்வளவு புனிதமானது என்று சண்டப் பிரசண்டம் செய்தார். உடனடியாகக் கிளம்பிவிட்டது காவிக்கொடி ரௌடிகள் படை. கேரளாவுக்கு அடிமாடுகளை ஏற்றிச் செல்லும் லாரிகளையும், ஓட்டிச் செல்லப்படும் கால்நடைக் கூட்டத்தையும் மறித்து "மாமூல்" வசூல் செய்யத் துவங்கியது.

கொதித்துப் போன கால்நடை வியாபாரிகள் மற்றும் அதைச் சார்ந்த தொழிலாளர்கள், விவசாயிகள் ஒரு பாதுகாப்புச் சங்கமாகக் கூடி சங்கரமடத்துக்கு எச்சரிக்கையும் விட்டிருக்கிறார்கள். "விவசாயத்துக்குப் பயன்படும் மாடுகளை யாரும் விற்பதில்லை. பயன்படாத, பால் வற்றிப்போன கிழட்டு மாடுகளையும் உதைக்கிற - முட்டுகிற மாடுகளையும்தான் விற்கிறோம். கிழட்டு மாடுகளை விற்காமல் சாகும் வரை வளர்ப்பதற்கு சங்கர மடமா செலவு செய்யும்? சங்கரமட மாநாட்டால் மாமூல் வசூல் ஆரம்பமாகி, மாடுகளின் விலையும் வீழ்ந்து, விவசாயிகளுக்குத்தான் நட்டம்" என்று குமுறினார்கள் விவசாயிகள். பசுவதைத் தடுப்பு இயக்கம் இசுலாமியர்களுக்கு எதிராக இந்து மதவெறியைக் கிளப்பும் என்று சங்கரமடத்துக்குப் பின்னணியாக இருந்து செயல்படும் பாசிச - பார்ப்பன பரிவாரங்கள் எதிர்பார்த்தன. ஆனால் அது இசுலாமியரிடமிருந்து அல்ல; மாட்டுக்கறி உண்ணும் மக்களிடமிருந்து அல்ல; "சாதி - இந்து" எனப்படும் விவசாயிகளிடமிருந்து எதிர்ப்பையும் ஆத்திரத்தையும் கிளப்பியுள்ளது.

முதலாவதாக, இந்துக்களுக்கு பசு புனிதமானது என்பதே மிகப்பெரிய வரலாற்று மோசடி அடிப்படையிலானது. இரண்டாவதாக, இசுலாமியர்கள் - கிறித்தவர்களுக்கு எதிராக பிற மக்கள் ஆதரவைத் திரட்ட இதைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று எண்ணி இதில் தீவிரமாக வலிந்து நின்றால், பார்ப்பன - சனாதன இந்து வெறியர்கள்தாம் மேலும் அம்பலப்பட்டுத் தனிமைப்பட்டுப் போவார்கள். இதை அறிந்துதான் தாமரைக் கனிகளை முன்னிறுத்துகின்றனர்.

"வேதகாலத்திலிருந்தே பசுவைப் புனிதமாகக் கருதி இந்துக்கள் வழிபட்டு வந்தனர். இசுலாமிய ஆக்கிரமிப்பாளர்கள்தாம் இந்துக்களின் புனிதச் சின்னங்களை எல்லாம் அழிப்பதற்காகப் பசுவதையில் ஈடுபட்டனர். பிரிட்டிஷ்காரர்கள் அதைத் தொடர்ந்தனர். அந்தக் களங்கத்தைப் போக்குவதற்காகப் பசுவதையைத் தடுக்க வேண்டும்" என்பது ஆர்.எஸ்.எஸ். - இந்து மதவெறி பாசிசப் பிரச்சாரம். இது அப்பட்டமான பொய் என்பதற்கான ஆதாரம் — இசுலாமிய மொகலாயர் ஆட்சியில் பசுவதைகள் தடை செய்யப்பட்டிருந்ததற்கான ஆதாரங்கள் — ஆர்.எஸ்.எஸ். பிரசுரங்களிலேயே இருக்கிறது. வேத காலத்திலிருந்தே யாகங்கள், வேள்விகள் முதலிய பூசைகளுக்கு பசுக்களையும், குதிரைகளையும் பலியிடுவது ஆரிய - பார்ப்பன வழக்கமாயிருந்தது. அவற்றின் மாமிசத்தை அவர்கள் விரும்பி உண்டனர். பிற்காலத்தில் நாடெங்கும் பரவியிருந்த பௌத்த, சமண மதங்களின் செல்வாக்கை வீழ்த்துவதற்காகவே, அம்மதங்களின் உயிர்வதை எதிர்ப்புக் கொள்கைகளை பார்ப்பனச் சனாதனிகள் காப்பியடித்தனர். அதேசமயம், மாட்டுக்கறி உண்ணும் பழக்கத்தைத் தொடர்ந்த உழைக்கும் மக்களை புலையர்கள், மிலேச்சர்கள், சண்டாளர்கள், தீண்டத்தகாதவர்கள் என்று இழிவுபடுத்தி சமூகத்துக்கும் மதத்துக்கும் வெளியே வைத்தனர். இன்றைய சமுதாய அமைப்பில் பொருளாதார நிர்ப்பந்தங்கள் காரணமாக, பிற்படுத்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்த நகர்ப்புற உழைக்கும் மக்களும் கூட பரவ

படிப்பகம்

www.padippakam.com

லாகவும் அதிகரித்த அளவிலும் மாட்டுக் கறி உண்ணுகின்றனர். எனவேதான், "அவர்களை ஏன் வம்புக்கு இழுக்குறீங்க, முதல்ல நம்ம கணக்கைத் தீர்த்துக்குவம், வாங்க!" என்று வரிந்து கட்டிக் கொண்டு வருகிறார்கள், இசுலாமியர் - கிறித்தவர் அல்லாத பிற மக்கள்.

அப்புறம், "அழிக்கப்பட்ட இந்துக் களின் புனிதச் சின்னங்களைக் காப்போம்! இந்துக் கலாச்சாரத்தை மீட்டோம்!" என்பதெல்லாம் இன்னும் பெரிய பித்தலாட்டம். தமக்கு அவசியமாகும்போது எதையும் மாற்றிக் கொண்டு நியாயம் பேசுவதுதான் பார்ப்பன - பாரதீயப் பண்பாடு. பசுவதைத் தடைச் சட்டம் உள்ள மாநிலங்களிலும் இராணுவத்துக்கு மாட்டுகறி போடுவதற்காக மாடுகள் வெட்டப்படுவதைத் தடுப்பதில்லை. இந்துப் பண்பாட்டையும் புனிதச் சின்னங்களையும் மீட்பது என்றால், ஜீன்சையும், ஃபாரியையும், சுரிதாரையும் அவிழ்த்துவிட்டு, பஞ்சகச்சமும், மடிசாரும் கட்டிக் கொண்டு, "கிராப்பு"களுக்குப் பதிலாக குடுமி வளர்ப்பார்களா? அமெரிக்காவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் போன பார்ப்பனர்கள் திருப்பி வந்து குருகுலத்தில் சேர்ந்து வேத பாடங்களைக் கற்பிப்பார்களா? இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். இந்துப் பண்பாட்டையும், புனிதச் சின்னங்களையும் அழித்துக் கொள்வதில்தான் தங்கள் முன்னேற்றம் அடங்கியிருக்கிறது என்று போய்விட்ட இவர்கள்தாம் அவற்றை மீட்போம் என்று கூச்சல் போடுகிறார்கள்.

இதுவும் கூட வெறும் சவடால்தான். இந்தப் பசுவதை எதிர்ப்பு இந்துத்துவா - பாசிசக் கட்சியின் ஆட்சியில்தான், மாட்டுக்கறி ஏற்றுமதி அதிகரித்திருப்பதோடு, மாட்டுக்கறி ஏற்றுமதியில் முதலிடத்தைப் பிடிப்பதற்காக மேலும் 27 பெரிய மாடு வெட்டும் ஆலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. உலக வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் 1429 பொருட்கள் தடையின்றி இறக்குமதி செய்ய அனுமதியும் அளிக்கப்பட்டிருக்கிறது. இவற்றில் 50 வகைப் பொருட்கள் மாட்டுக்கறி, பன்றிக் கறி, உப்புக்கண்டம் போட்டதும் வறுத்ததுமான ஆட்டுக்கறி, கோழிக்கறி மற்றும் பாலுணவுப் பொருட்கள். இதனால் பஞ்சாப் - அரியானா, மேற்கு உ.பி. மாநிலங்களில் பசு, மாடு வளர்ப்புத் தொழிலே நட்டமடைந்து இலட்சக்கணக்கானவை அடிமாடுகளாக வெட்டப்படுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலை உருவாகி விட்டது. பன்னாட்டுத் தொழிற் கழகங்கள் பசுக்களை டப்பா உணவாக்கி விற்பதைத் தடுக்க முடியாத இந்து மதவெறியர்கள் அரசியல் ஆதாயம் கருதியே பசுவதை எதிர்ப்புக் கூச்சல் போடுகிறார்கள். ●

# வீரப்பனியம்
## விடுதலையின் புதிய தத்துவம்

"தமிழ்நாட்டு விடுதலைக்காக அண்ணன் இறங்கிட்டாரு. அதனால இனிமே அண்ணனை (வீரப்பனை) புரட்சித் தலைவர்னு போடணும்"

**— சேத்துக்குளி கோவிந்தன்**
**வீரப்பனின் கூட்டாளி**
**(நக்கீரன் பேட்டியில்)**

"வீரப்பனை மக்கள் தலைவனாக, தமிழினத் தலைவனாக எல்லோரும் ஏற்றுக் கொண்டு விட்டார்கள்... நானும் வீரப்பனைத் தலைவரா ஏத்துக்கிறேன்"

**—புலவர் கலியபெருமாள்**
**முன்னாள் நக்சல்பாரி புரட்சியாளர்**
**இந்நாள் தமிழ்நாடு விடுதலைப் படை ஆலோசகர்**
**(ஜூ.வி., கல்கி பேட்டியில்)**

புரட்சித் தலைவர் வீரப்பன்! சொல்லக் கூடாதா? அரசு அதிகாரத்தைப் பயன்படுத்தி நாட்டைக் கொள்ளையடித்த ஒரு கொள்ளைக்காரியைப் புரட்சித் தலைவி என்று அழைக்கலாமெனில், அரசு அதிகாரத்தின் துணையின்றி தன் சொந்த முயற்சியில் காட்டைக் கொள்ளையடித்த ஒரு கொள்ளைக்காரனை புரட்சித் தலைவர் என்று ஏன் அழைக்கக் கூடாது?

ஏற்கனவே ஒரு கொள்ளைக்காரர் புரட்சித் தலைவர் என்ற பெயரில் தமிழகத்தில் அறியப்பட்டிருக்கிறார் என்ற சிறியதொரு நடைமுறைக் குழப்பத்தைத் தவிர வேறு ஏதும் பிரச்சினையில்லை. முதலாம் குலோத்துங்கன் இரண்டாம் குலோத்துங்கன் என்பது போல வீரப்பனை இரண்டாம் புரட்சித் தலைவர் என்று பதிவு செய்வதன் மூலம் வரலாற்றுக் குழப்பத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

முதலாம் புரட்சித் தலைவரின் தத்துவம் அண்ணாயிசம்; இரண்டாம் புரட்சித் தலைவரின் தத்துவம் வீரப்பனியம்.

முதலாம் புரட்சித் தலைவரை வலது கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் கல்யாண சுந்தரம் உருவாக்கினார். தற்போது இரண்டாம் புரட்சித் தலைவரை தமிழ்நாடு விடுதலைப்படை உருவாக்கியிருக்கிறது.

மக்கள் விடுதலைதான் தங்கள் நோக்கம் என்று கூறிக் கொள்ளும் இவர்கள், அந்த விடுதலையை மக்கள் தங்கள் சொந்த முயற்சியில் வெல்ல மாட்டார்கள் என்ற கருத்தில் அதிசயிக்கத் தக்க அளவில் கருத்தொற்றுமை கொண்டவர்கள்.

காந்தி இந்தியாவுக்கு சுதந்திரத்தை 'வாங்கித் தந்தது' போல விடுதலையையும் மக்களுக்கு "வாங்கித் தருவதுதான்" ஒரே வழி என்பது இவர்களின் கருத்து.

அதையும் தங்களால் வாங்கித்தர முடியாது, ஆள் வைத்துத்தான் வாங்கித் தர வேண்டும் என்பது இந்தக் கருத்தின் அடுத்த கட்ட முன்னேற்றம்.

கம்யூனிசக் கொள்கையை கம்யூனிஸ்டுகளாகிய நம்முடைய வாயால் பிரச்சாரம் செய்து மக்கள் மத்தியில் பிரபலமாக்குவதைக் காட்டிலும், ஏற்கனவே மக்கள் மத்தியில் ஏதோ ஒரு விதத்தில் பிரபலமாக இருக்கும் நபரின் வாயால் சொல்ல வைத்து விட்டால் காரியம் சுலபமாக முடிந்துவிடும் என்பது இவர்கள் கணக்கு.

டெண்டுல்கர் வாயால் பெப்சி விளம்பரம் போல, வீரப்பன் வாயால் தனித்தமிழ் நாடு, எம்.ஜி.யார் வாயால் கம்யூனிசம்!

எம்.ஜி.யார் வாய்சைப்பதற்குப் பாட்டு எழுதிக் கொடுத்து அவரைப் புரட்சி நடிகராக்கினார் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம். அடுத்து வந்த இந்திய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் கல்யாண சுந்தரம் எம்.ஜி.யாருக்கு கம்யூனிசம் சொல்லிக் கொடுத்தார். கட்சி திட்டமும் எழுதிக் கொடுத்தார்.

கம்யூனிசம் என்ற சொல்லின் பின் பகுதி எம்.ஜி.யாரின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்துவிட்டது போலும்!- செத்துப்போன தன் தலைவரின் முன்பகுதியையும், வெட்டப்பட்ட கம்யூனிசத்தின் பின்பகுதியையும் இணைத்து அண்ணாயிசம் என்ற மண்ணுக்கேற்ற மார்க்சியத்தைத் தன் கொள்கையாகப் பிரகடனம்


படிப்பகம்

www.padippakam.com

செய்தார் எம்.ஜி.யார்.

அண்ணாயிசம் இன்று அம்மாயிசமாகவும், சின்னம்மாயிசமாகவும் வளர்ச்சி அடைந்து விட்டதும், போலி கம்யூனிஸ்டுகள் அதன் பின்னே கோமாளிகளைப் போல கைகட்டி நிற்பதும் வாசகர்கள் அறிந்ததே.

எனினும் நாடாளுமன்றம், நாற்காலி பேரம் போன்ற அமைதி வழி சந்தர்ப்பவாதத்தைக் காட்டிலும் துப்பாக்கி, கடத்தல் போன்ற வழிகளிலான 'வீரம் செறிந்த' சந்தர்ப்பவாதத்திற்கு கூடுதல் கவர்ச்சி இருக்கத்தானே செய்கிறது. அதுதான் வீரப்பனியத்தின் கவர்ச்சி!

அதென்ன வீரப்பனியம்? மார்க்சியம் - பெரியாரியம் - அம்பேத்காரியத்தின் கலவையா? என்ன விகிதத்தில் கலந்த கலவை? என்ன இருந்தாலும் கொள்ளைக் காரனின் பெயரில் ஒரு தத்துவமா — என்று வாசகர்கள் கேள்வி எழுப்பலாம். அவர்களுக்கு திருவாளர் **பகூனின்** பதிலளிக்கிறார்:

*''கொள்ளையடித்தல் ருஷ்ய மக்களின் வாழ்க்கையின் மிகவும் கௌரவமான வடிவங்களில் ஒன்று. கொள்ளைக்காரன் ஒரு வீரன், பாதுகாவலன், மக்களின் சார்பில் வஞ்சம் தீர்ப்பவன், அரசு மற்றும் அரசினால் ஏற்படுத்தப்பட்ட எல்லாவிதமான சமூக மற்றும் சிவில் அமைப்புக்கும் சமரசத்துக்கு இடமளிக்காத எதிரி.*

*யாரால் கொள்ளையடித்தலைப் புரிந்து கொள்ள முடியவில்லையோ அவரால் ருஷ்யாவின் பொதுஜன வரலாற்றைப் புரிந்து கொள்ள முடியாது. அதைப் பற்றி அனுதாபம் காட்டாதவரால் ருஷ்யாவின் பொதுஜன வாழ்க்கையைப் பற்றி அனுதாபம் கொள்ள முடியாது; மக்களுடைய அளவிட முடியாத, காலம் காலமாக தாங்கிக் கொண்டிருக்கும் துன்பங்களைப் பற்றி அவருக்கு இரக்கம் ஏற்படாது. அவர் எதிரி முகாமை, அரசை ஆதரிப்பவர்களைச் சேர்ந்தவர்...*

*கொள்ளையடிப்பதுதான் மக்களுடைய ஜீவ சக்தி, உணர்ச்சி மற்றும் வலிமையின் ஒரே நிரூபணம்... ருஷ்யாவில் கொள்ளைக்காரன்தான் உண்மையான மற்றும் தனியொரு புரட்சியாளன்; அவன் சொற்றொடர்களை, புத்தகங்களிலிருந்து எடுக்கப்பட்ட சொற்பொழிவுகளை உபயோகிக்காத புரட்சியாளன், சோர்வே இல்லாத, செயலில் சமரசம் இல்லாத மற்றும் எதிர்த்து நிற்க முடியாத புரட்சியாளன்.*

**எனவே, மனம் திருந்திய வீரப்பன் தமிழ் மக்களுக்குச் செய்யக்கூடிய மாபெரும் சேவை ஒன்று உண்டென்றால் அது, இத்தனை ஆண்டுகளாகத் தன்னிடமிருந்து சந்தனமும் தந்தமும் கொள்முதல் செய்த பிரமுகர்களையும் அதிகாரிகளையும் அடையாளம் காட்டுவதுதான்.**

*ருஷ்யா முழுவதிலும் சிதறிக் கிடக்கும் காடுகளிலும் நகரங்களிலும் கிராமங்களிலும் இருக்கின்ற கொள்ளைக்காரர்களும் சாம்ராஜ்யத்தின் எண்ணற்ற சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் கொள்ளைக்காரர்களும் ஒரு தனி, பிரிக்கப்பட முடியாத, நெருக்கிப் பின்னப்பட்ட உலகத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள் — அது ருஷ்யப் புரட்சியின் உலகம், இங்கே — இங்கே மட்டுமேதான் — உண்மையான புரட்சிச் சதி நெடுங்காலமாக இருந்து வந்திருக்கிறது. ருஷ்யாவில் உண்மையான சதியைச் செய்ய விரும்புவர்கள், மக்களின் புரட்சியை விரும்புபவர்கள் இந்த உலகத்துக்குள் போக வேண்டும்..''*

மார்க்சின் சமகாலத்தவரான திருவாளர் பகூனின் என்பவரின் இந்த கிறுக்குத்தனமான அராஜகவாதத்தை மார்க்சும் எங்கெல்சும் தாம் வாழ்ந்த காலத்திலேயே போராடி முறியடித்தனர். அதன்பின் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் வெற்றி பெற்ற ரசியப் புரட்சி பகூனினிசத்துக்கு நடைமுறை ரீதியாகவும் சமாதி கட்டியது.



அட்டை ஓவியம்: கோபி

இருப்பினும் லெனின் குறிப்பிட்டதைப் போல இத்தகைய போக்குகள் ''எதிர்பாராத சந்தர்ப்பங்களில், புதிய வடிவங்களில், இதுவரை கண்டிராத ஜோடனைகளில்'' தலைதூக்கிய வண்ணம்தான் இருக்கின்றன. தம்மை மார்க்சிய வாதிகள் என்று கூறிக் கொள்வோர் சிலரின் மூளையில் இன்றும் பகூனின் ஒளிந்திருக்கிறார்.

21-ம் நூற்றாண்டில், சத்தியமங்கலம் காட்டில் மறுபிறவி எடுத்திருக்கும் இந்த பக்கூனினியத்தை தமிழ்நாடு விடுதலைப் படையின் தலைவர் வீரப்பனின் பெயரால் வீரப்பனியம் என்று அழைப்பதே பொருத்தமானது.

வீரப்பன் தமிழ்நாடு விடுதலைப் படையை வென்றெடுத்தாரா, தமிழ்நாடு விடுதலைப் படையினர் வீரப்பனை வென்றெடுத்தனரா என்ற கேள்விக்கு விடை காண்பதன் வாயிலாகத்தான் வீரப்பனீயத்தை விளங்கிக் கொள்ள முடியும்.

வங்கிக் கொள்ளை, கட்டைப் பஞ்சாயத்து, குண்டு வைப்பது போன்ற வழிமுறைகள் மூலம் தனித்தமிழ்நாடு கோரிக்கையை மக்களிடம் 'பிரச்சாரம்' செய்து வந்த விடுதலைப் படையினர், தாங்கள் இத்தனை 'கஷ்டப்பட்டு' பிரச்சாரம் செய்தும் சொரணையில்லாமல் மந்தைகளாக இருக்கும் தமிழக மக்களைக் கண்டு வெறுத்து விட்டனர். இந்த மந்தைக்கு தமிழக விடுதலையைக் கொள்ளையடித்து வழங்குவதைத் தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வந்து விட்டனர்.

எத்தனைதான் அடக்கப்பட்டாலும், சுரண்டப்பட்டாலும் போராடத் தயங்கும் கோழைகளான மக்கள் ஒருபுறம்; ''புத்தகங்களிலிருந்து எடுக்கப்பட்ட சொற்பொழிவுகளை உபயோகிக்காத, செயலில் சமரசம் இல்லாத சோர்வே இல்லாத புரட்சியாளனாகிய'' வீரப்பன் மறுபுறம். **வீரப்பனின் போர்க்குணம்** அவர்களைக் காந்தமாகக் கவர்ந்திருக்கிறது. இதுதான் விடுதலைப் படையைக் கொள்ளைக்காரன் வென்றெடுத்த கதை.

கொள்ளைக்காரன் வீரப்பனை 'புரட்சிக்காரர்கள்' என்ன பேசி வென்றெடுத்திருப்பார்கள்? கீழ்க்கண்டவாறு பேசியிருக்கக் கூடும்.

''வீரப்பன் அவர்களே, உங்களைக் கொள்ளைக்காரனாக்கிக் காட்டுக்குத் துரத்திய அதே சமூக நிலைமைகள்தான் எங்களையும் புரட்சிக்காரர்களாக்கிக் காட்டுக்குத் துரத்தியிருக்கிறது.

உங்களைத் துரத்தும் அதே தமிழகப் போலீசுதான் எங்களையும் துரத்துகிறது.

உங்கள் கூட்டாளிகளைக் கொன்ற

www.padippakam.com

அதே அதிரடிப் படைதான் அப்பாவி மலைவாழ் மக்களையும் கொன்றிருக்கிறது.

உங்களுக்கு பொது மன்னிப்பு வழங்க முட்டுக்கட்டை போடும் அதே கர்நாடக அரசுதான் காவிரி நீருக்கும் முட்டுக்கட்டை போடுகிறது.

உங்களுடைய விடுதலையைத் தடுக்கும் அதே இந்திய அரசியல் அமைப்புதான் தமிழ்நாட்டின் விடுதலையையும் தடுத்துக் கொண்டிருக்கிறது" - என்று பட்டியலிட்டுக் காட்டியிருப்பார்கள்.

"சில கோடிகளை மட்டுமே கொள்ளையடித்திருக்கக் கூடிய உங்களை பல கோடிகளைக் கொள்ளையடித்தவர்கள் எப்படி விசாரிக்க முடியும்? சிலரை மட்டுமே கொலை செய்திருக்கும் உங்களை, கொலை செய்வதையே தொழிலாகக் கொண்ட போலீசு எப்படிக் கைது செய்ய முடியும்? சந்தனத்தையும் யானைத் தந்தத்தையும் வாங்கி அனுபவித்தவர்கள் தண்டிக்கப்படாத போது விற்றவனை மட்டும் எப்படி தண்டிக்க முடியும்?" என்று கேள்விகளை அடுக்கி கொள்ளைக்காரனின் தார்மீக பலத்தை உயர்த்தியிருப்பார்கள்.

"பொது மன்னிப்பு என்று போனால் கொன்று விடுவார்கள்; எனவே, தமிழ் மக்களுக்குச் சேவை செய்வதற்காக நீங்கள் புரட்சிக்காரனாக மாறுவதைத் தவிர வேறு வழியில்லை" என்பதையும், வீரப்பனுக்குப் புரிய வைத்திருப்பார்கள்.

தன்னுடைய விடுதலையும் தமிழ்நாட்டின் விடுதலையும் பிரிக்க முடியாதபடி பின்னிப் பிணைந்திருப்பதைக் கண்டு அதிசயித்த வீரப்பன், தனக்காகப் போராடுவது என்ற குறுகிய நோக்கத்திற்குப் பதிலாக, தமிழகத்துக்காகப் போராடுவது என்ற பரந்த நோக்கத்தைத் தெரிவு செய்திருப்பார்.

புரட்சி நடிகர் என்ற நிழலைப் புரட்சித் தலைவர் என்ற நிஜமாக மாற்ற கல்யாண சுந்தரம் மேற்கொண்டிருக்கக் கூடிய தந்திரமும் இத்தகையதுதான்.

ஒரு கொள்ளைக்காரன் திருந்தக் கூடாதா, திருந்தவே முடியாதா, உலக வரலாற்றில் அப்படி நடந்ததே இல்லையா என்று தலைவர் வீரப்பனின் ரசிகர்கள் நம்மேல் பாயலாம்.

திருந்தலாம்; திருந்தியிருக்கிறார்கள். கொள்ளைக்காரனென்ன, ஆகப் பெரும் கொள்ளைக்காரனான சீனத்து சக்ரவர்த்தியையே திருத்திக் குடிமகனாக்கியிருக்கிறது சீனக் கம்யூனிஸ்டு கட்சி. ஆயிரக்கணக்கான ரவுடிகளும் திருடர்களும் சீனாவிலும் ரசியாவிலும் திருந்தி தொழிலாளர்களாக மாறியிருக்கிறார்கள். ஆனால் யாரும் ஒரே நாளில் புரட்சிக்காரனாகவில்லை.

**இதுவரை சந்தனக் கட்டைகளையும் யானைத் தந்தங்களையும் மட்டுமே திருடிய வீரப்பன் இப்போது தமிழ் வழிக் கல்வி, காவிரி நீர், தேயிலைத் தொழிலாளிகள் — விவசாயிகள் கோரிக்கைகள் உட்பட, தமிழ் மக்களின் கோரிக்கைகள் அனைத்தையும் திருடிவிட்டார்.**

ஒரு விதமான வாழ்க்கை நிகழ்ச்சிப் போக்கில் கொள்ளைக்காரனாகச் சீரழிந்தவர்கள் இன்னொரு நிகழ்ச்சிப் போக்கின் மூலம் மட்டும்தான் திருந்த முடியும். அவற்றில் முதன்மையானது குற்றத்தை ஒப்புக் கொள்வதும், உணர்வதும், அதற்குரிய தண்டனையை அனுபவிப்பதும் ஆகும்.

எனவே, மனம் திருந்திய வீரப்பன் தமிழ் மக்களுக்குச் செய்யக்கூடிய மாபெரும் சேவை ஒன்று உண்டென்றால் அது, இத்தனை ஆண்டுகளாகத் தன்னிடமிருந்து சந்தனமும் தந்தமும் கொள்முதல் செய்த பிரமுகர்களையும் அதிகாரிகளையும் அடையாளம் காட்டுவதுதான்.



ஆனால் இவையெல்லாம் சுவையான ஆனால் முட்டாள்தனமான கற்பனைகள். தான் திருடியதாகவோ, கொலை செய்ததாகவோ, இனிமேல் திருந்தி விட்டதாகவோ வீரப்பன் யாரிடமும் இதுவரை சொல்லவில்லை. 6 கோடித் தமிழர்களைத் திருத்தப் போவதாகத்தான் சொல்கிறார். சொரணையற்ற தமிழர்களுக்கு விடுதலையுணர்வு ஊட்டப் போவதாகச் சொல்கிறார். "இதுவரை 6 லட்சம் மக்களுக்குச் சேவை செய்து வந்தேன். இனி 6 கோடித் தமிழர்களுக்குச் சேவை செய்யப் போகிறேன்" (நக்கீரன் கோபாலிடம் கூறியது)

இதுவரை சந்தனக் கட்டைகளையும் யானைத் தந்தங்களையும் மட்டுமே திருடிய வீரப்பன் இப்போது தமிழ் வழிக் கல்வி, காவிரி நீர், தேயிலைத் தொழிலாளிகள் — விவசாயிகள் கோரிக்கைகள் உட்பட, தமிழ் மக்களின் கோரிக்கைகள் அனைத்தையும் திருடிவிட்டார். வீரப்பனின் சேவை 6 கோடித் தமிழர்களுக்கும் உண்மையிலேயே விரிவுபடுத்தப்பட்டு விட்டது. இனி இவை "வீரப்பனின் ஆதரவு பெற்ற கோரிக்கைகள்" என்று அறியப்படும்!

என்ன செய்வது? கொள்ளைக்காரர்கள் எல்லோருமே ஒரு கட்டத்தில் வள்ளலாக விரும்புகின்றனர். தனது சாராயத்தால் பல லட்சம் தமிழர்களைக் காவு கொண்ட உடையார், மருத்துவக் கல்லூரி தொடங்கினார்; ஜேப்பியார் கல்வி வள்ளலாகி விட்டார்.

கொள்ளையர்கள் வள்ளலாக மாறும் போது சட்டபூர்வமாகவும் சமூக அங்கீகாரத்துடனும் மக்களைக் கொள்ளையடிக்கின்றனர். கடத்தல் மன்னன் ஹாஜி மஸ்தான் ரியல் எஸ்டேட் வர்த்தகனாக மாறிய பின் சொன்னான்; "சட்டபூர்வமாகவே இவ்வளவு சம்பாதிக்க முடியுமென்றால் நான் அன்று அவ்வளவு கஷ்டப்பட்டிருக்க வேண்டியதில்லை; கெட்ட பெயரும் வாங்கியிருக்கத் தேவையில்லை"

"ஆள் கடத்தலில் இவ்வளவு ஆதாயமும் புகழும் இருக்கிறதென்றால் நான் சந்தனக் கட்டை கடத்தியிருக்கத் தேவையில்லை" என்று வீரப்பனும்கூட தன் சகாக்களிடம் சொல்லக் கூடும்.

* * *

கொள்ளைக்காரர்களும் கிரிமினல்களும் இந்தச் சமூகம் தோற்றுவித்த கசடுகள்தான் எனினும் அவர்கள் புரட்சிக்கும் மக்கள் போராட்டங்



படிப்பகம்

www.padippakam.com

களுக்கும் எதிராக இருந்திருக்கிறார்கள் என்பதே வரலாறு.

ஆங்கிலேய கிரிமினல்களைக் கப்பலேற்றி இந்தியாவைக் கொள்ளையடிக்க அனுப்பியது கிழக்கிந்தியக் கம்பெனி. ஆஸ்திரேலியப் பழங்குடிகளையும், அமெரிக்கச் செவ்விந்தியர்களையும் வேட்டையாட முதலில் கப்பலேற்றி அனுப்பப்பட்டவர்கள் ஐரோப்பிய கிரிமினல்கள். உலக வரலாறு முதல் உள்ளூர் நடப்பு வரை அன்றும் இன்றும் இதுதான் உண்மை. அவர்கள் மனம் திருந்தி மக்களுக்கு ஆதரவாக மாறிய நிகழ்வுகளோ விதிவிலக்கானவை.

மக்கள் விரோதிகள் என்பதால் இவர்கள் தங்களுக்கென ஒரு மக்கள் ஆதரவுத் தளத்தை வைத்துக் கொள்ளாமல் இருப்பதில்லை. சாதி, மதம், பேட்டை என்று ஏதாவதொரு அடிப்படையில் ஒரு மக்கள் கூட்டத்தைத் தனக்கு ஆதரவாகப் பராமரிப்பதும், தனது கொள்ளையிலிருந்து, அவர்களுக்கு சில எலும்புத் துண்டுகளை வீசி அவர்களையும் ஊழல்படுத்திப் பயன்படுத்திக் கொள்வதும் அவர்களது தொழிலின் அவசியம். அது அவர்களுடைய மனிதாபிமானத்தின் வெளிப்பாடு அல்ல.

தமது தொழிலின் வரம்புக்குட்பட்டு மக்கள் பிரச்சினைக்குக் குரல் கொடுப்பதும் செயலில் இறங்குவதும் கூட அத்தகையதே. பாபர் மசூதி இடிப்பு, பம்பாய் கலவரம் ஆகியவற்றுக்குப் பதிலடியாக பம்பாய் பங்குச் சந்தைக்குக் குண்டு வைத்ததன் காரணமாக தாவூத் இப்ராகிம் முஸ்லீம் மக்களின் காவலனாகவோ, இந்து மதவெறி எதிர்ப்புப் போராளியாகவோ ஆகிவிட முடியாது.

அல்லது இத்தகைய சில நடவடிக்கைகள் காரணமாக பகூனின் கூறுவது போல இவர்கள் ஆளும் வர்க்கங்களுக்கும் அரசு அமைப்புக்கும் எதிரான புரட்சிக்காரர்களாகவும் ஆகிவிடுவதில்லை. அவர்கள் ''இந்தச் சமூக அமைப்பின் விளை பொருட்கள்'' என்பது எவ்வளவு உண்மையோ அதே அளவிற்கு அவர்கள் 'இந்த அமைப்பின் மறைமுகப் பாதுகாவலர்கள்' என்பதும் உண்மை.

சட்டபூர்வ கொள்ளையனான அரசும் சாதாரணக் கொள்ளையனும் சமமா என்பதல்ல கேள்வி. இந்தச் சாதாரணக் கொள்ளையன் சட்டபூர்வ கொள்ளையனின் எதிரியா என்பதுதான் கேந்திரமான கேள்வி. வீரப்பனை ஒழிப்பதாகக் காக்கிச் சட்டை ரவுடிகள் சண்டமாருதம் செய்யும் போது அதை அம்பலப்படுத்துவது, கொலை வெறியாட்டம் நடத்தும் போது



புலவர். கலியபெருமாள்

அதை எதிர்ப்பது என்பது வேறு; திருடன் போராளி வேடம் போடும்போது அதைக் கண்டு ஆனந்தக் கூத்தாடுவது வேறு.

புரட்சிக்கு மக்களைத் திரட்டுவது பற்றி அக்கறையற்றோர், அரசியல் அக்கறை அற்ற சவடால் பேர்வழிகள், புரட்சியை மக்களுடைய மாபெரும் அரசியல் நடவடிக்கை என்று புரிந்து கொள்ளாமல் திகிலூட்டும் இராணுவ சாகசமாகப் புரிந்து கொள்பவர்கள்... இத்தகைய ரகத்தைச் சேர்ந்தவர்கள்தான் குறுக்குவழிப் புரட்சிக்குத் திட்டம் போடுகின்றனர்.

தனித் தமிழ்நாடு என்பதைத் தனது இலட்சியமாகக் கூறிக் கொள்ளும் இந்த 'விடுதலைப் படையின்' எந்தக் குழுவிடமும் அதற்கான உருப்படியான திட்டம் ஏதும் கிடையாது. அவ்வப்போது எழும் பிரச்சினைகளில் பரபரப்பான நடவடிக்கைகள் மூலம் பத்திரிகைகளின் கவனத்தை ஈர்ப்பது, அந்தச் செய்திகளைக் கண்டு அகமகிழ்வது என்பதற்கு மேல் வேறொன்றும் கிடையாது.

**விடுதலையையும் அரசியல் அதிகாரத்தையும் மக்கள் தம் சொந்தக் கைகளால் பறித்தெடுக்க வேண்டும்; ஆயுதம் தாங்கிய கதாநாயகர்களால் விநியோகிக்கப்படுவதற்கும், மக்கள் கையேந்திப் பெற்றுக் கொள்வதற்கும் அரசியலதிகாரம் என்பது பிள்ளையார் கோயில் சுண்டல் அல்ல.**

இப்போது ராஜ்குமார் கடத்தலையொட்டி நடந்து கொண்டிருப்பதும் அதுதான். தனது பயணத்தை திகிலூட்டும் சாகசமாகச் சித்தரிக்கும் முயற்சியில் உலகப் புரட்சி வரலாற்றையே கரைத்துக் குடித்த போராளியாக வீரப்பனைச் சித்தரிக்கிறார் கோபால். காட்டுக்குப் போக முடியாமல் வயிறெரிந்திருக்கும் மற்ற பத்திரிகைகள், உளவுப் பிரிவு போலீசார் தரும் பொய்ச் செய்திகளுக்கே முறுக்கேற்றி நாளைக்கே தமிழ்நாடு காஷ்மீராகப் போவதாக ஊதிவிடுகின்றன.

உண்மையில் அடுத்த சுற்றில் துவங்க இருக்கும் கொடூரமான போலீசு அடக்குமுறை கேள்விக்கிடமற்றதாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் திட்டமிட்டே செய்யப்படும் பிரச்சாரம் இது. தமிழின உரிமை குறித்த எல்லா கோரிக்கைகளையும் பயங்கரவாதமாகச் சித்தரித்து நசுக்குவதற்கான சதித்திட்டம் இது. கன்னட வெறியை விசிறிவிட்டு குளிர்காய்வதற்கான சூழ்ச்சி இது.

இவை எதைப் பற்றியும் புரிதல் இல்லாமல் ஆளும் வர்க்கங்களும், அரசும் தங்களைக் கண்டு அஞ்சி நடுங்குவதாக எண்ணி அகமகிழ்வது சிறுபிள்ளைத்தனம். நகைத்தக்க சிறுபிள்ளைத்தனமல்ல, கூரைக்குக் கொள்ளி வைக்கும் சிறுபிள்ளைத்தனம்.

தங்கள் சொந்தப் போராட்டத்தின் வலிமையினாலன்றி வேறெந்த வழியினாலும் கிடைக்கும் உரிமைகளை - ஒருவேளை அவை கிடைத்தாலும் - அதைப் பெறுகின்ற மக்களால் தக்க வைத்துக் கொள்ள முடியாது. கோடிக் கணக்கான மக்களின் ஜீவமரணப் போராட்டத்தின் மூலம் வெற்றி பெற்றவைதாம் சீன, ரசியப் புரட்சிகள். அவை தமக்களித்த அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்குத் தேவையான அரசியல் விழிப்புணர்வையும் போர்க் குணத்தையும் உழைக்கும் வர்க்கம் - குறிப்பாக அடுத்த தலைமுறை உழைக்கும் வர்க்கம் - பெற்றிராத காரணத்தினால்தான் ரத்தம் சிந்திப் பெற்ற அரசியலதிகாரத்தை ஒரு சொட்டு ரத்தமும் சிந்தாமல் கைப்பற்றி விட்டார்கள் எதிரிகள்.

விடுதலையையும் அரசியல் அதிகாரத்தையும் மக்கள் தம் சொந்தக் கைகளால் பறித்தெடுக்க வேண்டும்; ஆயுதம் தாங்கிய கதாநாயகர்களால் விநியோகிக்கப்படுவதற்கும், மக்கள் கையேந்திப் பெற்றுக் கொள்வதற்கும் அரசியலதிகாரம் என்பது பிள்ளையார் கோயில் சுண்டல் அல்ல.

— சூரியன்

படிப்பகம்

www.padippakam.com

*திரைப்பட விமர்சனம்*

# கூடி வாழ்வதில் லாபமில்லை பிரிந்து போவதில் நட்டமில்லை

தன் முயற்சியில் சற்றும் மனந்தளராமல் வீ. சேகர் இயக்கியிருக்கும் மற்றுமொரு 'குடும்பப்படம்', 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை'. தமிழ்த் திரையுலகில் பத்தாண்டுகளுக்கொருமுறை ஒரு குடும்ப இயக்குநர் வெற்றி பெறுகிறார், 90-களில் அந்த இயக்குநர் வீ. சேகர் என்கிறார்கள். கருப்பு வெள்ளைக் காலம் முதல் இன்றைய கணினிக் காலம் வரை குடும்பத் திரைப்படங்களை இயக்கி வரும் இயக்குநர்களின் பாஃர்முலா "முன்னுதாரணமான குடும்பத்திற்கென்று ஒரு பொற்காலமிருந்தது, இன்றைய வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு தீர்வு அந்தப் பொற்காலத்தை நோக்கிப் பயணிப்பது" என்பதே.

ஒருஐம்பது ஆண்டுகாலம் தமிழ் ரசிகர்களை குடும்ப உறவுகளிலும், அற்ப உணர்ச்சிகளிலும் முக்கி முக்கி எடுத்திருக்கும் இத்திரைப்படங்கள் ரசிகர்களை எளிதில் உணர்ச்சி வசப்படும் பண்டமாய் மாற்றியிருக்கின்றன. இருக்கின்ற குடும்ப வாழ்வைத் தக்க வைக்கவும், இருந்ததாகக் காட்டப்படும் எடுத்துக்காட்டுக் குடும்பமும் நிழல் வழியே ரசிகர்களின், தாய்மார்களின் இதயங்களைக் கவருகின்றன.

சென்ற படத்தில் சேமிப்பு - உழைப்பு - திறமையின் மூலம் குடும்பங்கள் முன்னேற வேண்டியதை வலியுறுத்திய இயக்குநர் இந்தப் படத்தில் கூட்டுக் குடும்பத்தின் அவசியத்தை ஒரு பள்ளி ஆசிரியரைப் போல் விளக்குகிறார்.

'கூட்டுக் குடும்பம் ஒரு தோப்பாகும், குணமும் மணமும் அங்கே கூத்தாடும்' என்ற முன்னுரைப் பாடல் வரிகளின் காட்சிகள் ஆரம்பத்திலேயே படக்கருவை விளக்குகின்றன. அப்படி வாழ்ந்து கொண்டிருந்த ஒரு கூட்டுக் குடும்பம் பிரச்சினைகளால் பிரிந்து இறுதியில் ஒன்று சேர்வதை நகைச்சுவை என தான் நம்பும் காட்சிகளுடன் அதிகமும் வசனங்களால் எடுத்துரைக்கிறார் இயக்குநர்.

தனது தேநீர்ச் செலவைக் கூட கணக்கு வைத்துக் கொண்டு மனைவியிடம் சம்பளத்தை ஒப்படைக்கும் நாசர் குடும்பத்தின் தலைவர். அவரது பொறுப்புணர்வைக் கண்டு மகிழும் குஷ்பு தனது மைத்துனன் கரணைப் பற்றி கவலைப்படுகிறார். பதவி உயர்வினால் வந்த கூடுதல் சம்பளம் ஐயாயிரத்தை அவன் தரவில்லை, இது மரியாதைக் குறைவல்லவா என நியாயம் கேட்கும் மனைவியிடம் தலைவர் சமாளிக்கிறார்.

சம்பளக் கணக்குகளோடு மரியாதை கொண்டுள்ள உறவு எத்தகையது? அடுத்த காட்சியில் பதில் கிடைக்கிறது. அலுவலகத்திற்குப் புறப்படும் தம்பி (கரண்) சுருக்கம் விழுந்திருக்கும்-தனது சட்டையை யார் தேய்த்தது என கோபம் கொள்கிறான். சமதானம் செய்து அனுப்பி வைக்கும் நாசர் சட்டையைத் தேய்த்த மைத்துனி கோவை சரளாவைக் கடிந்துரைக்கிறார். அவளது வேலையில்லாத கணவன் வடிவேலு முதல், அவளது 4 குழந்தைகள் வயிறார உண்டு ஆங்கிலப் பள்ளியில் படிப்பது வரை தம்பி கரணின் வருமானமே காரணம் என்கிறார். அதைப் புரிந்து கொண்டு நடக்க வேண்டுமெனக் கட்டளையும் பிறப்பிக்கிறார்.

குடும்பப் பொருளாதாரத்தின் முதல் குடிமகனுக்குக் கவனமாகச் செய்யப்பட வேண்டிய பணிவிடைகள் அவனது சம்பளக் கணக்கினால் தீர்மானிக்கப்படுகின்றது. பாசமும், அன்பும், மரியாதையும் இதிலிருந்து துண்டிக்க முடியாதது என்பதை இயல்பாகவே இயக்குநர் சித்தரித்து விட்டார், அவரை அறியாமலே.

கூட்டுக் குடும்பத்தில் பிரச்சினைகள் ஏற்படாமலிருக்க இத்தகைய 'அட்ஜஸ்ட்மெண்ட்கள்' அவசியம் என்றாகிற போது, பிளவுகள் ஏற்படுவது எப்படி? அனாதைகளாகிவிட்ட தம்பிகளை பாசம் கலந்த தியாகத்தோடு வளர்த்து ஆளாக்கியவர்கள் நாசரும், குஷ்புவும். அரசியலில் முன்னுக்கு வர வேண்டும் என வீணாப் போன வடிவேலு ஒரு தம்பி. மற்றொரு தம்பி கரண் படித்து முன்னேறி தன் முதலாளி மகளையே 100 பவுன் நகையுடன் திருமணம் செய்யும் தகுதியை அடைகிறார். தன் தம்பிக்கு இத்தனைப் பெரிய இடத்தில் சம்பந்தம் செய்திருக்கும்போது, தன் மகளுக்கு 50 பவுன் நகை, 2 லட்சம் வரதட்சணை கேட்கும் எதிர் வீட்டு விவேக்கின் தந்தையுடன் சம்பந்தம் செய்வதில் தவறில்லை என நாசர் நினைக்கிறார்.




"உங்கள் தகுதிக்கு அதிகபட்சம் ஒரு லட்சம் செலவழிக்கலாம், 5 லட்சம் என்பது பேராசை" என்கிறான் தம்பி. மகள் திருமணத்திற்குக் கணக்கு பார்க்கிறாயே, உன்னை வளர்த்தெடுத்ததற்கு அப்படி பார்க்கவில்லையே என குமுறுகின்

www.padippakam.com

றனர் அண்ணனும் அண்ணியும்.

அன்பு, பாசம், தியாகம் இவற்றின் அருமை தெரியாத, பணத்தாசை பிடித்த தம்பியினால் குடும்பம் பிரிகிறது என இயக்குநர் சித்தரிக்க நினைத்தாலும் வழக்கம்போல அவரை அறியாமல் உண்மை வெளிவருகிறது.

பிரிந்து வந்தாலும் மறுபடியும் தம்பியிடம் சென்று தன் பாசத்திற்கு விலையாக 5 லட்சம் கேட்கும் அண்ணனிடம் 1 லட்சத்திற்கு மேல் முடியாது என தம்பி மறுக்கிறான்.

அண்ணியும் அப்படித்தான். பிறந்த வீட்டிலிருந்து கணக்கு வழக்கில்லாமல் கொண்டுவந்த அரிசி பருப்புடன், 30 பவுன் நகையையும் கொட்டி அழுது கணவனின் தம்பிகளை வளர்த்தேனே என்று வரலாற்றுக்கணக்கை முன்வைத்து இதயம் வலிக்க அழுகிறாள். இந்தச் செய்தி படத்தில் 3 தடவை வலிந்து பேசப்படுகிறது. ஆக இரு தரப்பினரும் பவுன் கணக்கை வைத்துக் கொண்டு பரிதவிக்கும் போது பாசம் என்ற கயிற்றுக்கு வேரும் விழுதும் எங்கே?

அண்ணன் - அண்ணியின் வாதங்களில் பாசத்தின் அளவுகோல் ரொக்கமாகவே மதிப்பிடப்படுகிறது. நீதி கேட்டு வழிந்தோடும் கண்ணீரில் நிதி, நிதி மட்டுமே உதிர்கிறது.

தந்தை வழி ஆணாதிக்கச் சமூகத்தின் முதிர்ச்சி பெற்ற வடிவமே கூட்டுக் குடும்பம். பரம்பரைச் சொத்துக்களையும், மண உறவினால் வரும் புதிய சொத்துக்களையும் இறுகச் சேர்த்து உடைபடாத வண்ணம் உருவாக்கப்பட்ட கோட்டையே கூட்டுக் குடும்பம். பொருளாதாரக் கடிவாளங்களைக் கையில் வைத்திருக்கும் நபர் (அநேகமாக தந்தை) அங்கே ஆதிக்கம் செய்வதும், ஏனையோர் அடங்கிக்கிடப்பதும் இராமாயண காலந்தொட்டு உள்ள வழக்கம்தான். அந்தக் கடிவாளத்தைச் சுற்றியே அன்பு - பாச - தியாக வகையறாக்கள் வலம்வர முடியும். வீ. சேகரின் படத்தில் அந்தக் கடிவாளம் அண்ணனிடமிருந்து தம்பியிடம் மாறுகிறது. அதைப் புரிந்திருந்தாலும் சற்று எல்லை மீறும் அண்ணன் - அண்ணியால் குடும்பம் பிரிகிறது.

இறுதிக் காட்சியில் தொழிலாளர்கள் உதவியுடன் அண்ணன் நடத்தும் மகா பாரத யுத்தத்தில் தருமஅடி வாங்கும் தம்பிகள் திருந்துகிறார்கள்; வாங்கின அடியில் கூட்டுக் குடும்பத்தின் பாசத்தை ஒழுங்கு மரியாதையாகப் புரிந்து கொள்கிறார்கள். இருப்பினும் இந்தப் போருக்குப் பின் கூட்டுக் குடும்பத்தின் தலைமைப் பதவியை அண்ணன் நாசர் தக்க வைத்துக் கொள்ள முடியுமா? அல்லது புதிய அதிபராகத் தம்பி கரண் பதவி ஏற்பாரா?

அன்றைய சொத்துடமையும் இன்றைய மாத வருமானமும் இல்லறத் தலைவனின் அதிகாரத்தை மேலும் வலுப்படுத்தியிருக்கின்றன. குடும்ப உறுப்பினர்களின் இன்ப - துன்ப - பாச - சோக விசயங்களெல்லாம் அந்த அதிகாரக் கண்ணியிலிருந்து மட்டும் பிதுங்குகின்றன. மாறாக குடும்ப உறுப்பினர்கள் அவர்களைச் சுற்றியுள்ள மக்களிடம் கொண்டுள்ள சமூக உறவுகளிலிருந்து அவை தோன்றுவதில்லை.

ஊழலின் மூலம் வருமானம் அதிகரிக்கலாம்; வரதட்சணை கொடுக்கலாம் - வாங்கலாம்; சாதி பார்க்கலாம்; சமூக அந்தஸ்தைக் கேடாகப் பயன்படுத்தலாம்; பணம் கொடுத்து மருத்துவக்கல்லூரியில் சேரலாம்; மருத்துவப்படி - பயணப்படியை முறைகேடாகப் பெறலாம்; தொலைபேசி - கேஸ் இணைப்பை **'திறமையாக'ப்** பெறலாம்; ஜெயிக்கின்ற குதிரைக்கு ஓட்டுப் போடலாம்; வர்க்கப் பிரிவினைக்கேற்ப விருந்தினர்களை உபசரிக்கலாம்; வந்த மொய்யின் கணக்கைப் பார்த்து, கொடுக்கும் மொய்யைத் தீர்மானிக்கலாம்; ஊரில் கலவரமென்றால் வீட்டுக் கதவைச் சார்த்தலாம்;

> ஒரு தொழிலாளியின் வேலை நேரம் போக மீதி நேரத்தில் அவர் என்ன செய்கிறார் என்பதை வைத்தே அவரது வர்க்க உணர்வு தீர்மானிக்கப் படும்.

ஆம். இவையெல்லாம் குடும்பத்தினரிடையே பிணக்கத்தையல்ல, அன்பு கலந்த இணக்கத்தையே ஏற்படுத்துகின்றது. இத்தகைய இலக்கணப்படியே ஒரு நல்ல குடும்பம், வாழ்க்கை வரலாற்றில் முன்னுக்கு வருகிறது. சொத்துடைமையின் அதிகாரமும் இன்றைய நுகர்வுப் பண்பாடும் குடும்பத்தின் தனியுரிமைச் சிந்தனையை கள்குடித்த குரங்கைப் போல் மாற்றிவிட்டன.

ஒரு தொழிலாளியின் வேலை நேரம் போக மீதி நேரத்தில் அவர் என்ன செய்கிறார் என்பதை வைத்தே அவரது வர்க்க உணர்வு தீர்மானிக்கப்படும். இங்கே நாசர் தம்பிகளுக்கு திருஷ்டி சுத்துகிறார், பணக்கார மைத்துனிக்கு குளியல் ஏற்பாடுகள் செய்கிறார், பொங்கல் விழா ஏற்பாடு - பட்டாடைகளை ரசிக்கிறார், உதாவக்கரைத் தம்பியை பாசத்துடன் பராமரிக்கிறார், மைத்துனியை கன்னத்தில் அறைகிறார், சம்பந்தம் பேச வரும் முதலாளி முன் அடிமைபோல் நடக்கிறார், பிளவிற்குக் காரணமென 3 பெண்களையும் தூற்றுகிறார், காசில்லை என்றாலும் ஒரு கூலிக்காரனுக்கு (சக தொழிலாளி மகன்) மகளைக் கொடுப்பதா என்று சீறும் மனைவியின் கோபத்தை ஏற்கிறார்; வரதட்சணைக்கான 5 லட்சம் புரட்ட ஓவர் டைம் வேலை செய்கிறார்; இத்தனைக்கும் மேலாக தம்பிகளுடன் மோத தொழிலாளர்களை அணிதிரட்டும் தலைவனாகவும் இருக்கிறார்.

இத்தனைக் கேவலங்களும் ஒரு குடும்பத் தலைவனாக இருக்கும் ஒரு 'தொழிலாளி'யிடம் வெளிப்படும் இயல்பான விசயங்கள்தான் என்றால், இந்தக் கூட்டுக் குடும்பம் இருந்தாலென்ன, அழிந்தால் என்ன? இத்தகைய தொழிலாளர்களைக் கொண்டுள்ள வீட்டின் கதியை விடுங்கள். நாட்டின் கதி என்ன?

அண்ணன் தம்பிகளுக்கு வாழ்க்கைப் பட்ட மூன்று பெண்களும் படத்தின் பின்பகுதியில் பெண் போராளிகளாகத் தோற்றம் கொள்கிறார்கள்.

குடும்பத்தில் நிலவும் ஆணாதிக்கத்தை எதிர்த்துப் போராடத் துவங்கும் ஒரு பெண், அதை மேலும் புரிந்து கொள்வதும், போராடுவதற்கான சக்தியைப் பெறுவதும், குடும்பத்திற்கு வெளியே அவள் கொண்டுள்ள சமூக - பொருளாதார நடவடிக்கைகளிலிருந்தே சாத்தியமாகும். மாறாக குடும்பத்தின் அற்ப உணர்வுகளிலிருந்து (சென்டிமெண்ட்) உரிமைப் போராட்டம் நடத்தும் ஒரு பெண், நுகர்பொருள் பண்பாட்டின் வசதியான அடிமையாக முடியுமே ஒழிய - ஆணாதிக்கத்திடமிருந்து விடுதலையை அடையவே முடியாது. எனவே தான் பணக்கார மருமகளான ரோஜா தனது மைத்துனர் நாசரின் மகளுக்கு அவளுடைய காதலனை 5 லட்சம் கொடுத்து விலைக்கு வாங்கித் தந்து தனது பாசத்தை நிரூபிக்கிறார்.

வீ. சேகரின் பெண் பாத்திரங்கள் தங்க

www.padippakam.com

ளது (அடிமை) உழைப்பிலிருந்து ஆதாயம் அடைந்த ஆண்கள், தங்களை அன்போடு மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதைத் தாண்டி வேறு எதையும் கோரவில்லை. அப்படிக் கோரவும் இயலாது என்பதே வசதி படைத்த கூட்டுக் குடும்பத்தின் யதார்த்தம்.

பொதுவுடைமையின் பால் பற்றுக் கொண்டுள்ள இயக்குநரின் திரைப்படங்களில் சிவப்புத் துண்டுடன் ஒரு பொதுவுடைமைக் கட்சிக்காரர் அவ்வப்போது தோன்றுவார். ஆரம்பகாலப் படங்களில் அவர் பொதுவான நியாயங்களை விளக்கிப் பேசினார்; மக்களை அணி திரட்டினார். போலீஸ் நிலையம் சென்று சட்டம் பேசினார். போராட்டங்களுக்குத் தலைமை ஏற்று விபரீதமான வன்முறையை நோக்கிப் போய்விடாமல் தடுத்து நிறுத்தினார். அப்புறம் இளைஞர்கள் சொந்தமாய் முன்னேறுவதற்கு வழி காட்டினார். கூட்டுறவுப் பால் பண்ணை ஏற்படுத்தி சுய வேலைவாய்ப்புப் புரட்சியை ஏற்படுத்தினார். இப்பரிணாம வளர்ச்சியின் படி இப்படத்தில் கடின உழைப்பினால் முன்னேறி முதலாளியாகி விட்டார். இருப்பினும் இன்னமும் சிவப்புத் துண்டோடுதான் சுற்றுகிறார்!

உழைப்பினால் மட்டுமே ஒரு தொழிலாளி முதலாளியாக முடியுமா? தேர்ந்த காரியவாதியை மருமகனாக்குவதும் - 100 பவுன் போட்டு ஆடம்பரத் திருமணம் செய்வதும் இப்பேர்ப்பட்ட முதலாளியாக இருந்து கொண்டே ஒரு கம்யூனிஸ்டாக இருப்பதும் முடியுமா? முடியும் என்கிறார் இயக்குநர். இத்தகைய பண்புகளைச் சொந்த வாழ்க்கையிலும், அரசியல் வாழ்க்கையிலும் கொண்டிருப்பவர்களையே போலிக் கம்யூனிஸ்டுகள் என்று நாம் அழைக்கிறோம்.

இழப்பதற்கு ஏதுமற்ற ஒரு தொழிலாளி நேர்மையினாலும், உழைப்பினாலும் மட்டுமே முதலாளியாகிவிட முடியாது. குடும்பத்தின் பாசப் பிணைப்புகளில் கட்டுண்ட ஒரு நபர் முதலாளியாகலாம்; கம்யூனிஸ்டாக முடியாது. மேலாக ஒரு கம்யூனிஸ்டின் அளவுகோல் குடும்பத்தின் ரோடு ஒத்துப் போவதில் அல்ல முரண்படுவதில்தான் அடங்கியிருக்கிறது. குடும்பத்தின் தனியுடைமைச் சிந்தனையும், கம்யூனிஸ்ட்டின் பொதுவுடைமைச் சிந்தனையும் இரண்டு துருவங்கள்; சேர முடியாது என்பதே யதார்த்தம்.

தனது குடும்பப் படங்களின் சிறப்பு, கருத்துக்களை நகைச்சுவையுடன் சொல்வதில் அடங்கியிருக்கிறது என்கிறார் இயக்குநர்.

ஆனந்த விகடன் முதலான பத்திரிகைகளில் பிளேடு பக்கிரியைப் போன்று அரசியல்வாதியைக் கேலி செய்யும் நகைச்சுவை நிரந்தரமாக வரும். சமூக அக்கறையற்ற நடுத்தர வர்க்கம், அரசியலை சாக்கடையுடன் இணைவைத்துப் பேசுவதன் மூலம் தன்னிடமும் சமூக அக்கறை இருப்பதாகக் காட்டிக் கொள்ளும். அரசியல் வாதிகளைப் பற்றி பார்ப்பனப் பத்திரிகைகளும், நடுத்தர வர்க்கமும் கொண்டுள்ள இச்சித்திரிப்பையே படத்தில் வரும் வடிவேலுவின் பாத்திரம் கொண்டுள்ளது.

அப்படிப்பட்ட நபர்கள் சமூகத்தில் இல்லையா என்று கேட்கலாம். இருக்கிறார்கள். ஆனால் பொறுப்புள்ள சுயநலவாதிகளின் மத்தியில் 'பொறுப்பற்ற அரசியல் வாதி' கோமாளியாக்கப்படும் ரசனை இருக்கிறதே, அது அபாயகரமானது.

> பொறுப்புள்ள சுயநலவாதிகளின் மத்தியில் 'பொறுப்பற்ற அரசியல்வாதி' கோமாளியாக்கப்படும் ரசனை இருக்கிறதே, அது அபாயகரமானது.

உதைத்தலும் - உவமை ஏச்சும் கொண்டு காணும் பொருள் - அனைத்தையும் தரைமட்டமாக்கும் வசனங்கள், இறுதியில் மக்கள் தங்களையே கேலிப் பொருளாக்கிச் சிரித்து மகிழும் ரசனை - க்வுண்டமணி ஜோடி ஆரம்பித்த சாதனை எனலாம். வழுக்கி விழுந்தவனைப் பார்த்து சிரிக்கச் சொல்லும் இந்த ரசனை ரசிகர்களின் இதயங்களுக்குள் நுழைவதில்லை.

கூட்டுக் குடும்பத்தின் சலிப்பூட்டும் அன்றாட வேலைத் திட்டத்தைத் தாண்டி பேசுவதற்கு விசயமில்லாத போது பொருளற்ற வெற்று அரட்டைகள் நிலவுவது அங்கே வழக்கம். அதன்படி பார்த்தால் இந்த நகைச்சுவைக் காட்சிகள் படத்தில் அவ்வளவாக முரண்படவில்லை என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

இயக்குநரால் உருவாக்கப்பட்ட கூட்டுக் குடும்பத்தின் வீட்டு எல்லைக்குள் மட்டும் வளைய வருவதினாலோ என்னவோ அனைத்துப் பாத்திரங்களும் கோமாளிகளாகவே தென்படுகின்றனர். முதலாளி, தொழிலாளி, கம்யூனிஸ்ட், அண்ணன் தம்பி - ஏனைய குடும்ப உறவுகள், அரசியல் ரவுடி, ஆணாதிக்கம், பெண்ணுரிமை, அமெரிக்க எதிர்ப்பு, கம்ப்யூட்டர் எதிர்ப்பு, தொழிலாளர் போராட்டம், முதலாளி அடக்குமுறை எல்லாம் கேலிக் கூத்தாகிவிட்டது. இதில் முற்போக்கு - பிற்போக்கு என்று பிரிப்பதெல்லாம் மிகவும் கடினம். ஏனென்றால் குடும்பத்தின் சென்டிமெண்ட் உணர்விலிருந்து எழும் உலகப் பார்வை இத்தகைய கோளாறுகளை நிச்சயம் கொண்டிருக்கும்.

தமிழிசையை ஆதரிக்க வேண்டி இப்படத்தில் கணினி இசை தவிர்க்கப்பட்டுள்ளது என இப்படத்தின் ஆரம்ப விழா அழைப்பிதழில் இயக்குநர் வீ. சேகர் குறிப்பிட்டிருந்தாராம். படத்தில் தம்பிகள் இருவரும் வில்லனாய் மாறியபிறகு முதலாளி வில்லன் ஒருவனுடன் கிளப் டான்ஸ் ஆடுகிறார்கள். ஆட்டத்தின் உச்ச கட்டத்தில் வேகமான அசைவுகளுக்கேற்ப பறைகளும் திடீரென்று அதிர்கின்றன. நாமும் அதிர்கிறோம். தமிழிசை - கணினி இசை இரண்டையும் நினைத்துப் பரிதாபப்படுகிறோம்.

இசையை மட்டுமல்ல குடும்பத்தைப் புரிந்து கொள்வதிலும் இயக்குநர் தவறி விட்டார். பொருளாதாரக் கணக்குகளின் அடிப்படையில் வகுக்கப்படும் குடும்பத்தின் இயக்கத்தை அன்பு, பாசம், தியாகம் போன்ற பண்புகளினால் பணிய வைத்து விட முடியாது. முன்னொரு காலத்தில் நல்லதொரு குடும்பம் இருந்ததாம் போன்ற பொற்காலக் கனவுகளினால் பயன் ஏதும் இல்லை.

நேற்றைய நிலப்பிரபுத்துவத்தின் பிற்போக்கான ஒழுக்கத்திற்கும், இன்றைய முதலாளித்துவத்தின் 'முற்போக்கான' சீரழிவுக்கும் இடையே நமது இந்தியக் குடும்பங்கள் தடுமாறி நிற்கின்றன. ஒன்றின் பிரச்சினைக்கு மற்றொன்று தீர்வல்ல. குடும்பத்தின் தனியுடைமைச் சிந்தனையும், சமூகமயமாக்கத்திற்கு எதிரான போக்கும் பல நூறு ஆண்டுகளாய் மாறிவிடவில்லை. மாறாக இறுகி வருகிறது.

வீதியிலிருந்து வீட்டை ஆராய்ந்தால்தான் குடும்பப் பிரச்சினைகள் என்று கூறப்படுவனவற்றின் சமூக முக்கியத்துவத்தை உணர முடியும். சன்னல் வழியாக வீதியைப் பார்த்தால் சமூகப் பிரச்சினை புரியாது; குடும்பப் பிரச்சினையும் தீராது.

● இளநம்பி

www.padippakam.com



சிறுகதை

# சிதறு தேங்காய்

சா. செல்வராசு

தினமும் பத்து மணிக்குத்தான் எழுந்திருப்பான் கண்ணன். அதுவும் அம்மா ஒதச்சி எழுப்பிவிடணும். பள்ளிக்கூடம் போறத நிறுத்தி ரண்டு வருசமாச்சி. இலவச சோறு அவனை அஞ்சு வகுப்பு வரை எப்படியோ தள்ளி விட்டது. அதுக்கு மேலே ரிக்சா மெதிக்க வெள்ளையத்தேவருக்கு சத்து இல்ல. கண்ணனுக்கும் படிப்பு ஏறல, படிக்கவும் புடிக்கல. எத்தனை நாளைக்கு சத்துணவையே நம்பிப் படிக்க முடியும்.

அம்மாவா... சொல்லத் தேவையில்லை. சாக்கடை சுமந்திருக்கும் தன் ஒட்டை குடிசய சுத்தம் செய்யறாளோ இல்லையோ...! அய்யர் வீட்டு மெதியடிகள் வரைக்கும் தொவச்சி, புழிஞ்சி இடுப்பு நிக்கிறதில்லை. தன் குடிசைக்கு ஒரு நாளும் அவள் சாணி தெளிச்சதில்லை. தெருத் தெருவா அலைஞ்சி 'நல்ல' மாட்டுச் சாணமா பொறுக்கிக் கொண்டு போய் அய்யர் வீட்டுத் தோட்டமெல்லாம் தெளிப்பா. அய்யர் வீட்டுக் கக்கூசு வரைக்கும் சின்னக் கறை கூட இல்லாம தேச்சி எடுக்கணும்.

இவ்வளவு வேலையும் செஞ்சாதான் சலிச்சிப் போன பருப்புச் சாம்பாரும், நொந்து போன 'பொன்னி' அரிசிச் சோறு கொஞ்சமும் கிடைக்கும். மாமிக்கு ஓட்டல் சாப்பாடு நெனப்பு வந்துட்டா... அதுவும் கிடைக்காது வீராயிக்கு. இந்த பழைய சோத்தைச் சாப்பிட வைக்கத்தான் கண்ணனை ஒதச்சி எழுப்பினாள் வீராயி.

கண்ணனுக்கு மகிழ்ச்சியோடு விடிந்தது வெள்ளிக்கிழமை. ''பாரம் சுமப்போர் பாதுகாப்புச் சங்கத்திலிருந்து'' அம்மாவுக்குக் கொடுத்த காலண்டரைப் பார்த்தபடியே படுக்கையை விட்டு எழுந்தான் கண்ணன். வெள்ளிக்கிழமைதான் என்று உறுதி செய்து கொண்டு மகிழ்ச்சி அடைந்தான்.

இன்றைக்கு அம்மாவிடம் சோத்துக்கு அழ வேண்டிய அவசியமில்லை கண்ணனுக்கு. இருக்கவே இருக்கு ''வினை தீர்க்கும் புள்ளையார்'' கோயில் பிரசாதம். யார் வீட்டுல சோறு பொங்கலன்னாலும் கோயில்ல சோறு கெடைச்சே தீரும். அதுவும் பருப்பு, நெய், சர்க்கரை, பழம் கலந்த சோறு. அய்யங்கார் ஓட்டல் சர்க்கரைப் பொங்கல் கூட அவ்ளோ டேஸ்டா இருக்காது. அதனால்தான் மாமி போட்டனுப்பிய பழையதுகளை கண்ணன் சட்டை செய்யவில்லை.

''என்னடா சோறு வேண்டாவா? கோட்டு வாயக்கூட கழுவாம எங்கடா கௌம்பிட்ட''

தேங்காமட்டையைக்காயப்போட்டுக் கொண்டே வீராயி வினவினாள்.

கண்ணன் மூச்சே விடாமல், காதுவரை நீண்டிருந்த கோட்டு வாயைத் துடைத்துக் கொண்டு, கண்ணை மறைத்து வளர்ந்திருந்த முடியைக் கோதிவிட்டுக் கொண்டே அம்மாவைக் கடந்து நடந்தான்.

''ஓஹோ! இன்னிக்கு வெள்ளிக்கிழமையா? அய்யாவுக்கு கோயில்ல டூட்டி... போ! போ!! சாயந்திரம் பொழுது இருட்டினப்போ வா! எரந்து, பறந்து ஆக்கி எறக்கி வைக்கிறேன்... பன்னி மாதிரி தின்னுவ!''

அம்மா பொறுமினாள். கண்ணன் திரும்பி முறைத்துப் பார்த்து அடங்கினான்.

''என்னடா மொறைக்கிறே. ஏன்டா நாயே! உன் வயித்த மட்டும் பாத்துகிட்டா போதுமாடா? கூடப் பொறந்த ஒரு பொட்டச்சி இருக்காளே... அதுக்கு கொஞ்சம் கொண்டாந்து கொடுக்கக் கூடாது? அது யாருகிட்ட போயி கையேந்துண்டா? உன்னப் பெத்தவன் வரட்டும் பேசிக்கிறேன்!''

''சும்மா கெடம்மா. அப்பிடியே கோயில்ல அள்ளி, அள்ளி கொடுக்குறாங்களாக்கும். ங்கொப்பன் ஊட்டு கோயிலா? எல்லாத்தையும் அந்த அய்யிரு மறைச்சி வச்சிகிட்டு, தித்துனூண்டு, தித்துனூண்டு தர்ரான். அதுல பாப்பாவுக்கு என்னத்த கொண்டாந்து தரச் சொல்ற. அங்க வந்து பாத்தால்ல தெரியும் உனக்கு.''

உழைப்பின் கடினத்தை அம்மாவுக்கு விளக்கினான் கண்ணன்.

''அன்னிக்கு ஒரு நாளு நான் தின்னாமக்கூட பொங்கலைக் கொண்டாந்து பாப்பாவுக்குக் கொடுத்தேன். மண்ணு மண்ணா இருக்குன்னு பாப்பா துப்பிடுச்சி. நான் என்ன பண்ணட்டும்.''

''சனியன் எனக்கு திட்டு வாங்கி வக்கிது.'' என்ன இருந்தாலும் கண்ணனுக்கு, தங்கச்சி மேல பாசம் இருக்கத்தான் செய்தது. அது வீராயிக்கு தெரியல. பாசமிருக்கப் போய்தான்... குழுமாயி அம்மன் திருவிழாவில் ஒரு ''ஐடெக்ஸ்'' கண்மை டப்பாவும், நெய்ல் பாலீசும் வாங்கி வந்து கொடுத்தான்.


படிப்பகம்

www.padippakam.com

அது என்னவோ கடைக்காரருக்குத் தெரியாமல் திருடி வந்து கொடுத்ததாயிருந் தாலும் பாசம் பாசம் தானே! அன்றைக்கு அம்மாவுக்கு அது தெரிந்தும் கண்ணனுக்கு திட்டு விழவில்லை. மாறாக, கண் கலங் கினாள் வீராயி.

11-வது கிராஸிலிருக்கும் "வினை தீர்க்கும் புள்ளையார்கோயில்" மிகவும் பிர சித்தி பெற்றது. அந்த ஏரியாவிலேயே நல்ல கூட்டம் சேரும் கோயில். அந்தக் கோயிலுக்கு அப்பாயின்மெண்ட் வாங்க அய்யர்களுக்குள்ளேயே செம போட்டா போட்டி. நல்ல வரும்படி வரக்கூடிய கோயில்.

கோயிலின் கிரில் கதவை அய்யர் திறக் கவும் கண்ணனும் நண்பர்களும் அங்கு போய்ச் சேரவும் நேரம் சரியாக இருந்தது. அவனுடைய வயதையொத்த குழந்தைகள் ஆட்டோக்களிலும், சைக்கிள் ரிக்சாக்க ளிலும் பள்ளிக்குச் சென்று கொண்டிருந் தார்கள். அவர்களின் யூனிபார்மைப் பார்த்துவிட்டு கண்ணனுக்கு எரிச்சலா கவும், பொறாமையாகவும் இருந்தது.

அய்யர் புள்ளையாருக்கு 'மேக்கப்' முடித்து பட்டுப் பாவாடை கட்டிக் கொண்டி ருந்தார். ஒரு நடுத்தரக் கும்பல் பியூட்டி பார்லர் மேக்கப்புடன் பிரசாதத்தைக் கையி லேந்தி நின்று கொண்டிருந்தது. புள்ளை யாரின் தலைக்கு மேலிருக்கும் கண்ணாடி, வந்த கும்பல் முந்தானையைச் சரி செய்து கொள்ளத் தோதாகச் சாய்ந்திருந்தது. அண்டாவில் பிரசாதத்தைப் பார்த்ததும் பையன்களை விட அய்யருக்குக் காது வரை பல் தெரிந்தது.

"ஏய்! இன்னிக்கு ஒருத்தர ஒருத்தர் அடிச்சிக்காம பொங்கல் வாங்கனும்டா. வீணா சோறு மண்ணுல விழுந்துருதுடா."

கண்ணன் ஒழுங்குபடுத்தினான்.

"போடா! அடிச்சி புடிச்சி வாங்க லன்னா... அந்த மண்ணு சோறும் கெடைக் கறதில்ல. இல்லாட்டி ஓசரமா இருக்கிறவங் களே வாங்கிக்கிறாங்க. அந்த கம்மனாட்டி அய்யருக்கும் புத்தி இல்ல. ஓசரமா இருக் கிறவங்கள பாத்து பாத்து தர்றான்."

சகபாடி விதியை நொந்து கொண்டான்.

அதற்குள் தீபாராதனை மணி அடித் தது. கண்ணன் இதயமும் படபடவென் வேகமாக அடித்துக் கொண்டது. முண்டிய டித்தார்கள். அய்யர் நாய்க்கு வைப்பது போல கோயிலின் ஒதுக்குப் புறமாக பிரசா தத்தை எடுத்து வந்து நின்றார். திராட்சைப் பழத்திற்கு நரி எட்டி எட்டி முயற்சித்தது போல, அய்யரைச் சுற்றிச் சிறுவர்கள். 'அடித்துக் கொள்ளக் கூடாது' என்று சொன்ன கண்ணனே அதை மீறினான்.

மீண்டும் அடிதடி, மீண்டும் ஓசரம், மீண்டும் மண்ணு. நேத்து கிடைத்த மண்ணு சோறு கூட கண்ணனுக்கு எட்டவில்லை. போட்டி ருந்த பழைய சட்டை கிழிந்ததுதான் மிச்சம்.

கொஞ்சம் அதிகமாகப் பிடுங்கியவ னிடம் கண்ணன் ஒரு கை கெஞ்சினான். "டே! டே! எனக்கு கொஞ்சம் குடுடா. எங்க தங்கச்சிக்குக் கொண்டு போகனும்டா. அம்மா திட்டுண்டா. டே!... டே!..." கெஞ்சிப் பார்த்தும் பலனில்லை. தர மறுத் தவன் சூடு பொறுக்காமல் ரண்டு கைக ளிலும், மாற்றி மாற்றி ஊதிக் கொண்டு ஓடினான். சற்று தொலைவில் நின்று யாரா வது பிடுங்கி விடுவார்களோ என்று

கொதிக்கக் கொதிக்க வாயில் போட்டுக் கொண்டு அவஸ்தையுடன் கோழி மாதிரி விழுங்கினான்.

கண்ணனுக்குக் கண் கலங்கியது. தரா மல் விழுங்கியவனுக்கும் கண் கலங்கியது.

இதையெல்லாம் ரசித்துக் கொண்டிருந் தது அந்த மேக்கப் கும்பல். கண்ணனுக்கு அவர்களைப் பார்த்ததும் உடல் கூசிப் போனது.

'வினை தீர்க்கும் புள்ளையார்' இன்று கண்ணன் பசி தீர்க்கவில்லை. வீட்டை நோக்கி நடந்தான். வீட்டில் அம்மா இல்லை. வீட்டு வேலைக்குச் சென்று விட்டி





படிப்பகம்

www.padippakam.com

ருந்தாள். தங்கச்சி பள்ளிக்கூடம் செல்ல தன்னுடைய தஸ்தாவேஜுகளைத் தயார் செய்து கொண்டிருந்தாள்.

— ஒரு பிரேம் தொலைந்த சிலேட்டு.

— ஒரு கணேஷ் வாய்ப்பாடு; அதிலும் பாதி இல்லை.

— கழுவியும், கழுவாமலும் ஒரு வீசி எறியும் நிலையுள்ள சில்வர் தட்டு. இதை யெல்லாம் பாதுகாக்க ஒன்றரைக் காதுள்ள ஒரு அழுக்கேறிய சாரதாஸ் மஞ்சள் பை. திங்கட்கிழமை ஊர்வசி சோப்பு போட்டுத் துவைத்த ஒத்துவராத பாவாடை, சட்டை: "நவநாகரீக ஆடைகளுக்கு சாரதாஸ்" என்று அந்தப் பையில் மங்கலாகத் தெரிந் தது.

"பொங்கல வாங்கி முழுங்கிட்டு வண்டியா? எங்க போயிருந்த? உனக்கு வச்ச சோத்த அம்மாவும் நானும் துன்னுட்டோம்!"

அண்ணனின் நிலைமை புரியாமல் கேலி செய்தாள் தங்கச்சி

தங்கச்சிக்கு எப்படிப் புரிய வைப்பது என்று தெரியவில்லை கண்ணனுக்கு. பசி வயிற்றைக் கிள்ளியது.

மீண்டும் 11-வது கிராஸ். நண்பர்கள் ஒருத்தனும் காணவில்லை. சுற்றுமுற்றும் பார்த்தான். அது பஸ் ஓனர் வீடு. இரண்டு பப்பாளி மரங்கள் பழங்களைச் சுமக்க முடி யாமல் தவித்தன. காக்காய், குருவிகளுக்கு கொத்த விட்டும் பாரம் குறையல. ராப்ப கலா காவல் கிடக்கும் வாட்ச்மேன் கூட அதைப் பறிக்கக் கூடாது. வீட்டுக்கு அழகு கெட்டு விடும் என்று ஓனர் சொல்லி வைத்திருக்கிறார்.

வாட்ச்மேன், டாபரை மேய்க்க கிளம்பிக் கொண்டிருந்தார். குட்டியிலி ருந்து பாலூட்டி வளர்த்து வருகிறார் வாட்ச்சேமன் பால்சாமி. தோள் வரைக்கும் வளர்ந்த புள்ளையைத் திட்டவோ, அடிக் கவோ வாட்ச்மேனுக்குச் சங்கடமாக இருந் தது. அதனால்தான் புள்ள 'டாபர்மேன்' இழுத்த இழுப்புக்கு ஓட முடியாமல் ஓடினார் 'வாட்ச்மேன்'.

நேரம் பார்த்த கண்ணன் மளமளவென மரத்தில் ஏறி இரண்டு பழத்தைப் பறித்துப் போட்டு, இறங்கி எடுத்துக் கொண்டு ஓடினான்.

பழத்தை தங்கச்சிக்குக் கொடுத்துச் சாப்பிட வைத்தான். அம்மா வந்ததும் மறக் காமல் தான் கொடுத்ததைச் சொல்லச் சொல்லி சத்தியம் வாங்கினான். மறக்காம சொன்னா சாயந்திரம் செதறு தேங்கா கொண்டாந்து குடுக்கறேன் என்றான். தங்கச்சி பழத்தைக் குதப்பிக் கொண்டே தலையை ஆட்டியது.

• • •

மீண்டும் 11-வது கிராஸ். சிதறு தேங்காய் உடைக்கும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது.

"நிறைய தேங்கா கெடச்சா இட்லிக்கார அம்மாவுக்குக் கொடுத்தா காசு தருவாங்க. 'வல்லரசு பாக்கணும்!' என்ற கற்பனையில் ஒருவன்.

"எப்படியாவது அடிச்சி, புடுச்சி நிறைய தேங்கா எடுத்து ஒத்தையா ஆசதீர திங்கணும்"னு ஒருத்தன்.

"காலையில பொங்கலும் கிடைக்கல. இப்பவாவது தேங்கா கெடைச்சா பாப்பா

'வினை தீர்க்கும் புள்ளை யார்' இன்று கண்ணன் பசி தீர்க்கவில்லை.

"பொங்கல வாங்கி முழுங் கிட்டு வண்ட்டியா? எங்க போயிருந்த? உனக்கு வச்ச சோத்த அம்மாவும் நானும் துன்னுட்டோம்!"

அண்ணனின் நிலைமை புரியாமல் கேலி செய் தாள் தங்கச்சி.

தங்கச்சிக்கு எப்படிப் புரிய வைப்பது என்று தெரியவில்லை கண்ண னுக்கு. பசி வயிற்றைக் கிள்ளியது.

வுக்குக் கொண்டு போய்த் தரணும். அம்மா வுக்கு தொவையலுக்குத் தரணும்" என்று கண்ணன் நினைத்திருந்தான்.

— இப்படி ஒவ்வொருத்தரும் கற்பனை செய்து கொண்டு பாலக் கட்டையில் தொத்திக் கொண்டிருந்தார்கள்.

எதிர்பாராத விதமாக 'சொத்'தென்று சத்தம். காலையில் மறந்து விட்டு விட்டுச் சென்ற பொங்கலை சாக்கடைக்கு தீனி போட்டுக் கொண்டிருந்தார் அய்யர். சிறு வர்கள் ஏக்கத்தோடும் எரிச்சலோடும் அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந் தனர்.

தேங்காய் கண்ணில் கற்பூரத்தை வைத்துப் பற்ற வைத்த அய்யர் உடைக்கத் தயாரானார். அய்யரை வட்டமிட்டபடி சிறு வர்கள். தேங்காய் சிதறி, அதை 'பொறுக் கிகள்' அடிதடிபட்டுப் பொறுக்குவதைப் பார்த்தாலே... தங்களுக்குப் 'புத்திர பாக்கியம்' கிடைத்துவிடும் என்ற நம்பிக் கையுடன் ஒரு ஜோடி.

தேங்காய் தரையில் மோதியது, ஆனால் சிதறாமல் உடைந்து உருண்டோடி யது சாக்கடையை நோக்கி. அதைத் துரத்திக் கொண்டு "புட்பால் பிளேயர்" மாதிரி ஓடினான் கண்ணன். கை எட்டும் தூரத்தில் சாக்கடையில் எகிறி விழுந்தது தேங்காய்.

கண்ணன் வெறிக்கப் பார்த்தான். கையை விட்டு எடுப்பதா வேண்டாவா என்று யோசித்ததுதான் தாமதம். சடாரென ஒருவன் முழங்கைவரை சாக்கடையில் விட்டு தேங்காயை எடுத்துக் கொண்டு திரும்பிப் பார்க்காமல் ஓடினான்.

'ஏமாந்து விட்டோம்' என்று தலையில் அடித்துக் கொண்டான் கண்ணன். தொடர்ந்து ஏமாற்றம். அடுத்தடுத்து வேண்டுதல் தேங்காய்கள் உடைந்தன. எல்லாருக்கும் ஏறத்தாழ சில்லுகள் கிடைத் தன. தங்கச்சி ஆசையை நிறைவேற்றி விட்ட திருப்தியில் கண்ணன் முகம் மகிழ்ச் சியில் ஆழ்ந்தது.

கிடைத்த தேங்காய்ச் சில்லுகளை கிரிக்கெட் பந்தை துடைப்பது போல தொடையில் துடைத்துத் துடைத்து பாக்கெட்டில் செருகிக் கொண்டான். ஓட்டை பாக்கெட்டில் விழுந்து விடாதபடி ஒரு கையால் அடிக்கடி சோதித்துக் கொண்டான்.

சகாக்கள் அடுத்த வருமானத்திற்கு கடை வீதிக்குப் படை எடுத்தார்கள். பால் வடியும் முகத்துடன் மெயின் ரோட்டை நோக்கி நடந்தார்கள். கண்ணனுக்கு அவர் களுடன் செல்ல மனமில்லை. 'தாமதமாகப் போனால் தங்கச்சி தூங்கிவிடும். தேங்காய் தர முடியாது' என்று கருதி, வீட்டுக்கு வேக மாக நடையைக் கட்டினான். குறுக்கு வழியில் சென்றால் சீக்கிரம் வீடு போகலாம் என நினைத்து ஒரு சந்தில் நுழைந்தான்.

அந்த சந்தில்தான் கோயில் பூசாரி அய்யர் வீடு. எண்ணெய் ஆட்டி எடுப்ப தற்காகத் தேங்காய்ச் சில்லுகளைக் காய வைத்து மூட்டைகட்டிக் கொண்டிருந்தாள் மாமி. அந்த ஏரியாவே ஆயில் மில்லு போல வாசம் வந்தது. தேங்காய்ச் சில்லு களை சிறுவர்களோ, காக்காயோ எடுத்து விடாதபடி விரட்ட ஒரு குச்சி காவலுக்குக் கிடந்தது.

●



படிப்பகம்

www.padippakam.com



# அமெரிக்க மோகம்

**கணினிக் கல்வி கற்றால் கை நிறையக் காசு - அமெரிக்காவில் வேலை என்ற மோகம் அரசாங்கத்தாலேயே பரப்பப்படுகிறது. அறிவாளிகள் எல்லோரும் பில் கேட்ஸைப் போன்று முதலாளிகளாகிவிட முடியும் என்ற மாயையும் பரப்பப்படுகிறது. இந்த அமெரிக்க மோகத்திற்குப் பலியான மாணவர்கள் பலர் பில் கேட்ஸ் பக்தர்களாகி விட்டதை இக்கட்டுரைத் தொடரின் முதற்பகுதி விவரித்தது. அறிவாளிகள் முதலாளிகளாக முடியுமா என்பதையும், இந்தியா தகவல் தொழில்நுட்ப வல்லரசாக முடியுமா என்பதையும் இப்பகுதியில் பரிசீலிப்போம்.**

பில் கேட்ஸ் ஆகும் கனவுடன் அமெரிக்காவின் சிலிகான் பள்ளத்தாக்கில் தரையிறங்கிய இந்திய இளைஞர்களின் நிலை என்ன? ''இந்தியாவின் இணையப் புரட்சிக்கு ஒரு வழிகாட்டி'' என்ற பெயரில் இந்தியா டுடே வெளியிட்டுள்ள சிறப்பு மலரின் கட்டுரை கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறது.

''கணினிப் பொறியாளர்களே வாரத்திற்கு 90 மணிநேரம் வேலை செய்கிறார்கள். பலர் 5,6 ஆண்டுகள் ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தில் வேலை செய்வதாக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருக்கிறார்கள். கொத்தடிமைப் பத்திரத்தில் கையெழுத்திட்ட தோட்டத் தொழிலாளிகளின் நிலைமையில் தாங்கள் இருப்பதாகப் பலர் கருதுகிறார்கள்.''

''இந்தியர்களுக்கு ஒருநாள் என்பது 25 மணி நேரம், ஒரு வாரத்திற்கு 8 நாட்கள் ஒரு ஆண்டுக்கு 13 மாதங்கள் — என்பது இந்தியர்கள் மத்தியில் வழங்கும் நகைச்சுவை.''

''அமெரிக்காவிலேயே செல்வம் வேகமாகப் பெருகும் இடமும் வீடற்றவர்களின் எண்ணிக்கை வேகமாகப் பெருகும் இடமும் சிலிகான் பள்ளத்தாக்குதான். வீட்டு வாடகை மாதத்திற்கு 1500 டாலர். 3500 டாலருக்குக் குறைவாக மாதச் சம்பளம் வாங்குவோருக்கு வாழ்க்கையே நரகம்தான். குளிர்காலத்தில் ஒண்ட இடமில்லாத வீடற்ற இளைஞர்கள் நகரத்தின் இரவுப் பேருந்தில் பயணம் செய்தபடியே தூங்கிக் கொள்கிறார்கள்... இருந்தாலும் தமக்கும் ஒருகாலம் வரும் என்று அவர்கள் நம்புகிறார்கள்.''

### சாம்பல் நிறப் புரட்சி - மூளை எனும் கச்சாப் பொருள்

''சிலிகான் பள்ளத்தாக்கின் தோட்டத் தொழிலாளிகள்'' என்று இந்தியக் கணினி வல்லுநர்களைப் பற்றி குறிப்பிடும் அதே இதழின் அறிமுகக் கட்டுரை கூறுவதைக் கேளுங்கள்.

''முதல் ஆயிரமாண்டில் நமது நாடு உருவாக்கிய ஞானமும் செல்வமும் இரண்டாவது ஆயிரமாண்டில் நாசமாக்கப்பட்டன. (முகலாயர்களால் என்பதைப் புரிந்து கொள்க) அதை மீண்டும் கட்டியெழுப்பும் காலம் வந்துவிட்டது.''

''மேற்குலகம் தொழிற்புரட்சியின் மூலம் செல்வத்தை உருவாக்கியது. மேற்கு ஆசியாவிற்கு எண்ணெய். இப்போது இந்தியாவின் முறை வந்துவிட்டது. அவர்கள் இயற்கை தமக்களித்த செல்வத்தைக் கொண்டு வளமையை உருவாக்கிக் கொண்டார்கள். ஆனால் நாம் நமக்குள் இருக்கும் அறிவைக் கொண்டு அதை உருவாக்குவோம்.''

''21-ஆம் நூற்றாண்டு அறிவின் நூற்றாண்டு. உலக நாடுகள் மத்தியில், பெருமைக்குரிய இடத்தை, நாம் இழந்த அந்த இடத்தை மீண்டும் கைப்பற்றும் வாய்ப்பு வந்துவிட்டது.''

''நம்மிடம் 100 கோடி மூளைகள் இருக்கின்றன; பிரம்மாண்டமான உயர்கல்வி நிறுவன அமைப்பு உள்ளது; சிறந்த முறையில் கணிதம் கற்றுத் தரும் பள்ளிக் கல்வி முறை உள்ளது; பரவலான ஆங்கில அறிவு உள்ளது; அறிவுப் புரட்சிக்கு, சாம்பல் நிறப் புரட்சிக்குத் தேவையான மூளை எனும் கச்சாப் பொருள் இந்தியாவிடம் ஏராளமாக இருக்கிறது.''

விசமத்தனமும் அடிமுட்டாள்தனமும் நிறைந்த, போதையூட்டக்கூடிய இந்த 'வரலாற்று ஆய்வை' ஒதுக்கி விட்டுக் கடைசி வரியை மட்டும் கவனியுங்கள்.

நாட்டின் முன்னேற்றத்தையெல்லாம் தின்று செரித்துவிடும் 100 கோடி வயிறுகள் என்று சபிக்கப்பட்ட இந்தியாவின் மக்கள் தொகைக்கு மூளையும் உண்டு என்பது இப்போதுதான் இவர்களுக்குத் தெரிய வந்திருக்கிறது.

கச்சாப் பொருள்! முட்டாள்தனமான இந்த வரலாற்று ஆய்வில் தப்பிப் பிழைத்த ஒரேயொரு உண்மையான சொல். பிரிட்டனின் சாயப்பட்டறைக்குத் தேவைப்பட்ட கச்சாப் பொருள் இந்திய அவுரி; அமெரிக்காவின் சிலிகான் பள்ளத்தாக்கிற்குத் தேவைப்படும் கச்சாப் பொருள் இந்திய அறிவு!

### இந்திய அறிவின் தயவில் அமெரிக்காவா?

இந்தக் கச்சாப் பொருள் குறித்த இன்னொரு புள்ளி விவரத்தைப் பெருமை பொங்க வெளியிட்டிருக்கிறது ஆர்.எஸ்.எஸ். பத்திரிகையான விஜயபாரதம்.

மைக்ரோசாப்ட் நிறுவனத்தில் வேலை செய்பவர்களில் 34% இந்தியர்கள், நாசாவில் 36%, ஐ.பி.எம். இல் 28%, இண்டெல் நிறுவனத்தில் 17% இந்தியர்கள்.'' சொல்வது ஆர்.எஸ்.எஸ். ஆக இருந்தாலும் இந்தப் புள்ளிவிவரம் என்னவோ உண்மைதான்.

மேற்கூறிய புள்ளி விவரங்களிலிருந்தும் இந்தியா டுடேயின் கிளர்ச்சியூட்டும் மேற்கோள்களிலிருந்தும் என்ன முடிவுக்கு வரலாம்? அமெரிக்க வல்லரசே இந்திய மூளையைச் சார்ந்துதான் இருக்கிறது. எனவே கொஞ்சம் மனது வைத்தால் இந்தியாவே வல்லரசாகி விடலாம் என்று 'வல்லரசு' ரசிகர்களுக்குப் போதையூட்டலாம். தோட்டத் தொழிலாளிகளைப் போல பிழியப்பட்டாலும், முயன்றால் இந்திய பில் கேட்ஸ்களை உருவாக்கி விடலாமென 'அலை பாயுதே' ரசிகர்களுக்கு நம்பிக்கையும் ஊட்டலாம்.

படித்தவர்களுக்கு பணக்காரனாகும் வெறியையும், பாமரர்களுக்குப் போலி தேசியப் பெருமிதத்தையும் ஒரே நேரத்தில் உருவாக்க அரசும், தகவல் தொடர்பு ஊடகங்களும் திட்டமிட்டு நடத்திவரும் பிரச்சா



படிப்பகம்

www.padippakam.com

ரத்தின் இரண்டு எடுத்துக்காட்டுகள்தான் இவை. சாத்தியமா, சரியா என்ற இரு கோணங்களிலிருந்தும் இதனைப் பரிசீலிக்க வேண்டும்.

### உலகளந்த பெருமாள் — யார்?

சிலிகான் பள்ளத்தாக்கில் இந்தியர்கள் கணிசமாக இருக்கிறார்கள் என்றால் வெங்கடாசலபதிக்கு ஒரு கோயில் வேண்டுமானால் கட்டலாம். ஆனால் நாயுடு கூறுவதைப் போலவோ, விஜயபாரதம் கனவு காண்பதைப் போலவோ வெங்கடாசலபதியை உலகளந்த பெருமாளாக்க முடியாது.

உலகளந்த பெருமாளான அமெரிக்கா, தகவல் தொழில்நுட்பப் புரட்சியின் விளைவாகத் தோன்றிய திடீர்வல்லரசல்ல. ஏற்கனவே அரசியல் பொருளாதார, இராணுவத் துறைகளில் உலக மேலாதிக்கத்தைப் பெற்றிருக்கும் வல்லரசான அமெரிக்காவின் கையில் கிடைத்திருக்கும் புதியதொரு ஆயுதம்தான் தகவல் தொழில்நுட்பம்.

இந்தத் தகவல் தொழில்நுட்பமென்பது திடீரென்று ஒருநாள் பில் கேட்ஸின் மீது இறங்கிய பரிசுத்த ஆவியோ, தஞ்சாவூர் சரஸ்வதி மகாலிலிருந்து வெள்ளைக்காரன் திருடிக் கொண்டு போன ஓலைச்சுவடியோ அல்ல. கடந்த 50 ஆண்டுகளுக்கும் முன்னதாகவே ஐரோப்பிய, அமெரிக்க நிறுவனங்கள் உருவாக்கத் தொடங்கிய கணினி எனும் பிரம்மாண்டமான எந்திரத்தில் தொடங்கி அதன் இன்றைய கையடக்க வடிவம் வரையிலும், மோர்ஸ் தந்தியில் தொடங்கி விண்கோள் தகவல் தொடர்பு வரையிலும் இந்தத் தொழில் நுட்பத்தின் வளர்ச்சிக்கு நீண்ட வரலாறு இருக்கிறது. அவற்றின் பின்னே பல ஏகபோக முதலாளிகள் இருக்கிறார்கள். அந்த முதலாளிகளின் வரிசையில் சமீபத்திய சேர்க்கைதான் பில் கேட்ஸ்.

வேறு விதமாகச் சொன்னால் அமெரிக்க வல்லரசு இல்லாமல் கேட்ஸ் இல்லை. ஒரு வேளை கேட்ஸ் இல்லையெனினும் அமெரிக்க வல்லரசு உண்டு.

கழிப்பறை கட்டுவதற்கே உலகவங்கியிடம் கையேந்தும் இந்தியா, வல்லரசுக் கனவு காண்பது ஆண்டி மடம் கட்டிய கதையைவிட முட்டாள்தனமான கனவு.

### முதலாளியாகும் அறிவாளிகளின் கனவு!

இருந்தாலும் அறிவாளிகள் முதலாளிகளாகிவிட முடியும்




அமெரிக்கச் சேவையில் அடிமையின் பெருமிதம்.

என்ற கனவு தொடர்ந்து கொண்டுதானிருக்கிறது. ''சிலிகான் பள்ளத்தாக்கில் 800 இந்திய நிறுவனங்கள் இருக்கின்றன. இன்போசிஸ், விப்ரோ போன்ற இந்திய நிறுவனங்கள் பெரிய அளவு வளர்ச்சி பெற்றுள்ளன. அறிவும், கடின உழைப்பும் இருந்தால் நாமும் சாதிக்க முடியும்'' என்று குடியிருக்க வீடில்லாமல் பேருந்தில் தூங்கும் இந்திய வல்லுனர்களும் கனவு காணத்தான் செய்கிறார்கள். தங்களது கனவையே இந்தியாவின் தேசியக் கனவாகவும் மாற்றுகிறார்கள்.

ஒரு கணினி வல்லுனர் தனது நிறுவனத்தின் ஊழியராக இருப்பதைக் காட்டிலும், ஒரு சிறிய நிறுவனத்தின் முதலாளியாக இருக்கும் பட்சத்தில் அவருடைய ஆற்றல், முன் முயற்சி, உழைப்பு ஆகிய அனைத்தையும் முழுமையாக உறிஞ்சி எடுக்க முடியும் என்பதைப் புரிந்து வைத்திருக்கும் பன்னாட்டு நிறுவனங்களும் தகவல் தொடர்புச் சாதனங்களும் இத்தகைய முதலாளியாகும் வெறியை விசிறி விடுகின்றன.

திறமையும் ஆற்றலும் இருந்தாலும் ஆய்வுக்குத் தேவையான பிரம்மாண்டமான கட்டுமானங்களுக்கு அவர்கள் பன்னாட்டு நிறுவனத்தின் தயவைத்தான் நாடியாக வேண்டும். எனவே நிறுவனம்

*அறிவுப் புரட்சிக்கு, சாம்பல் நிறப் புரட்சிக்குத் தேவையான மூளை எனும் கச்சாப் பொருள் இந்தியாவிடம் ஏராளமாக இருக்கிறது.''*

*விசமத்தனமும் அடிமுட்டாள் தனமும் நிறைந்த, போதையூட்டக் கூடிய இந்த 'வரலாற்று ஆய்வை' ஒதுக்கி விட்டுக் கடைசி வரியை மட்டும் கவனியுங்கள்.*

என்ற முறையில் இவர்கள் சுயேச்சையாக இருந்தாலும் பொருளாதார ரீதியில் பன்னாட்டு நிறுவனங்களைச் சார்ந்துதான் இருக்கிறார்கள். முதலாளித்துவப் பத்திரிகை உலகில் எழுத்தாளரின் சுதந்திரம் எப்படியோ அப்படித்தான் இதுவும்.

இருப்பினும் தனக்குக் கிடைக்கும் எலும்புத் துண்டுகளுக்காக முதலாளித்துவ சட்ட திட்டங்களின் மேன்மையைப் பற்றியும், முதலாளித்துவச் சுதந்திரத்தின் சிறப்பைப் பற்றியும் பிரச்சாரம் செய்யும் அறிஞர்களைப் போலவே நம்முடைய இந்தோ - அமெரிக்கர்களும் தகவல் புரட்சியின் தத்துவத்தைப் பிரச்சாரம் செய்கிறார்கள்.

### அறிவே சொத்தாக - தகவல் பண்டமாக

தகவல் தொழில்நுட்பப் புரட்சியின் தாரக மந்திரம் ''தகவல் சுதந்திரமாக இருக்க விரும்புகிறது''. அதாவது ''அறிவும், தகவலும் எவ்விதக் கட்டுப்பாடுகளுக்கும் உட்படுத்தப்படாமல் உலகெங்கும் பயணம் செய்ய அனுமதிக்கப்படும்போது, தகவலை மக்கள் தாங்களே தெரிவு செய்து கொள்வார்கள். சுதந்திரமான போட்டியில் சரியானது தன்னைத்தானே நிலைநாட்டிக் கொள்ளும்'' என்பது இதன் பொருள்.

'தகவல் தொழில்நுட்பப் புரட்சியின் விளைவாக நமக்குக் கிடைத்திருக்கும் தொலைக்காட்சிப் பெட்டியின் 64 அலைவரிசைகளில் 'சரியான' அரை நிர்வாண நடனத்தையும் 'தேவையான' கார்களையும் தெரிவு செய்யும் வாய்ப்புதான் நமக்குக் கிடைத்துள்ளது என்பது வாசகர்களுக்குத் தெரிந்ததுதான். அது ஒருபுறமிருக்கட்டும்.

''தகவல் சுதந்திரமாக இருக்க விரும்புகிறது'' என்ற இந்த ''தாரக மந்திரத்திற்கு'' இரண்டு ஆழமான உட்பொருள்கள் உள்ளன. ''மூலதனம் சுதந்திரமாகப் பறக்க விரும்புகிறது'' என்பது இதன் முதற்பொருள். அதாவது தேசிய எல்லைகள், சட்டதிட்டங்கள், கட்டுப்பாடுகள் ஏதுமின்றி எந்த நாட்டிற்குள்ளும் நுழையவும் வெளியேறவும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும், நிதி மூலதனக் கும்பல்களுக்கும் தேவைப்படும் சுதந்திரத்தை இது குறிக்கிறது.

இரண்டாவதாக, தகவல் என்பது விற்பனைக்குரிய பண்டமாகவும், அறிவு என்பது தனிநபர் அல்லது நிறுவனத்தின் சொத்தாகவும் கருதப்பட வேண்டும் என்பதைக் குறிக்


படிப்பகம்

www.padippakam.com

கிறது.

இப்படியாக, எந்தத் தகவல் சுதந்திர மாக இருக்க விரும்பியதோ அது இப்போது தனிச் சொத்தாகவும், பண்டமா கவும் மாற்றப்பட்டு விட்டது.

### காப்புரிமை மோசடி!

பொருளுக்கு அல்ல, அந்தப் பொருளின் குறிப்பிட்ட வகைப் பயன்பாட் டுக்குத்தான் காப்புரிமை; கருத்துக்கு அல்ல கருத்தைப் பிரயோகிக்கும் முறைக் குத்தான் காப்புரிமை என்பது அறிவுச் சொத்துடைமை குறித்த சட்டம்.

அதாவது மஞ்சளுக்கு காப்புரிமை கிடையாது - மஞ்சளின் குறிப்பிட்ட வகைப் பயன்பாட்டுக்குக் காப்புரிமை; பூச்சியத்தையும் எண் கணிதத்தையும் உரு வாக்கி வளர்த்த இந்தியாவுக்கும் அரேபி யாவுக்கும் அதற்குக் காப்புரிமை கிடை யாது - அதனடிப்படையில் உருவாக்கப் பட்ட டிஜிட்டல் தொழில்நுட்பத்துக்குக் காப்புரிமை உண்டு.

சமூகத்தின் பொதுச் சொத்தான அறிவைத் தனி உடைமையாக்கும் இந்த அநீதியை இந்தோ அமெரிக்கர்கள் தீவிர மாக ஆதரிக்கிறார்கள். தாங்கள் உரு வாக்கும் ஒரு மென் பொருளுக்குத் தமக்கு அறிவுச் சொத்துடைமை வேண்டும் என்ப தற்காக, அதன் மூலம் சில லட்சம் டாலர் களை உட்கார்ந்த இடத்திலேயே சம்பா திக்க வேண்டும் என்பதற்காக, மனித சமூ கத்தின் அறிவுச் செல்வம் அனைத்தையும் சில பன்னாட்டு நிறுவனங்களின் தனி உடைமையாக மாற்றும் இந்தக் கோட்பாட்டை இவர்களே முன்நின்று பிரச் சாரம் செய்கிறார்கள்.

### நகலெடுத்தால் தண்டனை – களவுக்கோ காப்புரிமை!

இது வெறும் கோட்பாட்டுப் பிரச்சினை அல்ல. அமெரிக்க நிறுவனங்களால் உரு வாக்கப்பட்ட மென்பொருட்கள் உல கெங்கும் சட்டவிரோதமாக நகலெடுக்கப்ப டுகின்றன என்றும் இதனால் 1996-ஆம் ஆண்டில் மட்டும் 11.2 பில்லியன் டாலர் இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்றும் மதிப் பிட்டுள்ளனர். இந்தப் பிரதி எடுக்கும் வேலையில் பாதியளவு அமெரிக்காவிலே யேதான் நடந்துள்ளதெனினும் அங்கே இதைத் தடுக்க இவர்களால் முடிவதில்லை.

ஏழை நாடுகளின் அரசுகளைத் தான் சுலபமாக மிரட்டிப் பணிய வைக்க முடிகி றது. பிலிப்பைன்ஸ் நாட்டின் அரசு அலுவ லகங்களில் தனது மென்பொருளைச் சட்ட விரோதமாக நகலெடுத்துப் பயன்படுத்துகி றார்கள் என்பதைச் சில ஆண்டுகளுக்கு முன் மைக்ரோ சாப்ட் நிறுவனத்தின் 'உளவுப் படை' கண்டு பிடித்தது. இந்தத் 'திருட்டுக் குற்றத்துக்காக' பிலிப்பைன்ஸ் அரசை மன்னித்து விடுவதாகக் கூறிய மைக்ரோ சாப்ட், அந்நாட்டில் கணினி வைத்திருப்போர் அனைவரையும் சோதனை செய்ய போலீசை ஏவிவிட வேண்டுமென பிலிப்பைன்ஸ் அரசுக்கு நிபந்தனை விதித்தது. இதையொட்டி நடத் தப்பட்ட போலீசு சோதனைக்கு அந்நாட்டின் பள்ளிக்கூடங்கள் கூடத் தப்ப வில்லை.

## அறிவே உன் விலை என்ன?

**சமமான கல்வித் தகுதியும் திற மையும் கொண்ட கணினி வல்லுனர்க ளுக்கு (Computer Programmers) வெவ்வேறு நாடுகளில் அளிக்கப் படும் சம்பளம் எவ்வளவு ஏற்றத் தாழ்வாக உள்ளது என்பதை விளக் கும் புள்ளி விவரம் இது. *1996-ஆம்* ஆண்டு நிலவரம்.**

**ஆண்டுச் சம்பளம் – அமெரிக்க டாலரில் (ஒரு டாலர் 46 ரூபாய்)**

| | | |
|---|---|---|
| மேற்கு ஜெர்மனி | - | 61,000 |
| அமெரிக்கா | - | 56,000 |
| பிரான்சு | - | 52,000 |
| சீனா | - | 30,000 |
| சிங்கப்பூர் | - | 32,000 |
| தைவான் | - | 31,000 |
| தாய்லாந்து | - | 12,000 |
| பிலிப்பைன்சு | - | 7,000 |
| இந்தியா | - | 9,000 |

**இந்தியாவில் மென்பொருள் தயா ரிப்புத் தொழிலில் சுமார் இரண்டு லட்சம் பேர் வேலை செய்கின்றனர். தயாரிக்கப்படும் மென்பொருட்களில் ஆகப் பெரும்பகுதி ஏற்றுமதிக்கா னது. ஏராளமான பன்னாட்டு நிறுவ னங்கள் தமது கிளைகளை இந்தி யாவில் துவங்கி, மலிவான சம்ப ளத்தில் இங்கே மென்பொருட்களை உருவாக்கி அமெரிக்காவில் இருக்கும் தங்கள் நிறுவனத்திற்கே ஏற்றுமதி செய்து கொள்கின்றன. இத்தகைய ஏற்றுமதியில் இந்தியாவிலேயே முத லிடம் என்பதைத்தான் தமிழக அரசு சாதனையாகக் குறிப்பிடுகிறது.**

இந்தியாவில் சென்னை போன்ற பெரு நகரங்களில் மைக்ரோ சாப்ட் நிறுவனத்தின் சட்டவிரோத அடியாள் படைகள் சோதனை நடத்தி அபராதம் விதிக்கின்றன. பகிரங்கமாக அமெரிக்க போலீசே களத்தி லிறங்கி சோதனை போடுவதற்கு அனும திக்கும் வகையில் அமெரிக்க புலனாய்வுத் துறையின் (F.B.I.) அலுவலகத்தை டில்லியில் திறக்க பா.ஜ.க. அரசு அனுமதி வழங்கியுள்ளது.

ஒரு இந்தியர் தயாரித்த மென்பொருள் அமெரிக்காவில் சட்டவிரோதமாக நகலெ டுக்கப்பட்டால் இந்திய போலீசு அமெரிக்க அலுவலகங்களில் புகுந்து சோதனையிட முடியுமா என்ற கேள்வியை ''அறிவுச் சொத்துடைமைக்கான உலகச் சட்டம்'' பற்றிப் பேசும் இந்த அறிவாளிகள் எழுப் புவதில்லை. இந்தியா தகவல் தொழில் நுட்ப வல்லரசாகப் போகிறது என்று குறி சொல்லும் இந்த அயோக்கியர்கள் அமெ ரிக்காவின் உலக ஆதிக்கத்திற்கு பின்பாட்டுப் பாடுவது மட்டும்தான் இதன் நடைமுறைப் பயன்பாடு.

### பெங்களூர் – பள்ளமா, பள்ளத்தாக்கா?

இந்தியாவின் சிலிகான் பள்ளத்தாக்கு என்று அழைக்கப்படும் நகரம் பெங்களூர். சென்னையையும் பள்ளத்தாக்கு ஆக்கு கிறேன் என்று கருணாநிதியும், ஐதரா பாத்தில் நாயுடுவும் கையில் மண்வெட்டி யுடன் தீவிரமாகத் தோண்டியபடி இருக்கி றார்கள். முதல் பள்ளத்தாக்கான பெங்க ளூரின் 'சாதனை'யைப் பார்ப்போம்.

1990 முதல் 1993 வரையிலான காலத்தில் 23 கோடி டாலர் அந்நியச் செலா வணியை ஈட்டியிருக்கிறது பெங்களூர்.

மைக்ரோ சாப்ட், ஐ.பி.எம்., ஓராகின், ஹெவ்லட் பாக்கார்டு போன்ற நிறுவனங்க ளிடம் சம்பளத்திற்கு வேலை செய்தும், அந்த நிறுவனங்களுக்கு 'ஆர்டரின் பேரில்' மென்பொருள் செய்து கொடுத் தும்தான் இந்த அந்நியச் செலாவணி ஈட்டப்பட்டிருக்கிறது.

மென்பொருட்கள் (Software Package) தயாரிக்கும் ஆற்றலுள்ள வல்லுநர்கள் பலர் இருந்தும் மென்பொருளைத் தயா ரித்து இந்திய அளவிலோ உலகளவிலோ இவர்களால் விற்பனை செய்ய முடிய வில்லை. இதற்கு 2 காரணங்கள் உள்ளதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். புதிதாக மென்பொருளைத் தயாரித்தால் அதை மிக விரைவாக உலகம் முழுவதும் சந்தைப்ப டுத்த வேண்டும். அதற்குத் தேவையான மூலதன வலிமையோ, விற்பனை வலைப் பின்னலோ இந்திய நிறுவனங்களிடம் இல்லை. இந்தியாவிற்குள் மட்டும் விற்பனை செய்து போட்ட முதலை எடுக்க முடியாது. எனவேதான் டி.வி.எஸ். நிறுவ னத்தை நம்பியிருக்கும் அம்பத்தூர் சிறு தொழிற்சாலைகளின் நிலையில் இருக்கி றது பெங்களூர். அதாவது அமெரிக் காவின் சிலிகான் பள்ளத்தாக்கிற்குள்


படிப்பகம்

www.padippakam.com

அடங்கிய ஒரு பள்ளம் — அவ்வளவே!

**ஜுராசிக் பூங்காவின் பல்லிகள்!**

உலக மென்பொருள் விற்பனையில் மூன்றில் இரண்டு பங்கைத் தம் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் அமெரிக்காவின் தேசங்கடந்த தொழிற்கழகங்கள், தங்களது ஏகபோகத்தை தக்கவைத்துக் கொள்ளவும் விரிவாக்கவும் தங்களுக்குள் கூட்டு சேர்ந்து கொள்கின்றன. தகவல் தொழில் நுட்பப் பொருட்களின் ஆயுட்காலம் மிகக் குறைவாக இருப்பதாலும், நகலெடுக்கும் அபாயத்தைத் தடுக்க முடியாததாலும் புதுமைகளை இடையறாது புகுத்துவதன் மூலம் தம் ஏகபோகத்தைத் தக்க வைத்துக் கொள்கின்றன. புதிய சில மாற்றங்களுடன் ஆண்டுதோறும் விண்டோஸ் மென்பொருள் அறிமுகப்படுத்தப்படும் காரணம் இதுதான்.

உலகச் சந்தையை விழுங்குவதற்கான ஏகபோகங்களின் இந்த வெறித்தனமும் அவசரமும் 'ஆராய்ச்சி - உற்பத்தி - விநியோகம் - விளம்பரம் - நுகர்வு' என்ற அனைத்திலும் தொற்றிக் கொள்கிறது. ஒரு மென்பொருள் உற்பத்தி செய்யப்பட்டு விட்டால் அது ஆறு மாதங்களுக்குள் உலகம் முழுவதிலும் சாத்தியப்பட்ட அளவு அதிகமான நுகர்வோரிடம் விற்கப்பட்டு விடுகிறது.

ஏகபோகங்களின் இந்த ஜுராசிக் பூங்காவில் தாங்களும் டினோசர்களாக வளர்ந்து விட முடியும் என்று பல்லிகள் கனவு காண்பது எத்தகைய கேலிக் கூத்து!

சபீர் பாட்டியா தனது கண்டுபிடிப்பான ஹாட் மெய்லை 400 மில்லியன் டாலருக்கு பில் கேட்சிடம் விற்றார்; ஜங்லி காம் என்ற இணைய வணிக நிறுவனத்தை அமேசான் காம் 200 மில்லியன் டாலருக்கு வாங்கியது; ரீடிஃப் என்ற இணைய வணிக நிறுவனத்தின் கணிசமான பங்குகளை இன்டெல் நிறுவனம் வாங்கியிருக்கிறது. இன்னும் இந்தியாவில் ஓரளவு வெற்றியடைந்த இணைய வணிக நிறுவனங்களையும் பன்னாட்டு நிறுவனங்கள் விலை பேசிவிட்டதை சமீபத்தில் அவுட் லுக் வார ஏடு வெளியிட்டிருந்தது.

தகவல் தொழில் நுட்பத் துறையில் இந்தியப் பன்னாட்டு நிறுவனங்களை உருவாக்கி அதன் மூலம் இந்தியாவை வல்லரசாக்கும் மகா சாம்ராச்சியத் திட்டத்தின் உண்மையான நிலவரமும், அறிவாளிகள் முதலாளிகளாகும் அலிபாபா கதையின் முடிவும் இதுதான்.

**இந்திய மூளைக்கு கிராக்கி ஏன்?**

என்ன இருந்தாலும் அமெரிக்கா, ஜெர்மனி, பிரிட்டன் எனப் பல நாடுகளும் இந்திய வல்லநர்களை வரவழைக்க போட்டி போடுகிறார்கள் என்றால் இந்திய மூளையில் ஏதோ சிறப்பு இருக்கிறது என்றுதானே அர்த்தம் எனச் சில ஆற்ற மாட்டாத தேசபக்தர்கள் கேட்கலாம். "100 கோடி மூளைகள்" என்று இந்தியா டுடே மலரே முன்னுரை எழுதியிருக்கிறதே!

"வெள்ளைக்காரனே நம்மைக் கொண்டு போகிறான் என்றால் நம் உடம்பில் ஏதோ விசேசம் இருக்கிறது" என்று ஆப்பிரிக்க கறுப்பின மக்களும், இலங்கைக்குப் போன தமிழர்களும் யோசித்ததாகத் தெரியவில்லை. அவர்கள் உழைப்பாளிகள். அவ்வளவு 'ஆழமாக' யோசிக்கத் தெரியாதவர்கள்.

மேலும் அவர்களை உதைத்தும் அடித்தும் உடலுழைப்பை வாங்கி




**சென்னையில் சிலிகான் பள்ளத்தாக்கை உருவாக்கச் சபதமெடுத்திருக்கும் கலைஞர் — உருவாக்குவது பள்ளத்தாக்கா? பள்ளமா?**

விடலாம்; அப்படித்தான் அமெரிக்காவை உருவாக்கிக் கொண்டார்கள். மூளையுழைப்பை அப்படி வாங்க முடியாதே. அறிவாளிகளை முட்டாள்களாக்கிய பிறகு தானே மூளை உழைப்பை கறக்க முடிகிறது! அதற்குத்தான் இந்திய மூளை மகிமை குறித்த பிரச்சாரம்.

வீண் ஜம்பம் எதற்கு? உண்மையை நேருக்கு நேர் சந்திப்போம். இந்தியச் சிறுநீரகத்தைப் போலவே இந்திய மூளையும் மலிவு விலைக்குக் கிடைக்கிறது என்பதுதான் இந்திய அறிவாளிகளுக்குத் தோன்றியுள்ள கிராக்கியின் இரகசியம். ஜெர்மானியர்களை விடவும் அமெரிக்கர்களை விடவும் இந்தியர்கள் அறிவிற்சிறந்தவர்களென்றால் நமக்கும் மகிழ்ச்சி தான். ஆனால் அத்தகையவர்களுக்கு அடிமாட்டுச் சம்பளம் வழங்கப்படுவது ஏன்?

தினமணி வெளியிட்டுள்ள மாணவர் மலரில் அடுத்த ஆண்டில் மட்டும் அமெரிக்காவில் 8.75 லட்சம் கணினி வல்லுநர்கள் தேவைப்படுவதாகவும், ஆனால் 27,000 அமெரிக்கர்கள் தான் அதற்குரிய கல்வித் தகுதி பெற்றிருப்பதாகவும் மீதி வேலைக்கு ஆள் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளது.

அடுத்த நூற்றாண்டில் உருவாகக் கூடிய எதிரியை ஒழிக்க இப்போதே ஆயுதம் தயாரிக்கும் அமெரிக்காவுக்கு கணினி வல்லுனர்களைத் தயாரிக்கத் தெரியாத மர்மம் என்ன?

**சிலிகான் பள்ளத்தாக்கல்ல, சம்பல் பள்ளத்தாக்கு!**

முதலாவதாக, கணினி வல்லுனராக ஒரு மாணவனைப் பயிற்றுவிக்க அமெரிக்க அரசும், பன்னாட்டு நிறுவனங்களும் செலவிட வேண்டிய தொகை இந்தியாவில் அதே தகுதியுள்ள ஒரு மாணவனைத் தயாரிக்கும் செலவை விடப் பன்மடங்கு அதிகம். அரசுப் பல்கலைக் கழகங்களில் இந்திய மக்களின் வரிப் பணத்திலோ, சுயநிதி நிறுவனங்களில் தன் சொந்தச் செலவிலோ இந்திய மாணவன் படித்துக் கொள்வதால் பல கோடி டாலர்கள் அமெரிக்காவுக்கு மிச்சம்.

கணினித் துறையில் அமெரிக்கர்கள் மத்தியில் செயற்கையான ஒரு தொழிலாளர் பற்றாக்குறையை அரசும் முதலாளிகளும் உருவாக்குகின்றனர் என்றும் குறைந்த கூலியில் வெளிநாட்டவர்களை குறிப்பாக இந்தியர்களை இறக்குமதி செய்வதற்கான சதிதான் இது என்றும் சிலிகான் பள்ளத்தாக்கின் அமெரிக்கத் தொழிற்சங்கங்கள் குற்றம் சாட்டுகின்றன.

ஜெர்மனிக்குத் தற்போது தேவைப்படும் கணினி வல்லுனர்கள் 12,600 பேர். அதற்குரிய தகுதி படைத்த ஜெர்மானியர்கள் 32,000 பேர் இருக்கும் போது ஜெர்மன் முதலாளிகளும் அரசும் வேண்டுமென்றே இந்தியர்களை இறக்குமதி செய்கின்றனர் என்று ஜெர்மன் தொழிற்சங்கங்கள் குற்றம் சாட்டுகின்றன.

ஒரே தகுதியுள்ள அமெரிக்க ஊழியரைக் காட்டிலும் இந்திய ஊழியருக்கு வழங்கப்படும் சம்பளம் மிகக் குறைவு. சம வேலைக்குச் சம ஊதியம் கேட்பவர்களுக்கு அங்கே வேலை இல்லை. மிகவும்

www.padippakam.com

தேர்ச்சி பெற்ற, நிர்வாகப பதவி களில் இருக்கின்ற இந்தியர் களைத் தவிர மற்றவர்கள் அனைவரும் அங்கே காண்டி ராக்டு தொழிலாளிகள் தான்.

'ஓய் டு கே' பிரச்சினையை சரி செய்வதற்காக இந்தியா, சீனா, ரசியா போன்ற நாடுகளி லிருந்து வரவழைக்கப்பட்ட ஆயிரக்கணக்கான இளைஞர் களை ஹெவ்லட் பாக்கார்டு எனும் பன்னாட்டு நிறுவனம் எப்படி நடத்தியது என்பது இதற்கொரு சான்று. தங்க இடம் கொடுத்து, சோறு போட்டு, சம்பளமாக மாதம் 250 டாலர் கொடுத்தது. இது கேவல மான கொத்தடிமை முறை என்று அமெ ரிக்க தொழிற்சங்கங்கள் எதிர்த்தன. இருந்தும் பயனில்லை.


அமெரிக்கச் சொர்க்கத்தில் ஒண்ட இடமில்லாமல் பேருந்தில் தூங்கியபடி கனவு காணும் கணினிக் 'கலைஞர்கள்'.

இன்று எம்.சி.ஏ. பட்டம் பெற்ற ஒரு இந்தியரின் சராசரி மாத வருவாய் சிலிகான் பள்ளத்தாக்கில் 3000 டாலர். அமெரிக் காவின் வறுமைக்கோட்டுச் சம்பளத்தைக் காட்டிலும் இது கொஞ்சம் அதிகம். அவ்வ ளவுதான். இந்தக் கொத்தடிமை நிலை ''முதல் உலகத்திற்குள் ஒரு மூன்றாவது உலகம்'' என்ற அழைக்கப்படுகிறது.

### இணையத்தின் மூலம் 'இணையற்ற' சுரண்டல்!

இந்தச் சுரண்டலின் இன்னொரு வடிவம் 'மூன்றாம் உலகிற்குள் நுழையும் முதல் உலகம்'. இந்தியா போன்ற ஏழை நாடுகளில் மேலை நாடுகளைக் காட்டிலும் தொழிலாளர்களின் ஊதியம் மிகக் குறை வாக இருப்பதால் பன்னாட்டு நிறுவ னங்கள் ஏழை நாடுகளில் தொழில் தொடங்கிச் சுரண்டுவது என்பது நீண்ட நாட்களாக இருந்து வரும் ஒரு ஏகாதிபத் தியச் சுரண்டல் முறை.

மூலதனமும் உழைப்புப் பிரிவி னையும் சர்வதேசமயமாகி வரு கின்ற உலகமயமாக்கம் என்ற இன்றைய சூழலில் பொருள் உற்பத்தியே ஒரு புதிய திட்டத்தின் அடிப்படையில் உலகளவில் மறு ஒழுங்கமைப்பு செய்யப்பட்டு வரு கிறது. தகவல் தொழில்நுட்பப் புரட் சியை - குறிப்பாக இணையத்தை - பயன்படுத்தி மிகப் பிரம்மாண்ட மான அளவில் ஏழை நாடுகளைச் சுரண்டும் ஒரு வேலைப் பிரிவினை முறையை பன்னாட்டுத் தொழிற்கழ கங்கள் உருவாக்கியிருக்கின்றன.

'ஈ - காமர்ஸ்' என்ற பெயரில் இணையத்தின் மூலம் வர்த்தகத்தை நடத்திக் கொள்ளலாம் என்பதன் அங்கமாக, தொலைதூரத் தொழிலாளர்கள் (Tele-workers) அல்லது தொலைதூர உழைப்பு (Tele - working) என்றொரு ஏற்பாட்டின் மூலம், ஏழை நாடுகளின் படித்த வர்க்கத்தினரைச் சுரண்டும் புதிய உழைப்புப் பிரிவினை ஏற்பாடுதான் இது.

தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியானது புவியியல் ரீதியான **தூரம்** (distance) என்பதைப் பல விசயங்களில் பொருளற்ற தாக்கிவிட்டது. பொருட்களை நேரடியாக உற்பத்தி செய்கின்ற நடவடிக்கைகளைத் தவிர, அவை சார்ந்த பிற அனைத்து வேலைகளையும் எந்த நாட்டில் வேண்டு மானாலும் செய்து கொள்வதற்கு இத்தொ ழில்நுட்பம் வாய்ப்பளிக்கிறது.

அதாவது நியூயார்க்கில் உள்ள ஒரு நிறுவனம் கணக்குகள் வைத்துக் கொள்வது, கடிதப் போக்குவரத்து, நிர்வாக வேலைகள், விற்பனை ஏற்பாடுகள், விளம்பரத் தயாரிப்பு வேலைகள், அரசுட னான கடிதப் போக்குவரத்து போன்ற தனது அலுவலக வேலைகள் அனைத்தையும் இணையத் தொடர்பின் மூலமாக சென்னையில் உள்ள ஊழியர்களை வைத்து செய்து கொள்ள முடியும். நியூயார்க் நகரில் உள்ள தனது அலுவலகக் கட்டிடத்தில் பணியாற்றும் ஊழியர்களை வைத்து இந்த வேலையைச் செய்வதற்கும், சென்னையில் செய்வதற்கும் ஒரு நிமிடம் கூட கூடுதலான நேரம் தாமத மாகாது.

***கல்வியைத் தனியார்மயமாக்க வேண்டும் என்று ஆங்கிலப் பத்திரி கைகளில் கட்டுரை எழுதும் அறி ஞர்கள் சிலர், கணினிப் பயிற்சி மட்டும் இலவசமாக அளிக்க வேண்டும் என்று எழுதியதைப் படித்தபோது ஆச்சரியமாக இருந் தது. பின்னர்தான் எலி அம்மணமாக ஓடுவதன் காரணம் புரிந்தது.***

இந்த ஏற்பாட்டின் கார ணமாக அச்சுத் தொழில் முதல் வக்கீல் குமாஸ்தா, மருத்துவர் களது உதவியாளர்கள் போன்ற வேலைகள் வரை அனைத்தையும், தேவையான தரத்தில் குறைவான கூலியில் செய்து கொள்ள முடியும்.

எடுத்துக்காட்டாக, சென்ற மே மாதம் வெளியான தினமணி மாணவர் மலர், இங்கிருந்தபடியே அமெ ரிக்க மருத்துவமனைகளின் உதவியாள ராகப் பணியாற்றும் 'மாபெரும்' வேலை வாய்ப்பைப் பற்றி எழுதியிருந்தது.

அமெரிக்காவில் மக்களுக்கு மருத்துவ வசதியை அரசு அளிப்பதில்லை. எனவே மருத்துவச் செலவுக்காகக் காப்பீடு (Health Insurance) செய்து கொள்ளாவிட்டால் மருத்துவம் பார்த்துக் கொள்வது அநேக மாக முடியாது. எனவே நோயாளியின் நோய், சிகிச்சை விவரம், கட்டணம் போன்றவற்றை இன்சூரன்சு நிறுவனங்க ளுக்கு மருத்துவர்கள் அறிக்கையாகத் தர வேண்டும். இந்த அறிக்கையைப் பரிசீ லனை செய்து சிகிச்சைக் கட்டணத்தை காப்பீட்டு நிறுவனங்கள் அளிக்கும். மருத் துவர்கள் இந்த அறிக்கையை ஒலிநா டாவில் பேசிப் பதிவு செய்து விடுவர் (நேர மின்மை காரணமாக). அதைக் கேட்டு கணி னியில் தட்டச்சு செய்வதுதான் மெடிக்கல் டிரான்ஸ்கிரிப்ஷன் எனும் பணி.

அமெரிக்காவில் சுமார் 2½ லட்சம் பேர் இந்த வேலையைச் செய்து வருகின்றனர். இவர்களில் பெரும்பாலோர் 50 வயதுக்கு மேற்பட்ட வேலை நீக்கம் செய்யப்பட்ட அல்லது ஓய்வு பெற்ற ஊழியர்கள், இதற்குத் தரப்படும் ஊதியம் மாதம் 2000 டாலர். இது அங்கே வறுமைக்கோட்டு ஊதியம். இதே வேலை மாதம் 100 டாலர் (4000 ரூபாய்) என்ற ஊதிய விகிதத்தில் சென்னையிலிருந்தும் மற்ற பெரு நகரங்களிலிருந்தும் செய்து தரப்ப டுகிறது.

அமெரிக்க ஏழைகளின் வயிற்றி லடித்தும், இந்திய இளைஞர் களைச் சுரண்டியும் அமெரிக் காவின் பெரிய மருத்துவம னைகள் ஒரு ஆண்டில் மட்டும் இப்படி மிச்சம் பிடிக்கும் தொகை ரூ. 25,000 கோடி.


படிப்பகம்

www.padippakam.com

வாசகர்கள் புரிந்து கொள்ள ஏதுவாகத் தரப்பட்ட ஒரு எடுத்துக்காட்டு மட்டுமே இது. இதுபோன்ற எண்ணிறந்த துறைகளில் அமெரிக்க, ஐரோப்பிய ஏகபோக நிறுவனங்களுக்கு அத்துக்கூலிக்கு ஆள் கிடைக்கக்கூடிய 'அறிவாளிகள்' நிறைந்த நாடாக இந்தியா அடையாளம் காணப்பட்டிருக்கிறது.

இந்த தொலைதூர ஊழியர்கள் அனைவரும் காண்டிராக்ட் கூலிகள் தானேயொழிய எந்த ஒரு நிறுவனத்தின் ஊழியர்களும் அல்லர். 'வீட்டிலிருந்தபடியே வேலை வாய்ப்பு' என்ற பெயரில் படித்த பெண்களை மிகக் குறைந்த கூலிக்கு இணையத்தின் மூலம் அமெரிக்க நிறுவனங்கள் வேலை வாங்கும் கொடுமை ஏற்கனவே பம்பாய் போன்ற நகரங்களில் துவங்கி விட்டது. பீடி சுற்றும் பெண்கள் சுரண்டப்படும் வடிவம்தான் இது.

**கரும்பலகைக்குக் கட்டணம்**
**கணினிப் பயிற்சி இலவசம்!**

கல்வியைத் தனியார்மயமாக்க வேண்டும் என்று ஆங்கிலப் பத்திரிகைகளில் கட்டுரை எழுதும் அறிஞர்கள் சிலர், கணினிப் பயிற்சி மட்டும் இலவசமாக அளிக்க வேண்டும் என்று எழுதியதைப் படித்தபோது ஆச்சரியமாக இருந்தது. பின்னர்தான் எலி அம்மணமாக ஓடுவதன் காரணம் புரிந்தது.

பொதுத் தொலைபேசியகங்கள் போல இணையத் தொடர்பகங்களை எங்கும் உருவாக்குவது, தொலைபேசித் துறையைத் தனியார் மயமாக்குவதன் மூலம் இணையத்தின் அலை அகலத்தையும் வேகத்தையும் அதிகப்படுத்துவது, சிறு நகரத்திற்கும் இணையத்தை கொண்டு செல்வது... எல்லாம் எதற்காக? நாங்குநேரியிலோ, தருமபுரியிலோ உள்ள மாணவர் இணையத்தின் மூலம் லண்டன் நூலகத்தில் அறிவைத் தேடும் அறிவாளியாக்குவதற்காகவா, அல்லது லண்டன் நிறுவனத்திற்கு அறிவுக் கூலியாக, மூளை உழைப்பாளியாக அவனை மாற்றுவதற்காகவா?

ஏதோ ஒரு வகையில் வேலை வாய்ப்பு உருவானால் நல்லதுதானே என்று வேலையற்ற இளைஞர்கள் எண்ணலாம். இந்த வேலை வாய்ப்பு உங்களை வாழ்க்கை முழுவதும் தினக்கூலியாக வைத்திருக்கும் வேலை வாய்ப்பு. உங்கள் உழைப்பின் திறன் உறிஞ்சப்பட்டு, உழைப்பில் இளைஞர்களுடன் போட்டியிட முடியாத நடுத்தர வயதை எட்டும் போது உங்களைக் குப்பையைப் போல ஒதுக்கித் தள்ளிவிடக் கூடிய வேலை வாய்ப்பு.

சொந்த நாட்டு ஏழைத் தொழிலாளிக்கு 2000 டாலர் கொடுப்பதை விட, அவன் பட்டினியால் செத்தாலும் இந்தியாவில் 100 டாலருக்கு அந்த வேலையை முடிக்கலாம் என்று கணக்குப் போடும் அமெரிக்க முதலாளி, நாளை 50 டாலருக்கு இதே வேலையை வங்காள தேசத்தில் முடிக்கலாம் என்றால் உங்களுக்கு இரக்கம் காட்டவா போகிறான்?

வேலை போய்விட்டதென்றால், இந்தியாவிலிருந்து ஒரு ஆப்பிரிக்க நாட்டிற்கு குத்தகை மாற்றப்பட்டு விட்டதென்றால் யாரை எதிர்த்துப் போராடுவது? யாரிடம் கோரிக்கை வைப்பது?

பெரிதாகப் பீற்றிக் கொள்ளப்படும் இந்த கணினிப் புரட்சி, சாம்பல் நிறப் புரட்சி — அறிவுப் புரட்சி என்பது அறிவாளிகளை, படித்த மூளை உழைப்பாளிகளை நாளை எங்கே கொண்டு சென்று நிறுத்தப் போகிறது தெரியுமா?

இன்றைய பொழுதுக்கு வேலை கிடைக்குமா என்ற ஏக்கத்துடன், விடிந்தும் விடியாத காலைப் பொழுதில், கட்டிடத் தொழிலாளிகள் கூட்டம் கூட்டமாக நிற்கிறார்களே, அது நெடுஞ்சாலை முச்சந்தி; மூளை உழைப்பாளிகள் நிற்கவிருப்பது தகவல் நெடுஞ்சாலையின் முச்சந்தி.

**– தொடரும்**

---

# விளையும் பயிர்...

தி.மு.க. வட்டச் செயலாளர் அலுவலகம். சைக்கிள் கடை, அய்யன் திருவள்ளுவர் படிப்பகம் எல்லாம் ஒரே அமர்க்களப்பட்டது மணி சைக்கிள் கடை. கையில் முரசொலியை வைத்துக் கொண்டிருந்த நாகப்பனின் குரல் பிரேம் பெண்டு எடுக்கும் சத்தத்தையும் தாண்டியது, "தமிழ், இன உணர்வுங்கறது தி.மு.க.காரன் ரத்தத்துல ஊர்னது, கண்ட பன்னாடப் பசங்களும் தலைவரப் பாத்து பேசுறான். கலைஞருக்கு இல்லாத தமிழ் உணர்வு இந்த நாட்ல எவங்கிட்ட இருக்கு காட்டு பாக்கலாம்." சொடுக்குப் போட்டார் மணி. அங்கேயும், இங்கேயும் அலைந்து மேசை டிராயரைத் திறந்து பார்த்து ஏமாந்த மணி எரிச்சலுடன் "அதெல்லாம் கெடக்கட்டும், நாளைக்கு சொதந்திர தினம். ஒன்றியம் வர்றாரு. மிட்டாய் தரணும்னு ரெண்டு பாக்கெட் சாக்லெட் வாங்கி வச்சிருந்தேன் காணும்யா.. பாத்தியா..."

"இல்லையே மணி. எதுக்கும் பஞ்சர் ஒட்டற பயல கேட்டியா?" என்றார் நாகப்பன்.

மணியின் பார்வையைக் கண்டவுடனேயே "அண்ணே நான் அந்தப் பக்கமே போகல, நேத்து கொடி கட்டுறதுக்காக நாகப்பன் அண்ணனும், முத்து, வேலு எல்லாந்தான் அங்க உக்காந்துவேல பாத்தாங்க" என்று கீழ்ப்பார்வை பார்த்தபடி டியூபைத் தேய்க்க ஆரம்பித்தான் பஞ்சர்.

அவன் அருகே போன மணி "ஏய் மயிறு உன்ன என்னத்துக்கு வுட்டுட்டுப் போறேன். இதெல்லாம் பாக்கிறதில்ல. நேத்து நாலாவது வார்டு பசங்க தோரணம் கட்ட வந்தானுங்க எடுத்துட்டு போயிட்டானுவளோ"

"மணி நம்ப முடியாது, செஞ்சாலும் செஞ்சிருப்பானுவ. எல்லாம் கட்சியில புதுசா சேர்ந்த பசங்க. நம்மகிட்டேயே தள்ளிகிட்டு போயிட்டு அவனுக வார்டுல மிட்டாய் கொடுத்தாலும் கொடுப்பானுவ" வேறு முகாந்திரம் கொடுத்தார் நாகப்பன்.

"எல்லாம் லைன்ங்கர பசங்க. மட்டமான பசங்கப்பா! தெரியாமய்யா ஒன்றியம் அங்க 4-வது வார்டுல கொடியேத்த வந்தப்ப கொடிய பாக்காம குனிஞ்சு, குனிஞ்சு பையப் பார்த்துகிட்டே இருந்தாரு"

நாகப்பனும் சேர்ந்து கொள்ள அவசரமாக கொல்லைப் பக்கம் போன மணிக்கு அதிர்ச்சியாய் இருந்தது. மணியின் மகன் ராமு கை நிறைய சாக்லெட்டுடன் பக்கத்தில் இருந்த பையன்களிடம் பங்கு போட்டுக் கொண்டு, "ஐயாதாண்டா தலைவர்னு" பேசிக் கொண்டிருக்க, பின்னால் வந்து கொண்டிருந்த துணை வட்டச் செயலாளர் மூர்த்தி கண்டும் காணாதது போல "என்னான்னே சாக்லெட் எடுத்தது யாருன்னு கண்டுபுடிச்சிட்டீங்களா?" என்று சீண்டினான்.

"சும்மா இரு மூர்த்தி. வெளிய சொல்லாத வெட்கக்கேடு, எல்லாம் நம்பப் பயதான். வேற போய் வாங்கியாந்துரு.." என்று கடைக்குள் நுழையவும். "அது தி.மு.க.காரன் ரத்தத்துல ஊர்னதுயா... வெர ஒண்ணு போட்டா சொற ஒண்ணா மொளய்க்கும்" என்று நாகப்பன் வாய் திறக்க, மணி கடுப்பாகி "என்னாப்பா இப்ப ஊர்ல நடக்காததா நடந்திடுச்சி. இதுக்குப் போயி பெரிய இலக்கணம் பேசிகிட்டு இருக்க. போய் கொடி மரம் நட்ற வேலைய பாரு போய்யா..." என்று எரிந்து விழுந்தான்.

● சுடர்விழி

படிப்பகம்

www.padippakam.com



சிறுகதை

# ஆறடி நிலம் கூட...

சிவசுப்ரமணிய ஜெயசேகர்

க்ர்ர்... ட்ட்டக்... க்றீச்... அதிகாலையிலேயே கொல்லைப் புறத்திலிருந்து சப்தம் எழுந்தது. என்னவாயிருக்கும் என்று யோசித்தவாறு அசதியுடன் பல் தேய்க்கக் கிளம்பியபோதுதான் நேற்று சேப்பான் சொல்லியது ஞாபகத்திற்கு வந்தது. ''ஐயா நாளைக்கு நம்ம ஆத்துல மிஷினு வைச்சு மண்ணு நோண்டப் போறாங்களாம்!!'' ஓகோ! ஆற்றைத் தூர் வாரி ஆழப்படுத்தும் பணி ஆரம்பமாகி விட்டதோ?

கொல்லையின் வேலியை நோக்கி நகர்ந்து பின்னால் உள்ள ஆற்றை எட்டிப் பார்த்தேன். சத்தம் இன்னமும் அதிகமாகக் கேட்டது. யந்திரம் மண் வாரி இறைப்பதைப் பார்ப்பதற்கு கிராமத்து மக்கள் காலையிலேயே ஆற்றுக்குள் இறங்கி ஓடுவது தெரிந்தது. இதுபோன்ற இயந்திரங்கள் நம் எல்லோருக்கும் புதிதுதானே; ஆர்வம் எழுவதில் வியப்பில்லையே. ஆற்றுக்குள் ஓடுபவர்களில் நாகராஜன் உருவம் தென்பட்டதும் ''நாகராஜன் எங்க வேல நடக்குது'' என்றேன்.

''ஐயா! சுடுகாட்டுக்குப் பக்கத்துல ஆத்துக்குள்ள எறங்கியிருக்குங்கோ, நம்ம செல்லப்ப நாயக்கர் தோட்டத்துக்கு பின்னாடிங்க!'' என்றவாறு என் அனுமதிக்காகத் தயங்கி நின்றார். நான் அவரை போகும்படி சொல்லிவிட்டு பல் தேய்த்து முகம் கழுவி யந்திரத்தின் பணி பார்க்க கிளம்பினேன்.

தண்ணியில்லாத ஆற்றில் முகம் கழுவ இயலாத வானம் இன்னமும் விடியற்கால மங்கலாகவே இருந்தது. வாசலைக் கடந்து, சாலை வழியே சுடுகாட்டுப் பக்கம் நடந்தேன். சுடுகாடு எங்கள் ஊரின் கடைசி எல்லை எனவும் கூறலாம். அடுத்த ஊரின் ஆரம்பம் எனவும் கூறலாம்.

சாதி இந்துக்களின் சுடுகாடு மூங்கில் முள் வேலி வைத்து நன்கு அடைக்கப்பட்டிருந்தது. அதற்கு அடுத்து இருந்த புறம்போக்கில் அடைத்துப் பயிரிட்டிருந்த செல்லப்ப நாயக்கரின் இடம் இயந்திரத்தால் பறிக்கப்பட்டிருந்தது. சிவந்துபோன கண்களுடன் அவர் காச்மூச் என்று கத்திக் கொண்டிருந்தார். அவருடைய தோட்டத்து மரங்கள் பல வேருடன் பிடுங்கி எறியப்பட்டிருந்தன. அதற்கு அடுத்து இருந்த காலனி மக்களின் சுடுகாடு இருந்த இடம் தெரியாமல் தோண்டப்பட்டிருந்தது. சிறிய முக்கோண வடிவத் துண்டு நிலம், ஏற்கனவே எம்.ஆர்.எல். ஆலைக்குச் செல்லும் லாரிகளுக்கு உதவியாகச் சாலை அகலப்படுத்தப் பட்டபோது கொஞ்சம் தன் இடத்தை தானம் கொடுத்த சுடுகாடு இப்போது பாசனப் பொதுப் பணித் துறையினரின் நீள, அகலங்களுக்கு அஞ்சி மீதமிருந்த இடத்தையும் பறிகொடுத்திருந்தது. இப்பேது சாலைக்கும் ஆற்றிற்கும் இடையே இரண்டு அடி அளவில்தான் இடம் இருந்தது. காலுக்கடியில் சரியும் மண்ணில் சாகசம் செய்த வாறு மக்கள் கூட்டம் வேடிக்கை பார்த்தபடி நின்றிருந்தது.

அப்படியே இங்க நோன்றப்ப ஒரு மண்ட ஓடும், எலும்பும் வந்துச்சு, அத அப்படியே தூக்கிக் கடாசிட்டாங்க'' யாரோ சொல்ல கூட்டம் அதையும் ஆவலுடன் கேட்டுக் கொண்டிருந்தது.


''நம்ம காலனி சுடுகாடு சுத்தமா போச்சே'', என்றான் வாலிபன் ஒருவன் வருத்தத்துடன். ''அட நீ ஏந்தம்பி சுடுகாட்டப்பத்தி கவலப்படுற, நீ இங்கவர ரொம்ப காலமாகும். அதுக்கு முன்னாடி பல நரைச்ச தல காத்திருக்குல்ல'' என சற்று வயதான ஒருவர் கிண்டலடிக்க கூட்டம் சிரித்தது. எந்தவித அச்சமும் இல்லாமல் பாயும் மூர்க்கமான மிருகத்தைப் போல யந்திரம் வேலை செய்து கொண்டிருந்தது. அளந்து கொடுக்கப்பட்டிருந்த கரையை புல்டோசர்கள் இடித்துத் தள்ள, யந்திரக்கை மண்ணை அள்ளி அள்ளிக் குவித்தது.

ஆர்வத்துடன் வாயைப் பிளந்தபடி அனைவரும் பார்த்துக் கொண்டிருந்தனர். இயந்திரத்தின் மீதான மலைப்பு குறைந்து சற்றைக்கெல்லாம் ஒருவித துர்நாற்றத்தை உணர ஆரம்பித்தது என் நாசி. கூடியிருந்தவர்களில் யாரும் அதைக் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை. சுற்றும் முற்றும் பார்த்தேன். நேற்றோ அதற்கு முன் தினமோ ஏதோ வாகனத்தில் அடிபட்டிருக்க வேண்டும். நாயொன்று வாயைப் பிளந்தபடி சாலையோரம் கால்களைப் பரப்பிக் கொண்டு கிடந்தது.

இயந்திரத்தின் இரைச்சல் மற்றும் கூட்டம் காரணமாக காக்கைகளைக் காண இயலவில்லை. ஆனால் ஈக்கள் மொய்த்துக் கிடந்தது. அந்தக் காட்சியும், துர்நாற்றமும் எனக்குக் குமட்டிக் கொண்டு வந்தது. அதைப் பற்றிய கவனமின்றி நிற்கும் கூட்டத்தின் மீது எரிச்சலும், கோபமும் வந்தது. சட்டென்று கார்த்தியும் கண்ணனும் தெரிந்த முகமாகத் தென்பட்டார்கள். ''டேய் கார்த்தி யார் நாய்டா இது? அழுகி நாறுது, ஒருத்தரும் கவனிக்கலை யாடா?''

''அது யார் நாய்னு தெரியலீங்க, தெரு நாயாருக்கும், டாங்கர் லாரில முந்தா நாள் அடிபட்டுருச்சு, அதுக்குள்ள நாத்தத்தப் பாருங்க''

www.padippakam.com



''யாராவது அதைப் பொதைக்கக் கூடாதா? அழுகி நாறும் நாயிலிருந்து நம்ம எல்லாருக்குந்தான் நோய் வரும்'' இப்போது கூட்டத்தின் ஒரு பகுதி கவனம் சிதறி என் பக்கம் திரும்பியிருந்தது.

கண்ணன் ஓடிச் சென்று அருகிலிருந்த வீட்டிலிருந்து ஒரு கடப்பாறையும், மண்வெட்டியும் வாங்கி வந்தான். செல்லப்ப நாய்க்கர் தோட்டத்தின் எதிரில் இருந்த துண்டு நிலத்தில் தோண்ட ஆரம்பித்தார்கள். ஏற்கனவே கோபத்திலிருந்த செல்லப்ப நாயக்கர் வேட்டியை மடக்கி கட்டிக் கொண்டு, கத்திக் கொண்டே வெளியே வந்தார்.

''யார்ராது எந்தோட்டத்து எதிரிலே செத்த நாயபொதக்கிறது போங்கடா அங்க'' சீறினார். ஆர்வத்துடன் மண்வெட்டியையும், கடப்பாறையையும் கையில் எடுத்தவர்கள் அதைத் தரையில் எறிந்தார்கள். ''இதான்சார் நல்லது எதுவும் செய்யக் கூடாது; கெட்டபேர் தான்'' என சலித்துக் கொண்டார்கள். செல்லப்ப நாய்க்கரின் முகத்தைப் பார்த்தால், அவரிடம் பேசிப் பயனில்லை என தோன்றியது.

''சரி ஏண்டா வீணா அவரோடு சண்ட, நீங்க சுடுகாட்டுக்குள்ள குழிய வெட்டுங்க அதைப் பொதைச்சிடுவோம்''

''அதுவும் சரிதான், இந்தாளோட சண்ட போட நம்மளால முடியாது'' எனக் கூறிக் கொண்டே சுடுகாட்டின் படலை விலக்கினார்கள். சற்றைக்கெல்லாம் நாயும் அடக்கம் செய்யப்பட்டது. இப்போது சூரியன் எங்கோ முகம் துடைத்துக் கொண்டு மேலெழுந்துவிட்டதால் வெய்யில் சுள்ளென்றது. நேரம் ஆகிவிட்டதால் ''யப்பா என்ன வெய்யிலு காலங் காத்தால இப்படிச் சுட்டெரிக்குது? இன்னிக்கு பொழுதுக்கு மழ, கிழ வரும் போல'' என்றவாறு தலையில் துண்டைப் போட்டபடி எனக்கு முன்னே ஒருவர் நடந்தார்.

அவர் சொன்னது நிஜமாயிற்று. மாலை லேசான காற்று. தூறலுடன் ஆரம்பமான மழை மறுநாள் வரை நீடித்தது. அடுத்தநாள் பலத்த மழையாயிற்று. ''காலம் கெட்டுப் போச்சுங்க. எங்க காலத்துல இப்படியா வெயில் காலத்தில மழை பெய்யும்'' என்றவாறு எல்லோரும் வீட்டுக்குள் முடங்கி விட்டனர். தொலைக்காட்சியும், புத்தகங்களும் எனக்கு நேரத்தைப் போக்கிக் கொள்ள உதவின.

அன்று மதியம் சாலையில், கூச்சலும் பரபரப்பும் காணப்பட்டது. என்னவென விசாரிக்க வாசலை நோக்கி நகர்ந்தேன். கம்பும், கட்டையுமாக இளைஞர்கள் சிலர் கொட்டும் மழையில் ஓடிக் கொண்டிருந்தனர். குடையை எடுத்து விரித்துக் கொண்டே என்ன ஏது என விசாரிக்க நடந்தேன். எல்லோரும் சுடுகாட்டிற்குக் காவலுக்குச் செல்வதாக அவசரத்துடன் ஒருவன் கூறிவிட்டு ஓடினான். எனக்கு ஒன்றும் புரியவில்லை. எதிரில் சற்று தயங்கித் தயங்கி சாக்கு முட்டாக்குடன் சேப்பான் வந்தான்.

''டேய் சேப்பான் என்னடா தகராறு?''

''எங்க தெரு நாராயணன் காலைல செத்துப் போயிட்டாங்க.''

''எந்த நாராயணன்?''

''பைப் பிட்டிங் வேல செய்வான்ல அந்த நாராயணன். குடிகாரப் பயங்க அவன், ராத்திரி ஏதோ சாராயத்த குடிச்சிப் புட்டு காலைல எந்திரிச்சதும் ரண்டு தடவ வாந்தி, வயித்தால போயிருக்கு. அப்படியே நெஞ்ச பிடிச்சுக்கிட்டு சாஞ்சிட்டானாம்''.

''அதனால என்ன பிரச்சனை?''

''முந்தா நா மிசுன வைச்சு ஆத்த நோண்டுனாங்கல்ல, அதுல காலனி சுடுகாடு போயிடுச்சுங்க. செல்லப்ப நாயக்கன் வேற வேலியைத் தள்ளி மீதி இருந்த எடத்தை அடச்சிட்டு தகராறு பண்றாரு. மழ வேற பெய்யுதுங்க. அந்தப் பக்கம் தள்ளி பொதக்கலாம்னா வப்பாலடிக்காரங்க ஊர்தாண்டி பொணம் வரக்கூடாதுங்கிறாங்க. பாடை கட்டி பொணத்தை ரெடி பண்ணியாச்சே. சுடுகாட்டுக்கு எங்க போறது? ஐயாக்கமாரு சுடுகாட்டுல ஒரு ஓரமா பொதைக்கலாம்னு பேசிக்கிட்டாங்க. அவ்ளோதான் இந்த மழயிலும் ஊரே பத்திரிச்சி''

விசயம் பெரிதாகி மோசமாகி விடுமோ எனப் பயமாக இருந்தது. கைலியை மடக்கி கட்டிக் கொண்டு சுடுகாட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தேன். சுடுகாட்டின் வாசலிலேயே கார்த்தியும், கண்ணனும் கைகளில் சவுக்குக் கழிகளுடன் நின்று கொண்டிருந்தனர்.

அந்த மழையிலும் நூறு பேருக்கு மேல் அங்கே கூடியிருந்தனர். சிலர் மறைவாக கைகளில் அரிவாள்,கத்தி போன்ற ஆயுதங்களையும் வைத்திருந்தனர். என்னைக் கண்டதும் சற்று மரியாதையாக ஒதுங்கி நின்றனர்.

''என்னடா கார்த்தி தகராறு?''

''சார் நீங்க இங்க வரவேண்டாம், நீங்க பொது ஆளு. நீங்க வீட்டிற்குப் போயிடுங்க.''

''இத மாதிரி விசயங்கள்ள பொது ஆள் சொல்றத கேக்குறதுதான் நல்லது''.

அதற்குள் கண்ணன் குறுக்கிட்டான் ''நீங்க அவங்களுக்குத்தான் சப்போர்ட்

www.padippakam.com

பண்ணுவீங்க. அதனால நீங்க போங்க சார்.''

எனக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. என்ன மூர்க்கத்தனம்? இவர்களின் மூர்க்கத்தனத்துடன் எடுபடாமல் மழை தன் தீவிரத்தைக் குறைத்துக் கொள்ள ஆரம்பித்திருந்தது.

சற்று நேரத்திற்கெல்லாம் அலங்கரிக்கப்பட்ட பாடையில் நாராயணன் உடலுடன் காலனி மக்கள் சிலர் அமைதியாக வந்தனர். ஊர்வலம் சுடுகாட்டை நெருங்கியதும் அதனைத் தடுக்க இளைஞர்கள் வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு முன்னே ஓடினர்.

காலனி மக்கள் எந்த எதிர்ப்புமின்றி பாடையை நடுரோட்டில் இறக்கி வைத்தனர். காலனி மக்கள் சார்பாக பக்கிரி சாமி ஏதோ பேச முற்பட்டதும் பல குரல்கள் எதிர் தரப்பில் உயர்ந்து அவரை அடக்கின. அதையும் மீறி அவர் பேசினார். ''இல்லங்கையா எங்க சுடுகாட்ட பாருங்க, இருந்த கொஞ்ச நஞ்ச இடத்தையும் ரோடும், புல்டோசரும், செல்லப்ப நாயக்கரும் எடுத்துக்கிட்டாங்க. மழைவேற பெய்யுது. ஊர்ல இருந்து வெளிநாடு போனவங்களால நிலத்தோட வெலையெல்லாம் ஏறி எல்லா இடத்தையும் அடச்சி போட்டுட்டாங்க. மீதி புறம்போக்கெல்லாம் கட்சிக்காரங்க கொடியேற்றி வேலி போட்டாச்சு. கிராமம், முன்னமாரி கிராமமா இல்லங்க, உங்களுக்கு தெரியாதது இல்லை, இப்ப நாங்க அவசரத்துக்கு எங்க போவோம். இந்த ஒரு தடவ மட்டும் அப்படி வேலி ஓரமா புதைச்சிக்கிறோம். அடுத்த தடவைக்குள்ளாற வேற ஏற்பாடு செய்துக்குறோம்.''

> **அந்தப் பக்கம் தள்ளி பொதக்கலாம்னா வப்பாலடிக் காரங்க ஊர்தாண்டி பொணம் வரக்கூடாதுங்கிறாங்க. பாடை கட்டி பொணத்தை ரெடி பண்ணியாச்சே. சுடுகாட்டுக்கு எங்க போறது?**

பக்கிரிசாமியின் குரல் தாழ்ந்துதான் இருந்தது. எப்போதும் தோளில் இருக்கும் அவரின் சிவப்புத் துண்டு இப்போது இடுப்பில் இருந்தது.

''ஒரு தடவ, அரை தடவ கூட முடியாது சேரிப் பொணம் எங்க சுடுகாட்டுக்குள்ளார போகக் கூடாது. மீறினா கொல விழும்.'' பல குரல்கள் அதனை ஆமோதித்தன.

மலர்களால் அலங்கரிக்கப்பட்ட பாடைக்குள் நாராயணன் கைகளும், கால்களும் கட்டப்பட்டு, கண்களுக்கு சந்தனம் அப்பி கோயிலின் சாமி போல ஏதும் செய்ய இயலாமல் நடப்பதை வேடிக்கை பார்ப்பது போல இருந்தது எனக்கு.

மழையின் தீவிரம் மேலும் குறைந்து போயிருந்தது. பிரச்சனைக்குத் தீர்வு காண முடியாமல் இரு அணியினரும் இன்னமும் தங்களுக்குள் முறுக்கி முணுமுணுத்துக் கொண்டிருந்தனர்.

அதற்குள் விசயம் கேள்விப்பட்ட முன்னாள் எம்.எல்.ஏ. ஆசைத்தம்பி தனது வாகனத்தில் வந்து சேர்ந்தார். இரண்டு அணியினரும் மடக்கிக் கட்டிய வேட்டியை இறக்கி விட்டனர். அரசியல் வாதிக்குரிய தீவிரத்துடன் பேசி ஆணையிட்டார். இரு பிரிவினரும் தலையாட்டினர். முடிவில் காலனி மக்கள் பாடையை எடுத்துக் கொண்டு திரும்பினர்.

அவர்களைச் சமாதானப்படுத்தும் முகமாக தானே பாடையின் முன் நடந்து தலைமை தாங்கிச் சென்றார் முன்னாள் எம்.எல்.ஏ. தனித்து விடப்பட்ட நான் ''என்ன தீர்வு?'' என விசாரித்தேன். காலனிக்குச் செல்லும் சாலை பிரியும் குறுகிய இடத்திலேயே தற்போது பிணத்தை அடக்கம் செய்ய காலனி மக்கள் ஒத்துக் கொண்டதாகக் கூறினார்கள்.

என் மனதில் வேதனை வந்து முட்டியது. இப்போது மழை முற்றிலும் நின்று போயிருந்தது. மனிதனை மனிதன் இழிவு படுத்தும் நிகழ்ச்சியை வெறுமனே வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றது வருத்தத்தினை அளித்தது. சுயபரிதாபம் காரணமாக கண்களில் கண்ணீர் எட்டிப் பார்த்தது. யாரும் அறியாமல் இருக்கத் தலையைத் தாழ்த்திக் கொண்டேன்.

சேறான தரையெங்கும் காலடித் தடங்கள், பார்வையில் இடுகாட்டில் நாயினைப் புதைத்த இடம் தென்பட்டது. மழையில் மண் உள்வாங்கிக் கொண்டு தண்ணீர் தேங்கியிருந்தது. உற்றுப் பார்த்த போது அந்த கலங்கலான நீரில் மனித முகங்கள் பல தென்பட்டன. மரங்களின் மீது தங்கியிருக்கும் நீர்த்துளி அதில் விழுந்த போதெல்லாம் அந்த முகங்கள் விகாரமாகிச் சிதைந்தன. ●

# மாநகர அரட்டையும் உயர்ரக மனிதாபிமானமும்

பாண்டி பஜாரின் பட்டு மாளிகைகளிலும், சீன - இத்தாலிய அதி உயர் உணவகங்களிலும், அண்ணாநகரின் வீடியோ விளையாட்டரங்குகளிலும், பம்பாய் ஜெயஸ்ரீ கச்சேரிகளிலும் வார இறுதியைச் செலவிடும் அந்த வெள்ளை மனிதர்கள் சென்ற ஜூலை ஞாயிற்றுக்கிழமை ஒன்றில் ஒரு நாடகம் பார்க்க வந்தார்கள்.

இடம்: போயஸ் தோட்டத்துக்கு அருகாமையில் இருக்கும் 'மியூசிக் அகாடமி'. டிசம்பர் சங்கீதக் காய்ச்சலின் புனிதத் தலமான இங்கே அன்று நடைபெற இருந்த நாடகம் கிரேசி மோகனின் ''ஜுராசிக் பேபி''. இது அவரின் சமீபத்திய குபீர் சிரிப்பு நாடகம். நாடகம் சிரிப்பென்றால் வந்தவர்கள் வெறுமனே சிரித்து மகிழுவதற்காக மட்டும் வரவில்லை. மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான பள்ளியை நடத்திவரும் **வசந்தம்** என்ற நிறுவனத்திற்கு நன்கொடை தருவதற்காக அந்த நாடகத்தைப் பார்க்க வந்தார்கள்.

1000, 500, 100 என நன்கொடைக் கேற்றவாறு வெள்ளை மனிதர்கள் அமர்த்தப்பட்டார்கள். அனைவரது கண்களிலும் ஒரு மனிதாபிமானம் மின்னியது. மொத்தத்தில் ஒரு உயர்ரக அமைதியும், மிதமான குளிர் காற்றும் அரங்கத்தை நிரப்பின. சிறப்பு விருந்தினர்களாக செங்கை - சென்னை திரைப்பட விநியோகஸ்தர் சங்கத் தலைவர் ராஜன் (ஹேராம் திருட்டு சி.டி. பிரச்சினையில் பர்மா பஜார் வியாபாரிகளுடன் மோதிய வீரர் மற்றும் 'திரைப் படப் பாதுகாப்பு பேரவை என்ற அடியாட் படை'யின் தலைவர்) திரைப்பட இயக்குநர்கள் ராஜ்கிரண், கேயார் மற்றும் சில தொழிலதிபர்கள் ஆளுக்கொரு நேரத்தில், அவரவர்க்கேற்ற பந்தாவுடன் வந்தமர்ந்தனர். நாடகமும் தொடங்கியது.

● ● ●

பிள்ளை இல்லாத் தம்பதியினருக்கு, மலையாள மந்திரவாதியின் லேகிய மகி

www.padippakam.com

மையால் குழந்தை பிறக்கிறது. லேகியத்தின் விபரீதத்தில் குழந்தை ஒருசில மணி நேரங்களில் தனது தாய்மாமனைப் போல வளருகிறது. அதனால் ஏற்படும் கஷ்டங்கள், ஆள் மாறாட்டம், இன்ன பிறவற்றினால் சிரிப்பு சரவெடி வெடிக்கிறது. எஸ்.வி. சேகர் பாணியிலான மாநகரத்து அக்கிரகார அரட்டைகள், கடிகள் பெருக்கெடுத்து ஓடின. கிரேக்க இசையமைப்பாளர் யானியின் 'அக்ரோபோலிஸ்' இசைக் கருவையே நாடகத்தின் 'தீம் மீயூசிக்காக' சுட்டிருந்தார்கள் மற்றபடி அரங்கத்தின் உயர்ரக அமைதி தனது கையொலிகள், சிரிப்புக்களின் மூலம் உண்மையான ரசனையை வெளிப்படுத்தியது.

நாடகத்தின் இறுதிக் காட்சிக்கு முன்னே இடைவேளை விட்டார்கள். வெளியே பாப்கார்ன் பாக்கெட்டுகள் கிழிபடும் முன்னமேயே விருந்தினர்களை வைத்து மேடை நிகழ்ச்சி துவங்கியது. முதலில் வசந்தத்தின் கௌரவத் தலைவரான பாதிரியார் ஒருவர் வரலாற்றைத் தொகுத்துரைத்தார், தற்போது 50 குழந்தைகள் படித்துவரும் இந்நிறுவனத்தைத் துவக்கி, தியாக உணர்வுடன் நடத்திவரும் அல்லி முருகேசன் அம்மையாரைப் புகழ்ந்துரைத்தார். மறைந்த நடிகர் ஜெய்சங்கர் இந்நிறுவனத்திற்கு ஆற்றிய சேவையை நினைவுகூர்ந்து 1 நிமிடம் அஞ்சலி செலுத்தப்பட்டது.

அடுத்துப் பேசிய ராஜன், நாடகத்தைப் பார்க்கும் போது சிரிப்பு வருவதாகவும், இக்குழந்தைகளை நினைத்து அழுவதாகவும் - அதற்குக் காரணமான கடவுள் பதில் சொல்ல வேண்டும் என்றும் கோபப்பட்டார். 5000 ரூபாய் நன்கொடை அளிப்பதாகவும், ஒரு மெட்ரிக்குலேஷன் பள்ளியின் மூலம் ஓரளவுக்கு(!) தான் வருவாய் ஈட்டுவதற்குக் காரணமான ஜெய்சங்கரை நினைவு கூர்ந்து அவர் பணியினைத் தொடருவதாகவும் சபதம் செய்தார்.

ஏனைய பேச்சாளர்களும் நன்கொடை அளித்து நாலு வார்த்தையும் பேசினார்கள். அல்லி முருகேசனை தெரசா என்றார்கள். நாடகத்தை இலவசமாக நடத்தித் தரும் கிரேசி மோகனை நெஞ்சாரப் பாராட்டினார்கள்.

இறுதியில் பேசிய கிரேசி மோகன், பார்வையாளர்களிடமிருந்து கையிலிருக்கும் காசை உடன் தருமாறு வேண்டினார். சில விநாடி தயக்கத்திற்குப் பிறகு சிரிப்பலைகளில் சிக்கியிருந்த உயர்ரக அமைதியின் மனிதாபிமானம் வெள்ளமெனப் பாய்ந்தது. குழந்தைகள், பெண்கள், ஆண்கள் அனைவரும் மேடையேறினர். 100, 500, 1000 என பணமும் காசோலைகளும் கைமாறின. பெயர்கள்



அறிவிக்க அறிவிக்க கையொலிகள் அலையலையாய்க் கிளம்பின. மொத்தம் 20 ஆயிரம் வசூலானது. பின்னர் இறுதிக் காட்சியுடன் நாடகம் முடிந்தது.

இனி, பிரச்சினைக்கு வருவோம்

மனவளர்ச்சியுற்றோர், ஊனமுற்றோர், ஆதரவற்றோர், அனாதைகள் இன்ன பிறருக்கான சேவை அமைப்புகள் சென்னையில் ஏராளம். மாநகரத்து மேட்டுக்குடியின் மனிதாபிமான அரிப்பைப் பூர்த்தி செய்யும் இத்தொண்டு நிறுவனங்கள் நிர்வாகம், அலுவலகம், விளம்பரம், பிரச்சாரம், நன்கொடை வசூல் என அனைத்தையும் பன்னாட்டு நிறுவனங்களின் தரத்தோடு செயல்படுத்தி வருகின்றன. இந்தியச் சுதந்திரத்தை வாழ்த்தி உருகும் எல்.ஜி. நிறுவனத்தைப் போல, சுற்றுச் சூழலின் அவசியம் பேசும் டூபாண்ட் போல, உணவுப் பஞ்சத்தைப் போக்க நினைக்கும் மான்சாண்டோவைப் போல இத்தொண்டு நிறுவனங்களும் மனிதாபிமானத்தைச் சந்தைப்படுத்துகின்றன. சந்தை மனிதாபிமானத்தின் தரம் என்ன?

மனவளர்ச்சியற்ற குழந்தைகளுக்கான நன்கொடை நாடகத்திலிருந்து பார்ப்போம். நடக்கவே முடியாத கற்பனைதான் என்றாலும், நாடகக் கருவும் மன வளர்ச்சியின்றி உடல் வளர்ச்சி மட்டும் கொண்ட ஒரு 'குழந்தை'யின் கதைதான்.

மனவளர்ச்சியின்மை என்ற அனுதாபத்தோடு பார்க்க வேண்டிய ஒன்றை விகாரமான நகைச் சுவையாய் ரசிக்கிறோமே என்ற அருவெறுப்பு எவருக்கும் தோன்றாததன் மர்மம் என்ன?

கிரேசி மோகனின் மாநகரத்து அக்கிரகார அரட்டைகளுடன் குதறப்பட்ட அந்தக் 'குழந்தையைப்' பார்த்து வயிறு குலுங்கச் சிரிக்கும் வெள்ளை மனிதர்கள், வசந்தத்தின் குழந்தைகளுக்காக வருந்துகிறார்கள் என்பதை எப்படி நம்புவது? மனவளர்ச்சியின்மை என்ற அனுதாபத்தோடு பார்க்க வேண்டிய ஒன்றை விகாரமான நகைச்சுவையாய் ரசிக்கிறோமே என்ற அருவெறுப்பு எவருக்கும் தோன்றாததன் மர்மம் என்ன?

ஒரு நல்ல நோக்கத்திற்காக ஏதோ ஒரு நிகழ்ச்சி நடத்தி நன்கொடை திரட்டுவதில் என்ன தவறு என்று சிலர் கேட்கலாம். ஏதோ ஒன்று என்பதில்தான் பிரச்சினை. மனவளர்ச்சி குன்றுவதைப் பற்றி, அதன் காரணங்களைப் பற்றி, அதைப் புரிந்து கொள்வதைப் பற்றி, அவர்களின் பால் காட்ட வேண்டிய மனிதாபிமானத்தைப் பற்றி — ஒரு செய்தி அறிக்கை, விளக்கம் என்று கூட இருக்கட்டும் — ஒரு நிகழ்ச்சியை நடத்த முடியாதா? அந்தக் குழந்தைகள் தங்களின் உளைச்சல்களை (இருப்பை) வெளிப்படுத்தும் ஒரு உரையாடலை நடத்த முடியாதா? முடியாது என்பதோடு சந்தையிலும் விலை போகாது என்பதுதான் உண்மை. மனிதாபிமானத்தின் விலைக்குத் தீனியாகப் போடப்படும் இம்மலிவான ரசனையிலிருந்து வெள்ளை மனிதர்களின் இதயத்தைப் புரிந்து கொள்ளலாம்.

புது தில்லியின் அரசியல் தலைவர்கள், ஐஸ்வர்யா ராய் — டென்டுல்கர் போன்ற நட்சத்திரங்களே சென்னைக்கு வந்தால் இத்தகைய இல்லங்களுக்குச் சென்று குழந்தைகளுடன் புகைப்படத்திற்குப் போஸ் கொடுப்பார்கள். அமிதாப்பச்சன் நடத்திய உலக அழகிப் போட்டியிலிருந்து, திரை நட்சத்திரங்களின் ரெகார்டு டான்ஸ் வரை இந்தக் குழந்தைகளுக்கு உதவிடும் முகமூடியில் நியாயப்படுத்தப்படும். நடிகர்கள், ஓட்டுப் பொறுக்கிகளின் பிறந்தாள் தருமத்தில் முக்கிய இடம் பெறுவது மூன்று சக்கர சைக்கிள்தான். வீசப்படும் சில்லறைகளின் இரைச்சலில் கோடிகள் மறைந்து கொள்கின்றன. கோடியிலும் இலட்சத்திலும் புரளும் நபர்களை மனிதாபிமானிகளாகக் காட்டுவதே தொண்டு நிறுவனங்களின் முதல் தொண்டு.

ஆம். உயிரியல் பூங்கா, அருங்காட்சியகம் போல ஆதரவற்றோர் இல்லங்களும் மனிதாபிமான அருங்காட்சியகமாகத்தான் செயல்படுகின்றன. மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளைக் குணப்படுத்த முடியும். இவர்களுக்காக கிளிசரின் வாங்கும் வெள்ளை மனிதர்களை எப்படிக் குணப்படுத்துவது?

● வேல்ராசன்

www.padippakam.com

*“வேறு எந்த மொழிக்கும் கிடைக்காத சலுகை உருது மொழிக்குக் கொடுக்கப்படுகி றது. இது கொடுமையிலும் கொடுமை. அப்படி என்ன சிறப்பிருக்கிறது அந்த மொழியில்? உருது மொழியைக் கற்பிக்க அரசு ஆசிரியர்களை நியமிக்கிறது. அதுவும் அந்த ஆசிரியர்கள் முசுலீமாகத்தான் இருக்க வேண்டும் என்பது இன்றைய நிலை. உருது தெரிந்த இந்து ஆசிரியர்களை நியமிப்ப தில்லை. ஆகவே அரிய எழுத்து உள்ள உருது மொழிக்கு கொடுக்கப்படும் அங்கீகாரம் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும் என்று கோருகிறோம்.*

*வானொலியில் உருது மொழியில் செய்தி வாசிப்பாளர்களுக்கு முசுலிம்களை மட்டும் நியமிக்கிறார்கள். ஆனால் தமிழ் மொழி செய்தி வாசிப்பாளர்களிலும் முசுலீம் களுக்கு இடம் கொடுக்கப்படுகிறது... இதனு டைய ஆழத்தையும் அகலத்தையும் மக்க ளுக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.”*

— **‘இந்துக்களுக்கு உரிமையே கிடையாதா?’** இந்து முன்னணி வெளி யீடு, பக்கம் - 21.

வளமான இலக்கண மரபும், செறிவான இலக்கியங்களையும் கொண்டுள்ள உருது மொழி, இந்து மதவெறியர்களின் முசுலீம் எதிர்ப்பு அரசியல் அட்டவணையில் முக்கிய இடத்தைக் கொண்டிருக்கிறது. ஏனைய தேசிய மொழிகளுக்கு வழங்கப் படும் குறைந்தபட்ச, பெயரளவு சலுகைகள் கூட உருதுவுக்கு வழங்கப்படாததன் கார ணமும் அதுவே. நடப்பிலிருக்கும் ஒன்றி ரண்டு அற்ப சலுகைகள் கூட தடை செய்யப்பட வேண்டும் என்பதுதான் அவர் களின் கோரிக்கை. மதம் கடந்து சில கோடி மக்கள் பேசும் உருது மொழியை, முசு லீம்கள் பேசுகின்ற துரோகிகளின் மொழி யாகச் சித்தரித்து ஒழிக்கப் பாடுபடும் இந்து மதவெறியர்களின் முயற்சி இன்றல்ல, கால னிய ஆட்சி காலந்தொட்டே துவக்கப்பட் டது.

இந்தியை அரியணையில் ஏற்ற வேண்டும் என்பதற்காக உருது மொழியை அழிக்கும் சதி அப்படித்தான் துவங்கியது.

> **இன்றைக்கு உருது மொழியை ஒழிப் பதற்கு இந்துமத வெறியர்கள் மேற் கொள்ளும் முயற்சி யினை அன்று சமஸ் கிருதத்தை ஒழிப் பதற்கு மொகலா யர்கள் மேற்கொள்ள வில்லை.**

ஹர்ஷவர்த்தனரின் ஆட்சிக்குப் பிறகு இன்றைய இந்தியாவின் பெரும்பான்மை நிலப்பரப்பை ஆண்டவர்கள் முகலாய மன்னர்கள். அவர்களின் ஆட்சி மொழி யாகத் திகழ்ந்தது பாரசீகமாகும். அத னால்தான் அன்று பல்வேறு சமஸ்கிருத இலக்கியங்கள் பாரசீகத்தில் மொழி பெயர்க்கப்பட்டன. ஆள்வோரின் மொழி என்ற தகுதியில் பாரசீகம் மக்களிடையே மெதுவாகப் பரவ ஆரம்பித்தது. அப்ப டித்தான் வட இந்தியாவின் வட்டார வழக்கு மொழியோடு (இந்தியின் மூல வடிவம்) பாரசீகம் இணைந்து உருது மொழி தோன்றியது. மக்களிடையே பர வவும் ஆரம்பித்தது.

பின்னர் தோன்றிய பக்தி இயக்கம் கார ணமாக, உருது, மதங்கடந்து மக்களி டையே வேர்விட ஆரம்பித்தது. மொகலா யர்களின் இறுதிக் காலத்தில் தெற்கே தக்கா ணத்தில் ஆட்சி செய்த சுல்தான்களின் அர சவை மொழியாகவும் உயர்ந்தது. அதே போன்று வட மாநிலங்களின் பல பகுதி களில் உருதுவும் வட்டார வழக்கு மொழியும் (இந்தியின் மூலம்) இணைந்த இந்துஸ்தானி மொழியும் பிரபலமடைந்து வந்தது. இந்தியும் இந்துஸ்தானியும் ஒன்றல்ல. உருதுவும், இந்துஸ்தானியும் மிகவும் நெருக்கமான மொழிகளாகும்.

இன்றைக்கு உருது மொழியை ஒழிப்ப தற்கு இந்து மதவெறியர்கள் மேற் கொள்ளும் முயற்சியினை அன்று சமஸ்கி ருதத்தை ஒழிப்பதற்கு மொகலாயர்கள் மேற்கொள்ளவில்லை. இருப்பினும் தமது சமூக, அரசியல் அந்தஸ்து குறைந்து போனதன் காரணமாக சனாதனிகள் முக லாயர் மேல் வெறுப்புக் கொண்டிருந்தனர். வெள்ளையர்களின் வரவு அவர்களின் வன்மம் நிறைவேற அடி எடுத்துக் கொடுத் தது.

காலனிய எதிர்ப்புப் போராட்டம் என்பது முசுலீம் எதிர்ப்பை உள்ளடக்கிய இந்து தேசியமாக இருந்தது. ஆங்கிலே யரின் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு உகந்ததாக இருந்தது என்பதையும் இக்கட்டுரைத் தொடரில் பலமுறை பல பிரச்சினைகளுக் காகப் பார்த்திருக்கிறோம். அத்தகைய இந்து தேசியத்தின் பொது மொழியாக இந்தி வரவேண்டும் என்பதற்காக காங்கிரஸ் மற்றும் ஆர்.எஸ்.எஸ். சனாத னிகள் ஆரம்பம் முதலே பாடுபட்டு வந்தனர். இவற்றின் அடிப்படையில் உருது, மற்றும் இந்துஸ்தானி மொழி களைப் புறந்தள்ளும் வேலையும் தொடங் கியது. வெள்ளையர்களும் ஆதரவளித் தனர்.

’47 அதிகார மாற்றத்திற்குப் பின்னர், ‘தேசிய மொழி’ப் பிரச்சனை வந்தபோது ஆரம்பத்தில் உருது கலந்த இந்துஸ்தானி மொழியை ஆதரிப்பதாக நடித்த காங்கிரஸ் கும்பல் பின்னர் தேவநாகரி எழுத்தில மைந்த சமஸ்கிருத இந்தியை ஆதரித்தது. அரசியல் நிர்ணயச் சட்டத்தின் நகல் பற்றிய காங்கிரஸ் கட்சியின் வாக்கெ டுப்பில் இந்திக்கு ஆதரவாக 78 வாக்கு களும், இந்துஸ்தானிக்கு ஆதரவாக 77 வாக்குகளும் கிடைத்தன. இப்படி ஒரு வாக்கு வித்தியாசத்தில்தான் இந்தி தேசிய மொழியாக்கப்பட்டது. இதற்கு ஆர்.எஸ்.எஸ். கும்பல் மட்டுமல்ல, ஆரம்பம் முதலே காந்தி, நேரு கும்பலும் உடந்தை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

மேலும் சம்ஸ்கிருத மயமாக்கப்பட்ட இந்தி என்பது வட மாநிலங்களில் நிலவிய மைதிலி, அவதி, போஜ்புரி, கடி(ரி) போலி, மற்றும் இந்துஸ்தானி போன்ற பல்வேறு தனித்தனி மொழிகளை, வழக்குகளை அழித்து உள்வாங்கி உருவாக்கப்பட்ட தாகும். மொழி வாரி மாநிலங்கள் பிரிக்கப் பட்டபோதும் உருது கணக்கில் எடுக்கப்ப டவில்லை. இவ்வளவிற்கும் உத்தரப் பிர தேசத்தில் மட்டும் கோடிக்கணக்கான மக்கள் உருதுவைத் தாய்மொழியாகக் கொண்டிருந்தனர். உருதுவுக்கென்று தனி

**தொடர் கட்டுரை: 8**

## சிறுபான்மையினருக்கு எதிரான ஆர்.எஸ்.எஸ்.இன் பொய்யும் புரட்டும்

# ‘உருது’, முசுலீம்களின் மொழியா? மசூதிமுன் ஊர்வலம் கூடாதா?





படிப்பகம்

www.padippakam.com

மாநிலம் இல்லாததுபோல், கல்விக் கொள்கையிலும் உருது புறக்கணிக்கப்பட்டது. பாகிஸ்தானின் ஆட்சி மொழியாக உருது அறிவிக்கப்பட்டதும் இங்கே துரோகிகளின் மொழியாக உருது சித்தரிக்கப்பட்டது.

'47-க்குப் பிறகு உருது மொழி நீடிக்க வேண்டுமானால், "தேவநாகரி வரி வடிவத்தை ஏற்க வேண்டும், உருதுவில் உள்ள பாரசீகச் சொற்கள் களையப்பட வேண்டும், உருதுக்கென உள்ள ஒலி அமைப்பின் கறார்த் தன்மை தளர்த்தப்பட்டு தேசிய நீரோட்டத்தில் கலக்க வேண்டும்" என்று இந்து மத வெறியர்கள் கட்டளை பிறப்பித்தார்கள். பார்ப்பனியச் சுத்திகரிப்பு நடந்த பிறகு உருது உருதுவாக இருக்க முடியுமா? திராவிட மொழிக் குடும்பத்தில் தமிழைத் தவிர ஏனைய மொழிகள் சமஸ்கிருத மயமாக்கப்பட்டது இப்படித்தான் என்ற வரலாற்றை நினைவு கூற வேண்டும்.

மேலும் பாரசீகக் கலப்பு இல்லாத வட இந்திய மொழிகளே இல்லை என மொழி ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பிருஜ் பாசா, கடிபோலி, மராத்தி போன்றவை உருது - பாரசீக இலக்கணத்தை ஏற்றுக் கொண்ட மொழிகள்தான். எனவே பாரசீக கலப்பு என்றபடி உருதுவைத் தூற்றுவது ஒரு மோசடியே. மேலும் உருது ஒரு மதத்தினரின் மொழியாக மட்டும் இருக்கவில்லை. இந்து மதவெறியர்களால்தான் அப்படி ஆக்கப்பட்டு விட்டது.

மிகச்சிறந்த உருது இலக்கியவாதிகளான தயாசங்கர், லல்லுலால், ராஜாசிவ சங்கர் பிரசாத், கிஷன் சந்தர் போன்றோர் 'இந்துக்' குடும்பத்தில் பிறந்தவர்களே. முன்னர் உருது வளர்ச்சிக் கழகத்தின் தலைவராக இருந்த ஜகன்னாத் ஆசாத் ஒரு 'இந்து'வே. பல்வேறு கஜல் பாடகர்கள் உருதுக் கவிதைகளைப் பாடுகிறார்கள். வாஜ்பாயி உள்ளிட்டு பல வடஇந்தியப் பேச்சாளர்கள் உருது மேற்கோளைப் பயன்படுத்துகிறார்கள். இந்தித் திரைப்படம் - பாடல் இரண்டிலும் உருது தவிர்க்க முடியாத மொழியாகத்தான் இருக்கிறது. உருது பொது மக்களின் மொழி என்பதற்கு இப்படிப் பல சான்றுகள் உண்டு.

இருப்பினும் வாழ்வின் பல தளங்களிலும் ஊடுருவிவிட்ட இந்து மதவெறி உருதுவைப் புறந்தள்ளியதில் வெற்றி பெற்றுவிட்டது. மும்மொழித் திட்டத்தை அமல்படுத்தச் சொன்னபோது வட மாநில முதலமைச்சர்கள் உருதுவை ஏற்கவில்லை. எட்டாவது அட்டவணையில்



*'உருது' மொழிக்கெதிராய், உ.பி. மாநிலம் பதுவானில் - ஆர்.எஸ்.எஸ்.இன் கலவரம்.*

செத்த பாடையான சமஸ்கிருதத்தை உயிரூட்ட வேண்டும் எனக் குளிப்பாட்டியவர்கள், மக்கள் மொழியான உருதுவைத் தள்ளி வைத்தார்கள். இந்தி ஆட்சி மொழியாக ஆக்கப்பட்ட பிறகு, இந்தியாவின் பல்வேறு தேசிய இன மொழிகளுக்கான உரிமைகளும், தகுதிகளும் மறுக்கப்பட்டன. இதில் முக்கியமான சேதாரம் உருதுவுக்கு நடத்தப்பட்டது. குறிப்பாக உருது தாய்மொழிக் கல்வி அழிக்கப்பட்டது.

'இந்தியை' பெரும்பான்மையினரின் மொழியாகக் காட்டுவதற்கு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் மூலம் மோசடிகள் நடத்தப்பட்டன. உருதுவைத் தாய்மொழியாகக் கொண்டவரையெல்லாம் 'இந்தி' பேசுபவராக மாற்றினார்கள். 1981 கணக்கெடுப்பில் நடந்த இம்மோசடியை எதிர்த்து பல உருது எழுத்தாளர்கள் வழக்கு தொடுத்தார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். இன்றும் அலிகார் முசுலீம் பல்கலைக் கழகத்தைத்

**மசூதி அருகே பொதுக் கூட்டங்கள் நடப்பதும், பாங்கு ஓதும் நேரம் ஓரிரு நிமிடம் அமைதி காப்பதும் தமிழகத்தில் இயல்பான காட்சிகள் தான். இதனாலெல்லாம் எங்கும் கலவரம் ஏற்பட்டதில்லை.**

தவிர முழுமையான உருதுக் கல்வி எங்கும் கிடையாது. சில மதரஸாக்கள், முஸ்லீம் தன்னார்வக் குழுக்கள் போன்ற அரசுசாரா நிறுவனங்களின் மூலமே ஓரளவு உருதுக் கல்வி இருந்து வருகிறது.

இந்து மதவெறியரிடம் அடிமேல் அடிபட்டு நொந்திருந்த முசுலீம் மக்களின் வாக்குகளைக் கவர வேண்டும் (இங்கே பா.ஜ. கூட்டணியில் இருந்து கொண்டே உருது அகாதமியை கருணாநிதி அறிவித்தது போல) என்பதற்காக உ.பி. மாநிலத்தில் உருதுவை இரண்டாம் ஆட்சி மொழியாக காங்கிரஸ் கட்சியினரும், முலாயாம் சிங் யாதவும் அறிவித்தனர். அதைச் சாக்கிட்டே இந்து மதவெறியர் பல கலவரங்களை நடத்தி எண்ணிறந்த முஸ்லீம்களைக் கொன்றனர்.

பெங்களூர் தொலைக்காட்சியில் 10 நிமிடம் உருதுச் செய்தியறிக்கை ஒளிபரப்பியதற்காக, காவிரியை முன்னிட்டு தமிழர்களை எதிர்த்து வந்த கன்னட இனவெறி இந்து வெறியாக மாற்றப்பட்டு கலவரம் நடந்து பல முசுலீம்கள் கொல்லப்பட்டனர்.

இப்படித்தான் வளமையும் பாரம்பரியமும் கொண்ட உருது மொழி ஒரு நூற்றாண்டு காலத்தில் மெல்ல மெல்ல சாகடிக்கப்பட்டு வருகிறது. உருதுவை முசுலீம் மொழியாக்கியது போல இந்து, முசுலீம், சீக்கியர் என அனைத்து பஞ்சாபியராலும் பேசப்பட்ட பஞ்சாபி மொழியை சீக்கிய மொழியாக்கியதும் இந்து மதவெறியர்களே. கணக்கெடுப்பில் இந்துக்களை இந்திதான் தாய்மொழி என அறிவிக்க வைத்தது, பஞ்சாபி மொழியின் வரிவடிவமான குர்முகியை நசுக்கி தேவநாகரியைப் புகுத்தியது — இவற்றின் மூலம் தமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டனர். அதேபோல காஷ்மீர் இந்துக்களின் தாய்மொழியாக இந்தியை அறிவிக்க வைத்து, காஷ்மீர் மொழி முசுலீம்களுக்கானது என மாற்ற முனைபவர்களும் இவர்கள்தான். காலனியக் காலந்தொட்டே இந்தியைத் தேசிய மொழியாக்குவதற்கு இந்து மதவெறியர்கள் செய்த அயோக்கியத்தனங்களுக்கு அளவில்லை.

எனவே பல கோடி மக்கள் பேசும் உருது மொழிக்கு உரிய தகுதிகள் உரிமைகள் வழங்கப்பட வேண்டும். சலுகைகள் ஏதும் இல்லாமல் சாகடிக்கப்படும் நிலையில் கூட உருதுவுக்குரிய சலுகைகள் நீக்கப்பட வேண்டும் என்று இந்து

www.padippakam.com

## கடலூரில் திடீர்க் கோவில்கள்



கடலூர் மாவட்டத்தின் போக்குவரத்து அதிகமுள்ள சாலைகளில் சமீப காலமாக திடீர்க் கோவில்கள் பரவி வருகின்றன. முதலில் ஒரு புற்று தோன்றுகிறது. அப்புறம் தண்ணீர் ஊற்றி வளர்க்கப்பட்டு, பந்தல் போடப்பட்டு, பூக்கள், குங்குமம் வைக்கப்பட்டு, இறுதியில் பக்கா கோவிலாகக் கட்டப்பட்டு கும்பாபிஷேகமும் நடக்கிறது. இரும்பு உண்டியலும் கச்சிதமாக வைக்கப்படுகிறது.

ஏற்கெனவே நெடுஞ்சாலைகளில் இருக்கும் உணவகங்கள், விபச்சாரத்திற்கு அடுத்து இந்த திடீர்க் கோவில்கள் 1 கி.மீக்கு ஒன்று என இலாபம் தரும் தொழிலாய் மாறிவிட்டன. கட்டாய நன்கொடை, புறம்போக்கு அபகரிப்பு என்று ஆரம்பித்து கடைசியில் இந்துமதவெறியர்களின் கலவர ஆயுதமாய் இவை பயன்படும் என்பதில் ஐயமில்லை. பாபர் மசூதியை வைத்து பத்தாண்டு காலம் அவர்கள் ஆடிய ஆட்டத்தை நினைத்தாவது இத்திடீர்க் கோவில்களை அரசு தடை செய்ய வேண்டும்.

—செய்தி புகைப்படம்:
கடலூர் வாசகர்கள்.

முன்னணி கோருவது கடைந்தெடுத்த கயவாளித்தனமாகும். அதிலும் உருது மொழி செய்தி வாசிக்க முசுலீம்களுக்கு மட்டும் இடம் கொடுத்து, தமிழ் செய்தி வாசிப்பிலும் முசுலீம்களுக்கு இடம் கொடுக்கலாமா என இந்து முன்னணி கேட்கிறது. அதாவது தமிழர்களில் முசுலீம்கள் கிடையாது என்பதே அதன் சாரம். இந்தி எதிர்ப்பில் வீரம் செறிந்த தமிழ் மக்களின் போராட்டத்தையடுத்து, இங்கே இந்தி பருப்பு வேகாது எனத் தெரிந்து, தமிழ் மொழியே இந்து மொழிதான், தமிழர்கள் இந்துக்கள்தான் என்று காட்டி, முசுலீம்களுக்கு இங்கே இடமில்லை என்று... மொத்தத்தில் பார்ப்பனியத்தின் இலக்கணத்திற்கு வரலாற்று ரீதியான ஒரு பொழிப்புரை.

முடிவுரையை நாம் எழுதுவது எப்போது?

* * *

*''நாடு முழுவதிலும் எங்கெல்லாம் ஒரு மசூதி அல்லது ஒரு முசுலீம் பேட்டை இருக்கின்றதோ, அந்தப் பகுதியை உண்மையில் தமக்கே சொந்தமான சுதந்திரமான பிரதேசமாக முசுலிம்கள் கருதுகின்றனர். ஹிந்துக்களின் ஊர்வலம் இசைக் கருவிகளுடனும் பாட்டுக்களுடனும் அவ்வழியே சென்றால், அவர்கள் தமது மத உணர்ச்சிகள் புண்படுத்தப்பட்டதாகக் கடுங்கோபம் கொள்கின்றனர். இனிய இசையைக் கேட்டுப் புண்படும் அளவிற்கு, அவர்களுடைய சமய உணர்ச்சி தொட்டால் சிணுங்கியாக இருக்குமானால் தமது மசூதிகளைக் காடுகளுக்கு மாற்றி அமைத்துக் கொண்டு அங்கு மௌனமாகத் தொழுகை நடத்தக் கூடாதா? சாலை ஓரத்தில் ஒரு கல்லை நட்டு அதற்கு வெள்ளையடித்து, அதனைத் தொழுகைத் தலம் என்று அறிவித்துவிட்டு, அங்கு இசை பாடப்படுவது தமது தொழுகையைக் கலைப்பதாகும் எனக் கூப்பாடு போடுவானேன்?''*

- ஆர்.எஸ்.எஸ்.-இன் இரண்டாவது தலைவர் கோல்வால்கர், **'ஞானகங்கை'** இரண்டாம் பாகம் - 170.

மசூதிக்கு முன்னால் நடக்கவோ, பாடவோ, மேளம் அடிக்கவோ, ஊர்வலம் நடத்தவோ இந்துக்களுக்கு உரிமை கிடையாதென்றால் இந்நாடு இந்துஸ்தானா இல்லை பாகிஸ்தானா என்று இந்து மதவெறியர்கள் அடிக்கடி உரிமைக்குரல் எழுப்புவது வழக்கம். மசூதிகளின் தொழுகைக் காலத்தோடு பிரச்சினை இல்லாமல் நல்லிணக்கத்தோடு இயங்கி வந்த மக்களிடையே - இல்லாத ஒரு பிரச்சினையை ஏற்படுத்தி, முசுலீம் எதிர்ப்புக் கலவரம் நடத்துவதே அவர்கள் நோக்கம். அதை பல இடங்களில் ஆண்டு தோறும் செய்தும் வருகிறார்கள்.

முதலில் மசூதிகள் பிரபலமான, பரபரப்பான தெருக்களிலும், சந்தைகளிலும், வணிக முக்கியத்துவம் மிகுந்த இடங்களில் இருப்பது உண்மைதான். காரணம், அவ்வட்டாரத்தில் கணிசமான முசுலீம்கள் வாழ்வதும், அதிலும் வணிகர்களாக இருப்பதும், தமது வேலை நேரத்தில் குறிப்பாக வெள்ளிக்கிழமை தொழுகைக்கு வந்து போக வசதியாக இருக்கவும்தான் அப்படி கட்டப்படுகின்றன. வேறு எந்த உள்நோக்கமும் இல்லை.

அதே சமயம் மசூதிகள் முன்பு மாணவர்கள், தொழிலாளர்கள், பல்வேறு அரசியல் கட்சிகள் ஊர்வலமாய்ப் போகிறார்கள். ஏன், கோவில் திருவிழாக்கள் கூட இடையூறின்றிச் செல்லுகின்றன. மசூதி அருகே பொதுக் கூட்டங்கள் நடப்பதும், பாங்கு ஓதும் நேரம் ஓரிரு நிமிடம் அமைதி காப்பதும் தமிழகத்தில் இயல்பான காட்சிகள்தான். இதனாலெல்லாம் எங்கும் கலவரம் ஏற்பட்டதில்லை. 1980-களில் தோன்றிய இந்து முன்னணி, மசூதி முன்பு விநாயகர் ஊர்வலத்தை வம்படியாக நடத்திய போதுதான் இக்கலவரங்கள் ஆரம்பித்தன. சரியாகத் தொழுகை நேரத்தில் ஊர்வலம் செல்வது, ''துலுக்கனை வெட்டு, துலுக்கச்சியைக் கட்டு, அல்லாவுக்குக் குல்லா போட்டு அரேபியாவுக்கு அடிச்சுத் துரத்து, இந்த நாடு இந்து நாடு இல்லேன்ற துலுக்கன் யாரு'' போன்ற 'இனிய இசை மொழிகளை'க் கூவுவது இவற்றினால்தான் தகராறுகள் ஆரம்பித்துக் கலவரங்களாய் முடிகின்றன.

பம்பாய், ஹைதராபாத், சென்னை மூன்று நகரங்களிலும் ஆர்.எஸ்.எஸ். வானரங்கள் நடத்தும் விநாயகர் ஊர்வலங்கள் மசூதி வழியாகச் சென்று முசுலீம் மக்களைத் தாக்குவதற்கான அவலங்களாய் மாறிவிட்டன. தமிழகத்தின் ஏனைய நகரங்களிலும் இந்த நோய் திட்டமிட்டுப் பரப்பப்படுகிறது. எனவே மசூதி முன்பு ஊர்வலம் நடத்தும் இந்து மதவெறி அமைப்புக்களை முழுமையாகத் தடை செய்யும் போதுதான் இந்த அராஜகங்களுக்கு முடிவு கட்ட முடியும். பெரும்பான்மை இந்துக்களின் ஏகபோகப் பிரதிநிதிகள் என உரிமை கொண்டாடும் சிறு கும்பலான பார்ப்பன - இந்து மதவெறி அமைப்புக்களை தனிமைப்படுத்தி முறியடிப்பது உழைக்கும் மக்களின் கடமையாகும்.

மசூதியை வைத்து உரிமைக்குரல் எழுப்பும் இவர்கள்தான் அக்கிரகாரம், ஊர், தேரோட்டம் போன்றவற்றில் இன்று வரை தாழ்த்தப்பட்ட மக்கள் பங்கேற்க அனுமதி மறுக்கிறார்கள். கேவலம், தாழ்த்தப்பட்ட மக்களுடன் இணைந்து தேரை இழுக்க முடியாது என கண்டதேவியில் இரண்டு ஆண்டுகளாய் நிறுத்தப்பட்டிருக்கும் மரத்தேர் இந்த மரமண்டைகளின் யோக்கியதைக்குச் சமீபத்திய சான்று.

— தொடரும்

www.padippakam.com

## நூல் அறிமுகம்: ‘சமபந்தி அரசியல்’

# எச்சிலைக்குள்ளும் இருக்குதடா சாதி

“சமைக்கறது ஒரு கலைன்னா பந்தி பரிமாறுது - அதைவிடப் பெரிய கலை” என்ற நண்பரிடம் “ஆமாம் இது அதைவிடப் பெரிய அரசியல்” என்றவுடன் ஆச்சரியமாகிப் போனார். “என்னங்க சோறு திங்கறதுல கூடவா அரசியல்” என்று நான் காட்டிய புத்தகத்தை வாங்கிப் போய்ப் படித்துவிட்டு வந்த நண்பர் அதிர்ச்சியுடன் “என்னங்க இது மகா அயோக்கியத்தனமா இருக்கு. உக்காந்து சோறு திங்கறதுல கூட இவ்வளவு உள் விளக்கம் பாத்துருக்கானுவ” என்று அசந்து போனார்.

இந்த மகா கேவலத்தைத்தான் பண்பாடு, பழக்க வழக்கம் என்று தலையில் வைத்துக் கொண்டு ஆடுகிறது தமிழகம் என்பதை வேதகாலம் தொடங்கி இன்றைய விஞ்ஞான யுகம் வரை பந்தியில் உட்கார்ந்து யார் யாருடன் சாப்பிடலாம், எந்தச் சாதி, தொழில் புரிவோருடன் சமமாக உட்கார்ந்து சாப்பிடக்கூடாது என்பதை ஒரு சட்டதிட்டமாகக் கடைப்பிடித்து வரும் தமிழகத்து இந்து மதப் பண்பாட்டுக் கேவலத்தை தொகுப்பான நடைமுறை ஆதாரங்களுடன் படம் பிடித்துக்காட்டுகிறது. “சமபந்தி அரசியல்” என்ற சிறிய நூல்.

ஆ. சிவசுப்பிரமணியன் என்பவர் எழுதியிருக்கும் இச்சிறுநூல் தமிழக சமுதாயத்தில் உணவு விசயத்தில் சமைப்பது, அதை பரிமாறுவது, முக்கியமாக உடன் இருந்து உண்பது போன்றவற்றிலெல்லாம் ஆதிக்கச் சாதிகளின் அடக்குமுறை ‘ரச’வாதம் புரிவதையும், பந்தி எனும் வரிசையிலிருந்து உழைக்கும் மக்களை, குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களை ஒதுக்கி வைக்கும் சமூகக் கொடுமையை காலவாரியாகப் பட்டியலிட்டுக் காட்டுகிறது.

இந்த சமையல்கட்டுப் பெருச்சாளிகளுக்கு எதிராக “சமபந்தி” என்பது ஒரு எதிர்ப்பாக உருவாகி எப்படி இன்றைய அரசியல் நிலைமைகளில் கேலிக்கூத்தாகச் சீரழிந்துள்ளது என்ற வரம்பிற்குள் நின்று விவரங்களை நம் பார்வைக்கு வைப்பதே இந்நூலின் சாரம். தனிக்குவளை, தனிக்கிணறு, தனிச்சுடுகாடு என்று தாழ்த்தப்பட்ட மக்களை இழிவுபடுத்தும் ஆதிக்க சாதிப் பண்பாட்டுக் கொடுமைகளுக்கு எதிராகப் போராடுபவர்களைப் பார்த்து நூற்றாண்டுத் திமிருடன், “இப்ப என்னாங்குற?” என்று தனது ‘மெனு தர்மங்களை’ எடுத்துக் காட்டுகிறது மனுதர்மம். பந்தியில் விலக்கப்பட வேண்டியவர்கள் என்ற தலைப்பில் மனுதர்மம் பட்டியலிடுகிறது இப்படி (நூல் பக்: 4):

“சாதிவிட்டுத் தாழ்ந்த குலத்தில் பெண் எடுத்தவன், விதவையை மணந்து பிறந்த பிள்ளை (3:155)”

“திருடன், ஐம்பெருங்குற்றங்களியற்றியவன், பேடி, நாஸ்திகன் (3:150)”

“யானை, குதிரை, ஒட்டகம், காளை இவற்றைப் பழக்குவோன், கூலிக்குப் பிணம் தூக்கி (3:166)” இப்படி நீள்கிறது பட்டியல்.

“சோறு தின்ன உட்கார்ந்தாலும் உன்னைச் சும்மா விடமாட்டேன்என்று நமது சோற்றிலும் கை வைக்கும் இந்த ‘இந்து தர்மத்தை’ சோறு தின்னும் யாரும் விட்டு வைக்க முடியுமா?

வசிட்டர் வாயால் பிரம்மரிஷி பட்டம் என்பதை வரித்துக் கொள்ளத் துடிக்கும் ‘சூத்திர கனவான்களை’ச் சோற்றால் அடிக்கிறான் வசிட்டன், இப்படி: “சூத்திரன் வழங்கிய உணவு வயிற்றிலிருக்கும் நிலையில் இறந்து போனவன் (பிராமணன்) மறுபிறப்பில் பன்றியாகப் பிறப்பான் அல்லது சூத்திரக் குடும்பத்தில் பிறப்பான்” (நூல் பக்:4) அப்படியானால் இப்போது தெருவில் திரியும் பன்றிகள் எல்லாம் பார்ப்பனர்களா என்ற சந்தேகத்தை யாரிடம் கேட்டுத் தீர்ப்பது?




இந்து மதத்தில் இருந்தால்தானே இந்த இழிவு என்று கிறித்துவத்துக்கு மாறினாலும், அரிசியிலிருந்து அப்பத்திற்கு மாறினாலும் ஆதிக்கச் சாதியின் ‘நற்கருணை’ கிடைக்காது என்பதற்கு ஒரு சம்பவம்:

“திருநெல்வேலி மாவட்டத்தில் நாடார் உபதேசி ஒருவரும், வெள்ளாள உபதேசி ஒருவரும் ஒன்றாக மறைப் பணியாற்றச் சென்றனர். வெள்ளாள உபதேசியாரின் வீட்டிற்கு இருவரும் சென்றவுடன் நாடார் உபதேசிக்கு மாட்டுத் தொழுவத்தில் உணவு பரிமாறப்பட்டது.” (நூல் பக்17)

“சென்னை வேப்பேரி பகுதியிலுள்ள தேவாலயத்தில் ஆதிதிராவிட கிறித்தவர்களுக்கும், உயர்சாதிக் கிறித்தவர்களுக்கும் தனித்தனி நாட்களில் ‘திவ்ய நற்கருணை’ வழங்கப்பட்டது (நூல் பக்: 16). சாதியப் படிநிலை பாரபட்சம் விசயத்தில் இந்துத்துவ மடப்பள்ளிகளோடு கிறித்துவ திருப்பலிகளும் “ஒன்றே தீண்டாமை வேறே மதம்” என்று ஒன்று கலந்த வரலாறு மதம் மாறுவதால் பிரச்சினை தீராது என்பதை ஆதாரங்களுடன் சொல்கிறது.

இதற்கு மாறாக, கேரளத்தில் நாராயண குரு, தமிழ் நாட்டில் இராமலிங்க அடிகள் போன்றோர் சமபந்தியை வலியுறுத்தி நடத்திக்காட்டியதையும், சமயங்கள் என்ற முறையில் சீக்கியமும், இசுலாமும் மதவிழாக்களில் இதை அமுல்படுத்தியதையும் ஆசிரியர் அறியத் தருகிறார்.

விடுதலை இயக்க காலகட்டத்தில் காந்தி தீண்டப்படாத மக்களை உள் இழுக்க ‘ஹரிஜன சேவை’ ‘சமபந்தி போஜனம்’ என்று வாய்ச்சவடால் அடித்தாலும் இதனால் காங்கிரசின் ஆதிக்க சாதியவாதிகளின் கடும் கண்டனம் எழவே, காந்தியின் சுயநலம் வெளிப்பட்டது. “ஒருவர் மற்றவருடன் சேர்ந்து சாப்பிட மறுப்பதை நான் ஒரு பாவமாகக் கருதவில்லை, அதுபோல சமபந்தி போஜனத்தை ஆதரிப்பதையும் பாவமாகக் கருதவில்லை” (நூல் பக் 21) என்று தடியைத் திருப்பிப் போட்டார்.

காங்கிரசுடன் இது குறித்து கருத்து வேறுபாடு ஏற்பட்டுப் பிரிந்து வந்த ஈ.வே.ரா. பெரியார் தலைமையில் திரண்ட சுயமரியாதை இயக்கத்தார் சமபந்தி

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3 செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!

www.padippakam.com

PUTHIYA KALACHAARAM
(TAMIL MONTHLY)

REGISTERED WITH THE REGISTRAR OF NEW PAPER
FOR INDIA UNDER NO. 42647/87

Reg. No. TN/Chief PMG-303 / 2000

போராட்டங்களில் அக்கறை காட்டியதையும், குறிப்பாக அன்றைய பொதுவுடமைக் கட்சி தஞ்சை மாவட்டத்தில் திட்டமிட்ட ரீதியில் கூலி உயர்வுப் போராட்டத்துடன் பண்பாட்டு ஒடுக்குமுறைக்கு எதிராக சமபந்தி உள்ளிட்ட பலவகைப் போராட்டத்துடன் கட்சி உறுப்பினர்கள் உணவு உண்ணும் விசயத்தில் தீண்டாமைக்கெதிராகத் தமது வாழ்க்கையிலேயே மேற்கொண்ட நடைமுறைகளையும் சுருக்கமாக அறியத் தருகிறது நூல்.

தென்மாவட்டச் சாதிய ஒடுக்குமுறைக்கெதிரான கலவரத்திற்குப் பிறகு கருணாநிதி அரசு சமத்துவபுரம் கட்டுவதுபோல அன்று மீனாட்சிபுரம் கலவரத்திற்குப் பிறகு எம்.ஜி.ஆர். சமபந்தி போஜனம் என்பதைச் சடங்குத்தனமாக நடத்தியதையும், அதையும் கூட அஹோபில மடாதிபதி ஸ்ரீமத் அழகியசிங்கர் "கோயில்களில் சமபந்தி போஜனம் சரியல்ல, இதனால் கோயில் களங்கப்படுத்தப்படுகிறது" (நூல்: பக் 28) என்று விமரிசித்த செய்தியும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக அன்றைய காஞ்சிமட ஜகத்குரு "பேசாமல் அனைவரும் ஸ்வயம்பாகம் (தானாக சமைத்துச் சாப்பிடுவது) மேற்கொள்வது சரி" என்று பல்லிளித்தபடியே தனது பார்ப்பனச் சாதிவெறியைக் கக்கியதையும் இந்நூல் நம் நெஞ்சில் நெருப்பாய் விதைக்கிறது.

அரசு சமபந்தி போஜன சடங்கு நடத்தினாலும், அருள் உள்ளம் கொண்டோர் மேற்கொண்டாலும் ஆதிக்கச் சாதிகளின் ஆணிவேரான பொருளாதார, அரசியல் அதிகாரத்தைப் பறித்தெடுக்காமல் நிலைமை மாறாது என்பதேயே வரலாற்று விவரங்கள் உணர்த்துகின்றன. "ஒரே பண்பாடு ஒரே நாடு" என்று வெறிக் கூச்சலிடும் இந்துமதவெறியர்களைப் பார்த்து "சாப்பிடுவதிலும் கூட சாதி பார்க்கும் போது எங்கடா ஒரே பண்பாடு?" என்று கேட்க வைக்கும் சிந்தனையைத் தூண்டுவதே இச்சிறிய நூலின் சிறப்பு.

• துரை. சண்முகம்

நூல் விலை: ரூ. 5.00

வெளியிட்டோர்:
*இளைஞர் வெளியீடு, தூத்துக்குடி - 8*

நூல் கிடைக்குமிடம்:
*கீழைக்காற்று வெளியீட்டகம்*
*10, அவுலியா சாகிபு தெரு,*
*எல்லீசு சாலை,*
*சென்னை - 600 002.*
*போன்: 8412367*

(அஞ்சலில் பெற நூலின் விலையுடன் ரூபாய் 3 சேர்த்து அனுப்பவும்.)

# போலி சுதந்திர தினத்தில் சமபந்தி!

"ஆலயம் சாமி அமைத்தவர் யாரடி தோழி,
மக்கள் அறிவை திருட்டாக்கி ஆள நினைப்பவர் தோழா!"

பாவேந்தரின் வரிகளை நினைவுகூற வைக்கிறது ஆகஸ்டு 15-இல் நடக்கும் சமபந்திக் கேலிக்கூத்து. அரசு ஆணைப்படி தமிழகத் திருக்கோவில்களில் நடைபெறும் சமபந்தி போஜனம் எந்தக் கட்சி ஆண்டாலும் நடைபெறுகின்ற விளம்பர மோசடியாகும்.

நடைபெறும் கோவில்களில் அன்று மட்டும் பொது விருந்தும், சிறப்பு வழிபாடும் உண்டு. அந்தந்தப் பகுதியில் உள்ள ஆளும் கட்சிப் பிரமுகர்கள் அல்லது அரசு அதிகாரிகள் தலைமையில் சமபந்தி நடைபெறும். பொதுமக்கள் மற்றும் கட்சித் தொண்டர்களும் நிரம்பி வழிவார்கள். அரசு ஆணை அடிப்படையில் அறநிலையத் துறையின் ஆணையர் இதற்கான உத்தரவை எல்லாக் கோவில்களுக்கும் வழங்குவார். கோவில்களின் வருமான அடிப்படையில் அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அவ்வகையில் எல்லாக் கோவில்களிலும் சமமான போஜனம் கிடையாது. ஐந்து நட்சத்திரக் கோவில்களில் வடை பாயச விருந்து என்றால், ஐயோ பாவக் கோவில்களில் புளி - தயிர் சாதத்தோடு நின்று விடும்.

தீண்டாமைக்கெதிரான கலகமாய்க் காட்டப்படும் விருந்தில், தாழ்த்தப்பட்ட மக்கள் கணிசமாக வந்தனர் என்று கணக்கு காட்டுவது முக்கிய நோக்கம். ஒவ்வொரு கோவிலிலும் அறங்காவலர் குழுவில் ஒருவர் தாழ்த்தப்பட்டவராக இருக்க வேண்டும் என்பது சட்டம். ஏனைய காவலர்களின் கட்டளைப்படி தாழ்த்தப்பட்ட காவலர் தனது மக்களை அழைத்து வருவார். அல்லது ஆளும்கட்சி தாழ்த்தப்பட்ட தலைவர் அணிதிரட்டி வருவார். தாழ்த்தப்பட்ட அறங்காவலரின் ஒரே திருக்கோவில் பணி இது மட்டும்தான்!

கிராம, சிறுநகர கோவில்களென்றால் சமபந்தி சாதி பந்தியாகவே இருக்கும். வட்டார மேல்சாதியினர் முன்னிலை வகிக்க, தாழ்த்தப்பட்ட மக்கள் கடைநிலை வகிப்பர். நகர்ப்புறங்களில் தாழ்த்தப்பட்ட மக்களை திடீரென்று அடையாளம் காண முடியாது என்பதால் வேறு வழியின்றிக் கலந்து உண்பர். எது எப்படி இருந்தாலும் சமபந்திப் புகைப்படங்கள் அடுத்தநாள் தினத்தந்தியில் பளிச்சென மின்னும். தென்மாவட்டக் கலவரங்கள் போன்ற 'விசேட' நிகழ்ச்சிகளுக்காக கருணாநிதியும், மூப்பனாரும் வெள்ளையுஞ் சொள்ளையுமாக மயிலாப்பூர் கோவிலுக்கு வருவார்கள். இவர்களுடன் சேர்ந்து அமர பளீரென்று தெரியும் வண்ணம் **கருப்பு மனிதர்கள்** தெரிவு செய்யப்படுவார்கள். சன் டி.வி.யில் இரண்டு நாளைக்குத் திரும்பத் திரும்பக் காண்பிப்பார்கள்.

கோவில் நிதியிலிருந்துதான் செலவு செய்ய வேண்டுமென அரசு உத்தரவிருந்தாலும், அந்தந்த வட்டார மேல்சாதியினர் அதை விரும்புவதில்லை. அதனால் அரசே ஒதுக்கீடு செய்து செலவிடுகிறது. பந்திக்கு ஆள்பிடித்து, அமர வைத்து சாப்பிட்ட பின் விரட்டுவது வரை தாழ்த்தப்பட்ட மக்கள் ஏறக்குறைய பிச்சைக்காரர்கள் போலத்தான் நடத்தப்படுகின்றனர். முக்கியமாக சமபந்திகள் நடத்துவதற்கு அரசு கோவில்கள் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டதன் மர்மம் என்ன?

உண்மையில் சமபந்திகள் நடக்கவேண்டிய இடம் எது? மேல்சாதித் தெருக்களும், சேரிகளும்தான். மேல்சாதியினர் இடத்திற்கு தாழ்த்தப்பட்ட மக்கள் வருவார்கள் என்றாலும், மேல்சாதியினர் அதை அனுமதிப்பதில்லை. சேரிகளுக்கு மேல்சாதியினர் வரமாட்டார்கள் என்பதால் அங்கேயும் முடியாது. மேலும் இங்கிருக்கும் தனியார் கோவில்களிலும் நடத்த இயலாது என்பதால் வேறு வழியின்றி அரசு திருக்கோவில்களை தேர்ந்தெடுத்தார்கள். ஆக சமபந்தி எங்கே நடத்துவது என்பதிலேயே சமத்துவமும், நல்லிணக்கமும் வரவில்லை. ஆதிக்க சாதியினரின் உணர்வுக்கு பங்கம் வராமல் நடத்தப்படும் இச்சமபந்திகளே தீண்டாமைக்குச் சாட்சியமாய் உள்ளது. தாழ்த்தப்பட்ட மக்களின் தன்மானத்திற்கும், சுயமரியாதைக்கும் சவால் விடும் இச்சமபந்திகளை தாழ்த்தப்பட்ட மக்களும் சனநாயக உணர்வு கொண்டோரும் புறக்கணிக்க வேண்டும். அம்பலப்படுத்த வேண்டும்.

— கருத்து: இனியன், ஈரோடு

படிப்பகம்